KALKI 12.12.93

ரூ. 3.00

கல்கி



விளம்பர உலகம் :

விந்தைகளின் சங்கமம்!



பாரதிராஜாவுடன்
ஒரு சந்திப்பு



‘ஸ்டில்’லில் தெரியும் மகிழ்ச்சி, படம் பார்த்தபின் நம் மனத்தில் இல்லை!

கிழக்குச் சீமையிலே

தெற்குப்பட்டி கிராமமொன்றை அப்படியே ஜமுக்காளம் போல் சுருட்டி எடுத்து வந்து திரையில் விரித்துக் காட்டுகிறார் பாரதிராஜா. விரித்து உதறுகையில் எழும் கிராமத்து நெடி, பழக்கப்படாத மூக்குகளைத் திணறடிக்கிறது. உரையாடலின் வேகமும் மொழியின் காரமும் புறையேறச் செய்கின்றன!

ராதிகாவின் மெருகேறிய நடிப்பு, விஜயகுமாரின் கம்பீரம், நெப்போலியனின் மின்வெட்டு முரட்டுத்தனம், வடிவேலுவின் அனாயாசமான நகைச்சுவை (பரிசல்காரி காட்சிகள் நீங்கலாக) என்று பாரதிராஜா பலவண்ண இழைகளை மாற்றி மாற்றிப் போட்டுப் பின்னுகிறார். பரிசல்காரியின் வழிசலும் பாண்டியனின் ‘லீலை’களும் பட்டு ஜமுக்காளத்தில் மலிவான பித்தளை ஜரிகை இழைகள். காதல் காட்சிகளைக் கொண்டு அழகாகக் குஞ்சலம் கட்டப் போய், குருவி சிடுக்காகிவிட்டது. அவை செயற்கையாய் ஒட்டாமல் நிற்கின்றன.

கதை : புகுந்த வீட்டில் ஏறத்தாழ அடிமையாகத் துடிக்கும் ராதிகாவின் துன்பம். அவளுக்காக ஒவ்வொன்றாய் இழக்கும் அண்ணனின் பரந்த குணம். இவர்களைத் தூக்கிச் சாப்பிட்டு மேலோங்கி நிற்பதென்னவோ ராதிகாவின் புருஷனாக வரும் நெப்போலியனின் வன்மம்.

பயமுறுத்தும் அந்தப் பகையுணர்வுதான் படத்தின் ஆணிவேர். தங்கை புருஷன் செய்த சில்மிஷத்தால் மனத்தில் விழுந்த கசப்பை இப்படியா ஊதி, ஊதி வளர்த்துக் கொள்வார்! அது கிராமத்து இயல்பு என்றே ஏற்றுக் கொண்டாலும், அதன் விளைவுகள், அடுக்குத் தொடராய் வன்முறை. பள்ளிச் சிறுமியின் காலில் சூடுகோல் இழுப்பதும் மனைவியின் முடியைப் பிடித்து இழுத்துத் தள்ளுவதும், பெற்ற மகளை ஒரு உருப்படாத ஸ்திரீ லோலனுக்குக் கட்டி வைக்க முடிவு செய்வதும் அவள் மறுக்கும் போது அவளை உயிரோடு கொளுத்த முற்படுவதும்...

‘இதுதானா கிராமம்?’ என்று நாம் வருந்துகிறோம். தங்களைக் கண்ணாடியில் பார்த்துக் கொள்வது போல் இப்படத்தைப் பார்க்கும் கிராம மக்கள் அதிர்ச்சி அடைவார்களா, பெருமிதம் கொள்வார்களா...?

‘முதல் மரியாதை’க்குரிய பாரதிராஜா சிந்தித்துப் பார்க்கட்டும்.

படம் முடிந்ததும் திரையில் ஓடிய உபதேச வரிகளைப் படிக்கவோ, கேட்கவோ தியேட்டரில் ஆளில்லை என்பதை மட்டும் அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

– சீதா ரவி


பாரதிராஜாவின் டிஃபென்ஸ் - 50 ஆம் பக்கம்.

"கட்சிக் கட்டுப்பாடு காணாமல் போய் விட்டதா?"

நாஞ்சில் மனோகரன், மீண்டும் தி.மு.க.வில் சேர்க்கப்பட்டு விட்ட செய்தியை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த மாலைப் பத்திரிகைகளை மேலோட்டமாய்ப் பார்த்துவிட்டு, பேட்டிக்குத் தயாரானார் கலைஞர் கருணாநிதி. சோதனையான ஒரு காலகட்டத்திலும் அமைதியாகவும் பொறுப்புணர்வோடும் பதில்களை அளித்தார்.

கல்கி : கட்டுக்கோப்பான அமைப்பு என்று பேரெடுத்த தி.மு.க.வில் இப்போது ஏற்பட்டுள்ள பிளவுக்கு என்ன காரணம்?

கலைஞர் : ஒரு குடும்பம் என்றால், அதில் பலவிதமான விவகாரங்கள் இருக்கும். அவற்றையெல்லாம் வெளிக்காட்டாமல், அரவணைத்துக் கொண்டு போவதுதான் ஒரு குடும்பத் தலைவனின் பொறுப்பு; கடமை. கட்சி என்பதும்



அது போலத்தான். ஆனால் பிரச்னைகள் கையை மீறிப் போகும் போது அதற்கேற்பச் செயல்பட வேண்டியதுதான்.

கல்கி : அப்படியென்றால், தி.மு.க. ஒரு கட்டுக்கோப்பான அமைப்பு என்பதே ஒரு வெளித் தோற்றம்தானா?

கலைஞர்: தி.மு.க.வில் நாற்பது லட்சம் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இவர்களில் முப்பத்தைந்து லட்சம் பேரின் ஆதரவு தனக்கு இருப்பதாக 'ஒருவர்' சொன்னால் அதை நம்பி விட முடியுமா? தொண்டர்கள் முழுக்க தி.மு.க.வில்தான் இருக்கிறார்கள். தி.மு.க.வில் ஜனநாயக முறையில் கட்சித் தேர்தல்கள் நடைபெறுகின்றன. மற்ற கட்சிகள் போல, சர்வாதிகாரப் போக்கு நிலவினால், நியமனங்கள் செய்து கொண்டே போகலாம். ஜனநாயக முறையில் தேர்தல்கள் நடக்கும் போது சில அசம்பாவிதங்கள் ஏற்படக் கூடும். ஒன்றிய அளவிலும், மாவட்ட அளவிலும் தேர்தலில் தோல்வியடைந்தவர்களையும், ஒருசில இடங்களில் வெற்றி பெற்றவர்களையும் ஒருவர் கங்கணம் கட்டிக் கொண்டு ஒன்றுதிரட்டி, கட்சிக்குள்ளே விவகாரம் செய்து கொண்டிருந்தால், அதைக் கண்டுபிடிப்பது கஷ்டமா? விழித்துக் கொண்டு நடவடிக்கை எடுத்திருக்கிறோம். இத்தகைய நடவடிக்கைகளால், கட்சியில் கட்டுப்பாடு இல்லை என்று சொல்லி விட முடியுமா? கட்சியில் கட்டுப்பாடு நிலைநாட்டப்படுகிறது என்றுதான் இதற்குப் பொருள்.

கல்கி : கட்சியைப் பிளக்க, உளவுத் துறை சதி செய்வதாகச் சென்ற முறை எங்களுக்கு பேட்டியளித்த போது கூறினீர்கள். அப்படியானால், உளவுத் துறையின் ஊர்ஜிதமாகாத தகவலை நீங்கள் எப்படி ஏற்றுக் கொண்டீர்கள்?

கலைஞர் : உளவுத் துறை, கழகம் பற்றிய சில தவறான தகவல்களைப் பத்திரிகைகள் மூலம் விதைத்து, தொண்டர்கள் மத்தியில் குழப்பம் விளைவிக்கிறது என்ற என் கருத்தில் மாற்றம் ஏதும் இல்லை. அதே நேரம், உளவுத் துறை ஒரு விஷயத்தை ஆராய்ச்சி செய்து சொல்லும் போது, அதை அலட்சியப்படுத்த முடியாது.

கல்கி : கோபால்சாமியின் நன்மைக்காக, விடுதலைப் புலிகள் இப்படிப்பட்ட ஒரு சதித் திட்டத்தை நிறைவேற்றுவார்கள் என்று நீங்கள் நம்புகிறீர்களா?

கலைஞர் : முதலில், நான் புலிகள் மீது சந்தேகப்பட

– கலைஞர் பதிலளிக்கிறார்



வில்லை என்றுதான் கூறினேன். ஆனால், இப்போது சில விஷயங்களைப் பார்க்கும் போது சந்தேகப்படுகிறேன். அந்தச் சதித் திட்டம் நிறைவேற்றப்படுமானால், ஒரு தமிழனுக்காக, ஒரு தமிழனைத் தமிழனே கட்டுக் கொன்றதாக அல்லது கொலை செய்ததாய் ஆகும்.

கல்கி : மாநில அரசிடமிருந்து, இது விஷயமாய்க் கடிதம் வந்தவுடன், கோபால்சாமியிடம் விளக்கம் கேட்டிருக்கலாமே! அல்லது கூப்பிட்டுப் பேசியிருக்கலாமே!

கலைஞர் : காங்கேயத்தில் நடந்த கூட்டத்தின் போதுதான் கடைசியாக நான் கோபால்சாமியைப் பார்த்தேன். ராணிப்பேட்டை பிரசாரத்தின் போது நடந்த வன்முறையில் கார் அடிபட்ட போதுகூட, கட்சியின் தேர்தல் பணிச் செயலாளரான அவர், என்னை வந்து சந்திக்கவேயில்லை. மாநில அரசிடமிருந்து அப்படி ஒரு தகவல் வந்ததும், அதனை அலட்சியப்படுத்தி, தாமதிக்கிற ஒவ்வொரு மணி நேரமும் ஆபத்தானது என்று நானும் பேராசிரியரும் கருதியதால், உடனடியாய்ப் பாதுகாப்பை ஏற்றுக்கொண்டேன். அப்படிச் செய்யாமல், கோபால்சாமியிடம் விளக்கம் கேட்டுவிட்டுப் பாதுகாப்பை ஏற்பதா, இல்லையா என்று பதில் சொல் கிறேன் என்றா சொல்ல முடியும்? விஷயத்தைப் பத்திரிகைகளுக்குச் சொல்லாமல் நான் மூடிமறைத்து விட்டாலும், எனக்கு அரசாங்கம் பாதுகாப்பு அளித்துள்ள விஷயம் வெளியே தெரியாமலேயா போய் விடும்? அப்போது நான் பத்திரிகைகளுக்கு விளக்கம் கொடுத்துத்தானே ஆகவேண்டும்?

கல்கி : இந்த விஷயத்தை நீங்கள் வெளி விட்ட போது, இதனால் ஏற்படக்கூடிய பின் விளைவுகளைச் சரியானபடி கணிக்கத் தவறி விட்டீர்களா?

கலைஞர் : இந்தக் கடித விஷயத்தை கோபால்சாமி இப்படிப் பயன்படுத்திக் கொள்வார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. இந்த விஷயத்தைக் கேள்விப் பட்டதும், காங்கிரஸுடன் கூட்டுச் சேர சதி, சுப்பிரமணியசாமியின் சதி என்றெல்லாம் அறிக்கை விட்டார் அவர். நான் சுப்பிரமணியசாமியைச் சந்தித்து ஏழெட்டு வருடங்களாகிறது. கிட்டத்தட்ட கட்சித் தேர்தல் முடிந்ததிலிருந்தே, சிலர் கட்சியை விட்டு வெளியேறக் காரணம் தேடிக் கொண்டிருந்தார்கள்.

கல்கி : ஆனால், எதிரணியினரின் குற்றச்சாட்டே, நீங்கள் ஸ்டாலினை தலைமைப் பதவிக்குத் தயார்ப் படுத்திக் கொண்டு வருகிறீர்கள் என்பதுதானே?

கலைஞர் : என் பதவிக் காலம் இன்னும் இரண்டு வருஷமோ என்னவோ இருக்கிறது. மறுபடியும் தேர்தல் வரும். அப்போது என்னை எதிர்த்து என் மகன் போட்டி விடப் போகிறானா? இல்லை மாறன்தான் போட்டி போடப் போகிறாரா? அதெப்படி, அப்படியே அவர்களுக்குத் தலைமைப் பதவியைத் தூக்கிக் கொடுத்து விட முடியுமா என்ன?

பெரியார் பேசும் கூட்டங்களில், அண்ணா அதிகம் பேச மாட்டார்; அண்ணா கலந்து கொள்ளும் கூட்டங்களில், நாங்கள் அதிகம் பேச மாட்டோம். அப்படி தலைமைக்குக் கட்டுப்பட்டு வளர்ந்தவர்கள் நாங்கள். ஒரு தலைவருக்குப் பிறகு, ஜனநாயக முறையில், யார் வேண்டுமானாலும் தலைவராக வரலாம் - ஆனால் அந்தத் தலைமை இருக்கும்போதே அதற்கு ஊறு விளைவிக்கும்படி ஒருவர் நடந்து கொண்டால் கட்சியில் கட்டுப்பாட்டை எப்படிச் செயல்படுத்த முடியும்? மேலும், தி.மு. கழகத்தில் தலைவர் பதவி மட்டும்தானா இருக்கிறது? பொதுச் செயலாளர், பொருளாளர் பதவியெல்லாம் கூட இருக்கிறதே. தலைவர் பதவியே இல்லாத சூழ்நிலையில், நான் முதலமைச்சராக இருந்த போது, பொதுச் செயலாளராய் நான் இருக்க வேண்டும் என்று எல்லோரும் கூறிய போது, நெடுஞ்செழியனும் பொதுச் செயலாளர் பதவிக்கு ஆசைப்பட்டதால், அவரைப் பொதுச் செயலாளராக்கி விட்டு, தலைவர் பதவியை

உருவாக்கி, நான் பொறுப்பேற்றுக் கொண்டேன். அது போலத் தேவைப்பட்டால், பதவிகளை ஏற்படுத்திக் கொள்ளலாமே! அந்தப் பதவிகளைப் பங்கிட்டுக் கொள்ளலாமே! பதவிக்காலம் முடிந்த பின்னர், பென்ஷன் பெறும் எம்.பி. பதவியில்தானே கோபால்சாமியும் இருக்கிறார்?

கல்கி : உங்கள் குடும்பத்தினர் கட்சியில் இருப்பதுதான் மாபெரும் குற்றச்சாட்டாக உள்ள நிலையில், அவர்களை ஒதுங்கி இருக்கும்படிக் கூற நீங்கள் எப்போதாவது நினைத்ததுண்டா?

கலைஞர் : அவர்களை அப்படி ஒதுக்கி வைக்க எனக்கு என்ன உரிமை இருக்கிறது? அவர்கள் கட்சிக் கட்டுப்பாட்டை மீறினார்கள் என்றால், நடவடிக்கை எடுக்கலாம். அவர்கள் ஒருவருக்கும் தெரியாமல் சிலோன் சென்றார்களா? கட்சிக் கட்டுப்பாட்டை மீறி போஸ்டர் ஒட்டி, பொதுக் கூட்டங்கள் நடத்தினார்களா? செயற்குழுவில் மூன்று முறை மன்னிப்புக் கடிதம் கொடுத்தார்களா? விடுதலைப் புலிகளுக்கு வீட்டில் பாதுகாப்பு கொடுத்தார்களா? எந்த கட்சிக் கட்டுப்பாட்டை மீறினார்கள்? மு.க. முத்து, அ.தி.மு.க.வுக்குப் போனார். நான் என்ன செய்து விட முடியும்?

கல்கி : எதிர் அணியினர், உங்களுக்குக் கட்சியை விட, குடும்பம்தான் முக்கியம் என்றுதானே பேசுகிறார்கள்!

கலைஞர் : அவர்கள் பேசவில்லை, தமிழ்நாட்டு அரசாங்கத்திடமிருந்தும், அயல்நாடுகளிலிருந்தும் வரும் பணம் அவர்களைப் பேச வைக்கிறது.

கல்கி : மதுராந்தகம் ஆறுமுகம், தி.மு.க. அறக்கட்டளையிலிருந்து ஏராளமான பணம் எடுக்கப்பட்டுள்ளது என்று குற்றம்சாட்டியுள்ளாரே?

கலைஞர் : 'தி.மு.க. அறக்கட்டளையின் விதிமுறைகளின்படி, ஐம்பதினாயிரம் ரூபாய்க்கு மேற்பட்ட செலவு என்றால், டிரஸ்ட் நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றித்தான் பணம் எடுக்க முடியும். சமீபத்தில் அப்படி செய்யப்பட்ட செலவுகளுக்கு ஒப்புதல் அளித்து, மதுராந்தகம் ஆறுமுகமே கையெழுத்துப் போட்டிருக்கிறார்.

கல்கி : கோபால்சாமிக்குக் கிடைக்க வேண்டிய மத்திய மந்திரிப் பதவி, உங்கள் தலையீட்டால், மாறனுக்குத் தரப்பட்டது என்ற குற்றச்சாட்டு எவ்வளவு தூரம் உண்மை?

கலைஞர் : அப்பட்டமான பொய். கட்சியில் கோபால்சாமியை விட மாறன் சீனியர். தவிர, ஆரம்ப காலம் முதலே, தேசிய முன்னணியின் செயலாளர்களில் மாறனும் ஒருவர். வி.பி. சிங் பிரதமர் பொறுப்பேற்றதும், எனக்கு டெலிபோன் செய்து, ''மாறனை நான் மந்திரி சபையில் எடுத்துக் கொள்ளுகிறேன்'' என்று கூறினார். ஆனால், 'இந்த மந்திரி சபை எத்தனை மாதம் நீடிக்குமோ என்ற சந்தேகமான சூழ்நிலையில், 'நான் மந்திரியாக விரும்பவில்லை' என்று மாறன் கூறி விட்டார். பேராசிரியர்தான், மாறன் மந்திரி சபையில் இடம்பெற்றால் தமிழகத்துக்கு நன்மை செய்ய வாய்ப்பு உண்டு என்று கூறி, மாறனைச் சம்மதிக்க வைத்தார்.

கல்கி : சில மாவட்டங்களில், தி.மு.க. கட்சி அலுவலகங்கள் சர்ச்சைக்குள்ளாகி, சீல் வைக்கப்படும் நிலைமைக்குள்ளாகி விட்டனவே. அண்ணா அறிவாலயத்துக்கும் சீல் வைக்கும் அபாயம் ஏற்பட்டு விடுமா?

கலைஞர் : அண்ணா அறிவாலயம், தி.மு.க. கட்சிக்குச் சொந்தமானது அல்ல. தி.மு.க. அறக்கட்டளைக்குத்தான் சொந்தமானது. அந்தக் கட்டடத்தின் ஒரு பகுதியில் தான் தி.மு.க. அலுவலகம் இருக்கிறது.

கல்கி : பொதுக் குழுவை அண்மையில் கூட்டும் எண்ணம் உண்டா?

கலைஞர் : விதிமுறைகளின்படி தேவையான அளவில் பொதுக் குழு உறுப்பினர்கள் கையெழுத்துப் போட்டுக் கேட்டால் நாளைக்கே கூடப் பொதுக் குழுவைக் கூட்டலாம். ஆனால் நியமனப் பதவியில் இருந்தவர் கோபால்சாமி. அதிலிருந்தும் நீக்கப்பட்ட நிலையில், அவர் ஒரு சாதாரண உறுப்பினர் மட்டுமே! ஒரு கட்சி உறுப்பினர் கேட்கிறார் என்பதற்காக, எப்படிப் பொதுக் குழுவைக் கூட்ட முடியும்? அப்படிச் செய்வது, நாற்பது லட்சம் உறுப்பினர்கள் கொண்ட ஒரு கட்சியில் ஒரு தவறான முன் மாதிரியாகி விடக்கூடும்.

கல்கி : காங்கிரஸுடன் கூட்டு சேரும் சாத்தியம் உண்டா?

கலைஞர் : இதுவரை அப்படியொரு எண்ணம் இல்லை. காங்கிரஸுடன் கூட்டுச் சேரத்தான் கோபால்சாமி வெளியேற்றப்பட்டார் என்பதும் பொய்ப் பிரசாரம் தான்!

கல்கி : தி.மு.க.வின் எதிர்காலம் பற்றி?

கலைஞர் : பல கடுமையான சோதனைக் கட்டங்களைக் கடந்து வந்திருக்கிறது தி.மு.க. இப்போதும் அப்படித்தான். தி.மு.க.வின் எதிர்காலம் பிரகாசமாய் இருக்கும்.

கல்கி: வை.கோபால்சாமியின் எதிர்காலம்?

கலைஞர் : எனக்குத் தெரியாது. கழகத்தை எதிர்காலத்தில் கட்டிக் காப்பவர்களில் முக்கியமானவராக அவர் இருப்பார் என்று முன்பு நான் நம்பினேன். ஆனால் என்று எனக்குத் தெரியாமல் இலங்கை சென்றாரோ அன்றே என் நம்பிக்கை பொய்த்து விட்டது.

பேட்டி : மௌலி, ப்ரியன்

இந்திரா காந்தி 79 ஆம் வருடத் தேர்தலின் போது, காங்கிரஸ் கட்சிப் பிரசாரத்துக்கு, விளம்பர ஏஜென்சியின் உதவியை முதல் முதலாக நாடினார். போஸ்டர்களும் தினசரிகளில் முழுப் பக்க விளம்பரங்களுமாக, எதிர்க்கட்சிகள் மீது ஓரே தாக்குதல். விளைவு? காங்கிரஸின் வெற்றிக்கு விளம்பரங்களின் பங்கு மிகுதியாகக் கணிக்கப்பட்டது.

84 - ல் ராஜீவ் போட்டியிட்ட போது, மறுபடி விளம்பர யுத்தம் தொடங்கியது. இந்திராவின் மரணம் ஏற்படுத்திய அநுதாப அலையோடு, விளம்பர

விளம்பர உலகம் :

விந்தைகளின் சங்கமம்!

அலைகளும் சேர்ந்து, ராஜீவின் கட்சி ஆட்சியைப் பிடித்தது.

ஆனால் 89 - ல், அதே விளம்பரக் கம்பெனி வெளியிட்ட பாம்பும் தேளும் நெளியும் விளம்பரங்களைப் பார்த்துமே வோட்டர்கள் நெளிந்தார்கள். அதைவிட காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே பலர் நொந்து கொண்டார்கள். ஆட்சிக் குழப்பங்களோடு இதுவும் சேர, காங்கிரஸ் கவிழ்ந்து ஜனதா தளம் ஆட்சியைப் பிடித்தது!


இப்போதும் மாத்யம், க்ளாரியன் போன்ற விளம்பர ஏஜென்சிகளிடம்தான் காங்கிரஸ் பிரசார விளம்பரங்களை உருவாக்கும் பணி கொடுக்கப்பட்டிருக்கிற தாம். காரணம், கவர்ச்சிகரமான வார்த்தை களை வைத்தே வோட்டுக்களைக் குவிக்க முடியும் என்று அரசியல் கட்சிகள் நம்பத் தொடங்கிவிட்டன!

விளம்பர வாசகங்களை உருவாக்கும் காப்பிரைட்டர்கள், தலையைப் பிய்த்துக் கொண்டு எழுதி எழுதிக் கொடுக்கும் வார்த்தைகள், நாட்டின் அரசியல் தலை விதியையே நிர்ணயிக்க முடியும் என்றால், விளம்பரங்களின் மகத்தான சக்தியைப் புரிந்து கொள்ளலாம்.

இந்துஸ்தான் லீவரின் உயர் அதிகாரி இர்ஃபான் கான் சொல்கிறார் :

''பொதுவாக மக்களின் வருவாய் அதிகரித்திருப்பதும், நகர்ப்புறங்களில் மக்கள்

✱ கிராஃபிக்ஸ் ஜாலம்...







குவிவதும் விற்பனை அதிகரிக்க உதவியுள்ளன. இதற்கு ஏராளமான விளம்பரங்களும் துணை புரிந்துள்ளன. இந்த விளம்பரங்கள் போட்டா போட்டியின் உடன் விளைவு. இது காரணமாக, சோப்புகள் மற்றும் டிடெர்ஜென்டுகள், டூத் பேஸ்ட்டுகள் ஆகியவற்றைப் பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணம் பட்டி தொட்டி களில் எல்லாம் கூடப் பரவியுள்ளது.

''1980 க்குப் பிறகு, கிராமப்புறங்களில் மக்களின் வாங்கும் சக்தி உயர்ந்துள்ளது. இதைப் பயன் படுத்திக் கொள்ள முனைந்ததில், இப் போதுள்ள மொத்த வியாபாரத்தில் கிட்டத்தட்ட அறுபது சதவிகிதம் கிராமப் புறங்களில்தான் நடக்கிறது என்று கண்டோம்.''

இதைச் சாதிக்க உதவியது எது?

விளம்பரம். அதிக விளம்பரம். இன்னும் அதிக விளம்பரம்!

சில வருடங்கள் முன்பு தபால்துறை ஒரு விளம்பரம் வெளியிட்டது. முகவரியைக் கிறுக்காமல், குறைக்காமல் சரியாக எழுதுங்கள் என்று கேட்டுக் கொண்டது. ஆங்கில விளம்பரங்களில், 'உங்கள் தபால்காரர் ஷெர்லக் ஹோம்ஸ் அல்ல' என்று சொன்னார்கள். அதையே தமிழில் வெளியிட்ட போது, 'உங்கள் தபால்காரர் துப்பறியும் சாம்பு அல்ல' என்று அழகாக மாற்றினார்கள். எது புரியுமோ அதை வலியுறுத்துவதுதான் விளம்பர வெற்றியின் அடிப்படை.

இதழ்கள், வானொலி என்று மட்டுமே இருந்த விளம்பர வாய்ப்புகள், டீவி வந்த பிறகு, செர்கி புப்காவின் போல் வால்ட் சாதனைகளைப் போல் மஹா மஹா உச்சத்தை எட்டி விட்டன!

அதிலும், முதலில் குழந்தைகளின் மனதைப் பிடித்துவிட்டால், அப்புறம் குடும் பத்தையே வளைத்துப் போட்டு விடலாம் என்ற ஓர் உத்தி 'மேகி நூடில்ஸ்' விஷயத்தில் வெற்றி கண்ட பிறகு, பல விளம்பரங்கள் குழந்தைகளையே குறி வைத்து உருவாக்கப்பட்டன.

விளம்பரங்களின் வளர்ச்சியும் வேகமும், பொருள்களின் உற்பத்தியில் உருவாகும் போட்டா போட்டியும், விளம்பர ஏஜென்சிகளில் பணி புரியும் விஷுவலைசர்கள், ஆர்ட் டைரக்டர்கள், காபிரைட்டர்கள் என்று எல்லாரும் மூளையைக் கசக்கிக் கொண்டால்தான் வெற்றி காணலாம் என்ற நிலையை உண்டாக்கியிருக்கிறது.

உருவாக்கப்படும் விளம்பரம், உற்பத்தி செய்யும் தயாரிப்பாளரின் 'ஓகே' பெறுவது அத்தனை சுலபமல்ல. அவர் திருப்தி அடையும் வரை விளம்பர ஏஜென்சி படாத பாடு படவேண்டியிருக்கும். நேரம் முக்கியம். விளம்பரத்தில் வாசகங்களை மாற்றவும், எழுத்துக்களை மாற்றவும் காபிரைட்டர்களும் ஆர்ட்டிஸ்டுகளும் அலுக்காமல், சலிக்காமல் சூப்பர் வேகத்தில் பணி புரிய வேண்டும்.

''இதோ இந்தக் கம்ப்யூட்டர், டிசைன்கள் உருவாக்கவே தயாரிக்கப் பட்டது. ஆர்ட் டைரக்டர் மனதில் எப்படி

விளம்பர வடிவம் உருவாக்க நினைத்திருக்கிறார் என்பதைப் பொறுத்து எத்தனையோ விதம் விதமான வடிவங்களிலும், எழுத்துக்களிலும் விளம்பரத்தைத் தயார் செய்ய முடியும். விளம்பரத்துக்குரிய பொருளை உற்பத்தி செய்தவரை அருகில் வைத்துக் கொண்டு, அவர் கண் முன்னாலேயே அவருக்குப் பிடித்த விளம்பர வடிவத்துக்கு ஓகே வாங்கி விடலாம்!'' என்றார் 'முத்ரா' கம்யூனிகேஷன்ஸ் தாமோதரன்.

இதனால் வெட்டி-ஒட்டும் வேலை குறைச்சல். ஸ்டூடியோ வேலை குறைச்சல். நேரம் மிச்சம்!

தாமோதரன் ஒரு நிமிஷத்தில் ஒரு கார்ட்டூனை கம்ப்யூட்டரில் வரைந்து காட்டினார். கீ போர்டில் இடதுகை விரல்களால் அவ்வப்போது தட்டினார். வலதுகை, 'மௌஸ் பேடி'ல் மௌஸை நகர்த்த நகர்த்த, கம்ப்யூட்டர் ஸ்க்ரீனில் சித்திரம் உருவானது.

''இதற்கு அடோபி இல்லஸ்ட்ரேட்டர் என்கிற சாஃப்ட்வேர் (மென் பொருள்) உதவுகிறது!'' என்றார் தாமோதரன்.

இதைப் பயன்படுத்துகிறவருக்கு நிறைய கற்பனை வளம் தேவை. கம்ப்யூட்டர் திரையில் தோன்றும் வடிவத்தைப் பெரிதாக்கவும், சிறியதாக்கவும், வளைக்கவும், திருப்பவும் வசதிகள் உண்டு. திருப்திகரமான வடிவம் கிடைக்கும் வரை முயற்சி செய்யலாம். காகிதத்தில் வரைந்து வரைந்து கிழித்துப் போடும் அலுப்புக்கெல்லாம் 'டாட்டா' சொல்லி எத்தனையோ காலமாகிவிட்டது!



திரையில் உருவாக்கிய டிசைனை அருகிலுள்ள லேசர் பிரிண்டரில் காகிதப் பிரதி எடுத்துக் கொண்டு, வாடிக்கையாளர் திருப்தி தெரிவித்தால் புரோமைட் பிரதியை எடுத்து அச்சுக்குக் கொடுத்து விடலாம்.

டீவியில்தான் பார்க்கிறோமே! புலி, மோட்டார் சைக்கிளாக மாறுகிற டெக்னிக்கும் ஃபிடோ டிடோ பையன் தன்னைத் தானே வரைந்து கொள்வதும் கம்ப்யூட்டரின் அனிமேஷன் செய்கிற கைங்கரியம்தான்!

''பத்திரிகை விளம்பரத்துக்கும், தொலைக்காட்சி விளம்பரத்திற்கும் தொடர்பு இருக்குமானால் அது விற்பனையை மேலும் பெருக்கும்'' என்கிறார் கவுண்டர் பாயிண்ட் விளம்பர நிறுவனத்தைச் சேர்ந்த சுரேந்தர். உதாரணமாக, தொலைக்காட்சியில் வரும் ஹெர்பல் பௌடர் விளம்பரம். தினசரிகளிலோ, வாரப் பத்திரிகைகளிலோ அந்தப் பெண்ணின் படத்தை மட்டும் போட்டு 'மென்மை... மென்மை...'' என்று எழுதிவிட்டால், நாம் தினசரி பலமுறை காதால் கேட்கும் அந்தப் பாடலும் காட்சி அமைப்பும் இந்த ஒற்றைப்படம் மூலமே நம் நினைவுக்கு வந்து விடுகிறது. இதன் மூலம் பொருட்களின் பெயர், இசைவடிவில் நம் மனத்தில் பதிந்து விடுகிறது. இது விற்பனையை அதிகப்படுத்தும் என்பது நிரூபிக்கப்பட்ட உண்மை.

''வேலை வாய்ப்புகள் இந்தத் துறையில் பெருகிக் கொண்டு இருக்கிறது. ஆனால் கிரியேடிவ் ஆசாமிகள்தாம் இதில் தாக்குப் பிடிக்க முடியும்!'' என்கிறார் சுரேந்தர்.

''புகைப்படக் கலைஞர்கள், ஆர்ட்டிஸ்ட்டுகள், ஸ்டேஷனரி விற்பனையாளர்கள், பிராஸஸிங் துறையினர், பத்திரிகைகள், இறுதியாக வாசகர்கள் எனப்படும் வாடிக்கையாளர் எல்லாருமே விளம்பரத்தினால் பயன் அடைகிறார்கள். விளம்பரத்தினால் என்ன பலன் என்று கேட்பவர்களுக்காகச் சொல்லுகிறேன் :

''பல்வேறு தயாரிப்பாளர்களின் பொருள்கள் மார்க்கெட்டில் கிடைக்கிறது என்பதை வாடிக்கையாளருக்குச் சொல்லுவதே விளம்பரங்கள்தாம். எதை வாங்குவது என்று நிறைய சாய்ஸ் கொடுப்பதால்தான் தரமானதை, தமக்கு வேண்டும் என்பதை, தமக்குப் பிடித்ததைப் பொதுமக்கள் வாங்கும் வாய்ப்பை உருவாக்க முடிகிறது.''





''அப்படியானால் விளம்பரச் செலவையும் சேர்த்துத்தானே தயாரிப்பு விலை நிர்ணயிக்கிறார்கள் என்று கேட்கலாம். அது பொருளின் விலையில் இரண்டு பர்சென்ட்கூட இருக்காது!'' என்கிறார் சுரேந்தர்.

பத்திரிகைகள், தினசரிகளின் முதுகெலும்பு விளம்பரங்கள்தான். விளம்பரங்கள் இடம் பெறுவதால்தான் பொது மக்களுக்குக் குறைந்த விலையில் தினசரிகளும் பத்திரிகைகளும் வழங்க முடிகிறது.

விளம்பரங்களுக்கான மாடல்கள் இன்று அதிகம் தேவைப்படுகிறார்கள். ஆனால் பம்பாய் அளவுக்குச் சென்னையில் இந்த மாடல்களுக்கு ஊதியம் கிடைப்பதில்லை. யாரோ ஒரு மாடலுக்கு நிறைய ரூபாய் கொடுத்து, விளம்பரங்கள் தயாரிப்பதற்குப் பதிலாக, என் பெண்ணையோ, மருமகளையோ வைத்துப் படம் பிடித்தால் என்ன?' என்று கேட்கக் கூடியவர்களும் இங்கே இருக்கிறார்கள்! ஆனால் குவாலிட்டி? அந்த விளம்பரங்களைப் பார்த்தாலே தெரியுமே?

பொருள்களை விளம்பரப்படுத்துபவர் என்கிற நிலை போய், 'இவர் விளம்பரப் படுத்துகிற பொருள் இது' என்று இனம் கண்டு கொள்கிற நிலைக்கு மாடலிங் துறைக்கு - ஒரு கட்டத்தில் சினிமாவை விடவும் - அதிக பாப்புலாரிட்டியும், மாடலிங் செய்கிறவர்களுக் கு அபார மதிப்பும் கிடைக்கலாயிற்று. எனவே பிரபல சினிமா நட்சத்திரங்கள், படங்களுக்கு இணையாக விளம்பரப் படங்களுக்கு முக்கியத்துவம் அளிக்க விரும்பினர்.

குறிப்பாகத் திரை உலகில் புதிதாக நுழையும் பெண்கள். வந்த சூட்டில் ஒன்றிரண்டு டீ.வி விளம்பரங்களில் நடித்து விட மாட்டோமா என்பதில் பெரிதும் ஆவலாயிருக்கின்றனர்.

சமீபகால தமிழ் சினிமாவையே எடுத்துக் கொண்டால் இதற்குச் சில உதாரணங்கள் காட்ட முடியும். ரூபிணி, குஷ்பு, கௌதமி மூவரும் ஏறக்குறைய சமகாலத்தில் சினிமாவுக்கு வந்தவர்கள். அவர்கள் வந்த காலகட்டத்தில் ஓரிரு சோப் விளம்பரங்களிலும், ஷாம்பு, டீ, காப்பி விளம்பரங்களிலும் உடனே உடனே வர ஆரம்பித்து, வீடுகளில் வெகு சுலபமாக அறிமுகமாயினர்.

'கேட்டிங்களா? கேட்டிங்களா?' என்று கேட்டபடி வந்த ஹீராவுக்கு ஒரு படம் கூட போணியாகாத நிலையிலும், இல்லத்தரசிகளிடையே ஒரு கவனம் கிடைத்தது.

இது தவிர, மார்க்கெட் இல்லாத நடிகைகளுக்கும் விளம்பர உலகம் ஒரு புகலிடமாக இருப்பது, மறுக்க முடியாத விஷயம். மேலும், பரபரப்பை உண்டாக்க விரும்புவோருக்கும் இது ஒரு மிகச் சிறந்த ஊடகம். பூஜாபேடி போன்ற பம்பாய் பார்ட்டிகள், வஞ்சனையின்றி கவர்ச்சி காட்ட, புகழுக்குப் புகழும் ஆயிற்று, பணத்திற்குப் பணமும் ஆயிற்று.

இவர்கள் தவிர கவாஸ்கர், கபில், டெண்டுல்கர், காம்ப்ளி, ரமேஷ் கிருஷ்ணன், லியாண்டர் பயஸ் இப்படி யாகச் சில விளையாட்டுப் பிரமுகர்களும் விளம்பர நாயகர்களாக மாறி வரும் புதிய அத்தியாயம் எழுதப்பட்டு வருகிறது!

அதிக பட்சம் சில லட்சங்கள் வரை ஒரு விளம்பரப்படத்தில் (ஒரு குறிப்பிட்ட கால ஒப்பந்தத்தில்) நடிப்பதற்குக் கிடைக்கிறது. ஒரு முழுத்திரைப்படத்தில் நடிப் பவர்களுக்குக் கூட இத்தனை ஊதியம் கிடைப்பதில்லை (தமிழில்) என்பது கவனிக்கப்பட வேண்டிய விஷயம்.

மத்திய தரக் குடும்பங்களில் டைனிங் டேபிளும், மிக்ஸியும், டீவியும், வெட்கிரைண்டரும் இன்று மிகுதியாகப் பயன்படுத்தப்படுகின்றன என்றால், காரணம் விளம்பரங்கள். சமீபத்திய புள்ளிவிவரப்படி, நம் நாட்டில் டீவியை விட வானொலி விளம்பரங்கள் அதிக மக்களைச் சென்று அடைவதாகக் கண்டிருக்கிறார்கள். கலர் டீவி வந்த பிறகு தான் வண்ண வண்ணமான விளம் பரங்கள் பத்திரிகைகளிலும் வர ஆரம்பித்தன.

விளம்பரங்கள் இந்த நூற்றாண்டில் தவிர்க்க முடியாத பூதாகாரப் பிரகிருதி என்றே கருதும்படியாகி விட்டது. வீட்டு அம்மணியரின் இதயத்தில் இடம் பிடித்து, ஆண்களின் 'பாக்கெட்'டை காலி யாக்குவதில் வெகுதீவிரம் காட்டு கின்றன! ஆட்சியையே பிடிக்க உதவிய விளம்பரங் களுக்கு, 'பர்ஸை'ப் பிடிப்பதா பெரிய விஷயம்?

– சாருகேசி

மேலட்டை வண்ணப்படம்,
படங்கள் : கோபிநாத்.
நன்றி : 'முத்ரா'

காதலிக்கிறது தப்பா சர்?

''காதலிக்கிறது தப்பா சார்?''

- இப்படி ஒரு கேள்வியைக் கேட்டவன் என் மாணவன். மூணு வருஷங்களுக்கு முந்தி என்னிடம் படித்த நல்ல பிள்ளைகளில் ஒருத்தன்.

ரொம்ப காரியமாக என்னைத் தேடி வந்து இப்படி ஒரு கேள்வியைக் கேட்டு வைத்தான்.

அப்பாடா! எனக்கு நிம்மதி. இன்னைக்குப் பொழுதுக்கு ஒரு நல்ல அரட்டைக் கச்சேரி! 'ஆமாம்; இவனுக்கு எதுக்கு இந்தச் சந்தேகம்? ஏதோ விஷயம் இருக்கு; கொஞ்சம் ஜாக்கிரதையாப் பேசணும்' என்று அடக்கிக் கொண்டு 'ஹ்ஊம்... சொல்லு' என்றேன். அவனோ 'நீங்கள்லா சொல்லணும்; காதலிக்கிறது தப்பா?' என்றான்.

''யாரை?''

''ஒரு ஆணு ஒரு பெண்ணை...''

''பெண்ணுங் காதலிக்கிறாளோ?''

''ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் உயிராக் காதலிக்கிறாங்க.''

''யாரு, உனக்கு ரொம்ப வேண்டியவங்களா?''

''இல்லை... சார்... நானும்... எங்க... ஊர்ல.. ஒரு... பொண்ணுங்...''

அவஸ்தையுடன் இதை அவன் சொன்னாலும் சோர்ந்து கிடந்த அவன் முகத்தில் ஒரு சூரிய வெளிச்சம்!

''பொண்ணு யாரு, உனக்குச் சொந்தமா?''

''சொந்த பந்தம் இருந்தாத்தான் காதல் வருமா? அவ தமிழ்ப் பொண்ணு; அப்ப அவளுஞ் சொந்தந்தானே!'' - அவனுக்கு ஆவேசம்; எனக்குச் சிரிப்பு!

''நீ சொல்றதைப் பாத்தா அந்தப் பொண்ணு உன் சாதி இல்லை...''

''நீங்களுமா இதச் சொல்றீங்க? சாதின்னு ஒன்று இருக்கா? அது இப்ப நமக்குத் தேவைதானா சார்?''

''நான் சொல்லலை; உன் சர்ட்டிபிகேட் சொல்லுது. அதை வச்சுத்தான் நீ வசதியாப் படிச்சே; வேலையும் வாங்கியிருப்பே; அப்பல்லாம் அது உனக்கு இனிச்சிச்சி; இப்பக் காதலுக்கு முட்டுக்கட்டையா நிக்குதுன்னதும் அது தேவையான்னு கேக்குற; உன் ஒருத்தன் வசதிக்கு ஏத்த மாதிரி சட்டத்தை மாத்த முடியுமா? நீயே சொல்லு.''



''என் சர்ட்டிபிகேட்ல நானா போடச் சொன்னேன்? எங்க வீட்ல அந்தக் காலத்தில பெரியவங்க போட்டிருக்காங்க. அதும் இந்த அரசாங்கம் கேட்டிருக்கு. நான் அதை நம்பல; விரும்பல.''

''இப்ப, இந்தக் காதல் வேகத்துல நீ விரும்பாம இருக்கலாம். இப்பப் படிக்கிறவங்க, வேலை தேடுறவங்க எல்லாரும் கூடி விரும்புறாங்களே, அவுங்களை உன்னால மாத்த முடியுமா?''

பக்கம்



''மத்தவங்க விரும்புறாங்கன்றதுக்காக நாங்க எங்க காதலை இழக்கணுமா? இதென்ன சார் நியாயம்?'' - ஆத்திரத்தில் கை விரல்களைப் பிசைந்து விட்டுக் கொண்டான்.

''நியாயம் இல்லேன்னே வச்சுக்கோ. அந்தப் பொண்ணையே கட்டிக்கோ. இதுக்கு எதுக்குத் தயங்குற?''

''அதுலதான சிரமமே இருக்கு! நான் வேலை பாக்குற எடத்துக்கு வந்துரு; அங்கயே நாம கலியாணம் பண்ணிக்கிடுவோமின்னு சொல்றேன். அந்தப் பிள்ளை, நீங்க உங்க வீட்ல சொல்லி எங்க வீட்டுக்குப் பொண்ணு கேட்டு வரச் சொல்லுங்கன்றது...''

''அப்படிப் போடு. அந்தப் பொண்ணு அவுங்க வீட்ல சொல்லியிருக்கும். அந்தத் தைரியத்தில் உங்க வீட்ல சொல்லச் சொல்லுது. பரவாயில்லையே!''

''இல்லை... சார்... எங்க வீட்ல நானே சொல்ல முடியாமத் திணர்றேன்; அந்தப் பிள்ளை எப்படி....''

''ஏன் திணர்றே? சொல்லிற வேண்டியதுதானே?''

''அது... வந்து... சார், எங்க ஊரு ஒரு கிராமம். அதுல நாங்க பெரிய சாதியின்னாலும் தலைக்கட்டு கொஞ்சந்தான்; அவுங்க எங்களை விடச் சின்ன சாதிதான்; ஆனா ஆளு அம்பு அதிகம்; அதுவும் ரொம்ப வசதி; இந்தப் பிள்ளை வீடும் ரொம்ப வசதியானது. எனக்கு அந்த வசதி ஒரு பொருட்டு இல்ல; ஆனா இப்ப அதுதான் தடையா இருக்கு.''

''இந்தா, உன் மனசிலயும் பெரிய சாதி, சின்ன சாதியின்னு ஒன்று ஒளிஞ்சு கெடக்கு பாத்தியா?''

''சார்... சார்! நான் அப்படி நெனச்சு சொல்லலை; சும்மா ஒரு விளக்கம் கொடுக்கத்தான் சொன்னேன்.''

''விடு. பணந்தானே தடை? சொத்தில ஒரு சல்லி கூட வேண்டாமின்னு நீ அவுங்ககிட்ட எழுதிக் கொடுத்துட்டுப் பொண்ணைக் கட்டிக்க.''

''நான் தயாரா இருக்கேன். அதுக்கும் ஒரு தடை. அவுக வேற மதம்.''

''போச்சுடா; சாதி, மதம், பணமின்னு மூணு தடை இருக்கா? அப்போ இது கஷ்டந்தாப்பா!''

''என்ன சார்... எல்லாருஞ் சொல்ற மாதிரியே நீங்களுஞ் சொன்னா எப்படி? இந்தச் சாதி மதம்லாம் நாம நம்ம நன்மைக்காக வச்சுக்கிட்டதுதானே! அதுவே நமக்குத் தீமைனா, அது எதுக்கு நமக்கு?''

''நீ இப்ப காதல் காய்ச்சல்ல எதையும் கொட்டிக் கவுக்கிற வேகத்துல பேசுற. இப்ப உன்கிட்ட அதப் பேச முடியாது. ஒண்ணு சொல்றேன். இப்படிச் செய்யுங்களேன். உங்க ரெண்டு வீட்டாரும் உங்க கலியாணத்துக்குச் சம்மதிக்கிற வரை ரெண்டு பேருங்கலியாணமே செய்யாமக் காத்திருங்க...''

''நான் இருக்கலாம் சார்; அந்தப் பிள்ளை வீட்ல பொண்ணு கேட்டு அவுங்க சொந்தக்காரங்க நெருக்கறாங்க. இந்தப் பிள்ளையும் எத்தனை மாப்பிள்ளையத்தான் பிடிக்கலைன்னு சொல்லித் தப்பிக்கிறது?''

''அப்ப உன் விஷயத்தைச் சொல்லச் சொல்லு.''

''முடியாது சார். அவுக இந்தப் பொண்ணை வெட்டிப் பொலி போட்டிருவாங்க.''


''உன் வீட்ல உன் தங்கச்சி இப்படி ஒருத்தரக் காதலிச்சா, உங்க அப்பாவும் நீயும் என்ன செய்வீங்களோ அதை அவங்க செஞ்சிருவாங்கன்னு சொல்றயா?''

''நான்...'' - கொஞ்சம் தடுமாறியவன் ''எனக்குத் தங்கச்சி இல்ல; இருந்தாலும் நான்...'' முடிக்க முடியாமல் திண்டாடினான். அவன் திண்டாட்டத்தை நான் ரசித்துப் பார்த்து மெல்லச் சிரித்துக் கொண்டிருந்த போது அவன் ஓர் அக்னியாஸ்திரமாய் வார்த்தைகளை வளைத்து என் மீது ஏவினான்.

''ஆமா சார், இந்தக் காதல் விவகாரத்துலே இத்தனை நெருக்கடி இருக்கே; அப்புறம் எதுக்கு எங்களுக்கு அகநானூறு, காமத்துப்பாலு, கோவை உலா, தூதுன்னு நடத்திக் கெ(ா)டுத்தீங்க படிச்சாலும் அதாத்தான் இருக்கு; சினிமாப் படம் பாத்தாலும் அதாத்தான் இருக்கு; படிச்சதைப் பின்பற்றினா இடி விழுது; என்ன சார் இது?''

ஆமாம்; நான் ஏன் இதைச் சொல்லி கொடுத்தேன்...? விடை தெரியாமல் நடைபோட்டுக் கொண்டிருக்கிறேன்.

– சாலமன் பாப்பைய


அம்மா, என்னோட
டும்... டும்...
ஃபைல மட்டுமா, என்னையே ஒரு கை பார்த்துட்டாரு!
மு.க. வாழ்க!
மு.க. ஒழிக!
ஜெ. ஜெ. வாழ்க!
ஜெ. ஜெ. ஒழிக!
மு.க. வாழ்க!
எல்லாம் கருவின் குற்றம்தான்!



கல்கி



1993
டிசம்பர் 12
மலர் : 52
இதழ் : 20
ஸ்ரீமுக
கார்த்திகை 27

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா. - பாரதியார்.

பி.ஜே.பி. அடைந்த படுதோல்வி!

அரசியல்வாதிகள் முகத்தில் மட்டுமின்றி தேர்தல் கணிப்பாளர்கள் முகத்திலும் கரிபூசி விட்டார்கள் நாலு வடமாநிலங்களின் வாக்காளர்கள். ''பி.ஜே.பி.க்குத்தான்'' வெற்றி வாய்ப்பு என்ற தேர்தல் கணிப்பு தவறாகிப் போனது.

பி.ஜே.பி. இந்தத் தேர்தல் முடிவிலிருந்தேனும் பாடம் கற்றால் நல்லது. ''இந்துராஷ்டிரம்'' என்று கோஷம் போட்டும், கிருஷ்ணரையும் ராமரையும் துணைக்கு அழைத்தும், பாபர் மசூதி தகர்ப்பை நியாயப்படுத்தியும், மதத் தீவிரவாதிகளுடன் உறவு கொண்டும் வோட்டுக்களை அறுவடை செய்ய முடியாது என்பதை இப்போதேனும் புரிந்து கொள்ளட்டும். எத்தனையோ சிரிய கொள்கைகளையுடைய பி.ஜே.பி., இந்த அம்சத்தில் கோட்டை விட்டதால் மண்ணைக் கவ்வியது. ராஜஸ்தானிலோ, உத்தரப்பிரதேசத்திலோ அது ஆட்சி அமைக்க முயற்சி செய்வது 'மீசையில் மண் ஒட்டவில்லை' கதைதான்.

பி.ஜே.பி.யின் மதத்தீவிரவாதக் கொள்கையை முஸ்லிம்கள் மட்டுமல்ல, இந்துக்களிலேயே பெரும்பாலோர் எதிர்க்கிறார்கள் என்பதை இந்தத் தேர்தல் நிரூபித்திருக்கிறது. அக்கம் பக்கத்து வீடுகளில், பேட்டைகளில், ஊர்களில் உள்ள மாற்று மதத்தினருடன் அனுசரித்துப் போய் ஒற்றுமையாக வாழ்வதையே பெரும்பாலான மக்கள் விரும்புவார்கள். பகை வளர்த்துக் கொண்டு ஒவ்வொரு நாளும் ஒரு கண்டத்தை எதிர்பார்த்து வாழ யாருக்குமே விருப்பமிராது. ஒருவர் மதச் சுதந்திரத்தை இன்னொருவர் மதிப்பதே விவேகம் என்பது தலைவர்களுக்குத் தெரியாமல் போகலாம். பாமரர்களுக்குப் புரிகிறது. சட்டச் சீர்திருத்தங்கள் தேவை என்று தோன்றினால் கொண்டு வரலாம்; அதை நட்புறவுடனும் முன்னேற்ற நோக்குடனும் விளக்கிச் சொல்லிப் படிப்படியாகச் செய்ய வேண்டும்; பகைத்துக் கொண்டு அல்ல.

பணபலத்தையே பிரதானமாக நம்பிய காங்கிரஸும் இரு மாநிலங்களில் வென்ற போதிலும் வேறு இரண்டில் பலத்த அடி வாங்கியது. தில்லியில் அடியோடு சரிந்தது. அதிலும் காங்கிரஸின் கோட்டையாக சமீபகாலம் வரை விளங்கிய உ.பி.யில் - இந்தியாவின் மிகப் பெரிய மாநிலத்தில் - காங்கிரஸின் வீழ்ச்சி பரிகாசத்துக்கு மட்டுமல்ல பரிதாபத்துக்கும் உரியது. மதச் சார்பாக இல்லாவிடினும் சாதி சார்பாகவும் பிரதேசப்பித்து காரணமாகவும் வோட்டுக்கள் பிரிந்து விளையாடியிருக்கின்றன. ஜனதா தளத்தின் மண்டல் ஆதரவு பிரசாரம், முற்பட்டோர் மிகுந்த வடமாநிலங்களில் எடுபடவில்லை என்பதும் தெளிவு.

பணம் பாதாளம் வரை பாயலாம், ஆனால் வோட்டுக்களைப் பெற்றுத் தராது; மக்கள் இவ் விஷயத்தில் புத்திசாலிகளாகி விட்டனர் என்பது உணரப்பட்டதும் காங்கிரஸுக்குள் மறுபடி உட்பூசல் கிளர்ந்து, ராஜினாமா கோஷமும் ஆரம்பமாகி இருக்கிறது. இந்தக் கோரிக்கை தார்மீக ரீதியில் சரிதான்; ஆனால் காங்கிரஸ் காரிய கமிட்டியின் ராஜினாமா மட்டும் எதையும் சாதிக்கப் போவதில்லை. அடித்தள ஊழியர்களை உற்சாகப்படுத்தி சாமான்ய மக்களிடம் காங்கிரஸின் புதிய பொருளாதாரக் கொள்கையும், மதச்சார்பின்மையும் ஏன் முக்கியமானவை என்பதை விளக்கிச் சொல்ல வேண்டும். இன்று ராஜினாமா கோஷம் எழுப்பி பதவி இழக்கும் ரங்கராஜன் குமாரமங்கலமோ அல்லது பிற மந்திரிகளோ இதற்கு எந்த அளவிற்கு உதவினார்கள்? பணமும் பதவியும் பேராசையும் அதற்கான சூழ்ச்சிகளும்தானே எல்லோருக்கும் முக்கியமானதாகி விட்டன!

தேர்தலில் வாங்கிய அடி கூட இவர்களுக்குப் புத்தி கற்பிக்கவில்லை. ராஜஸ்தானில் ஆட்சி அமைப்பதற்காக சுயேச்சைகளுக்கு அழைப்புடன் பண முடிப்பும் போகிறது! இமாசல பிரதேசத்தின் முதல்வர் யார் என்று குடுமிபிடிச் சண்டை! கேவலமான இந்தப் போக்கு காங்கிரஸை மேலும் மேலும் பலவீனப் படுத்தவே செய்யும்.

இத்தனைக்கிடையிலும் ஒரே ஒரு ஆறுதல், நாலு மாநிலங்களிலும் பி.ஜே.பி. மீண்டும் ஆட்சியைப் பிடித்திருந்தால் ஓங்கி ஒலிக்கக்கூடிய ''மத்திய காங்கிரஸ் அரசு ராஜினாமா செய்ய வேண்டும்'' என்ற கோரிக்கை இன்று வலுவிழந்து ஒலிப்பதுதான். மறுதேர்தல் வராது. மன்மோகன் சிங்கின் பொருளாதாரக் கொள்கை தொடரும். அந்த அளவில் தேசம் நிம்மதிப் பெருமூச்சு விடலாம்.

பணத்தை முடக்காதீர்கள்;

STATE BANK OF INDIA

அரசுத் துறையில் உள்ள வங்கிகளின் பங்குகளைப் பொதுமக்களுக்கு விநியோகித்து, மூலதனத்தில் அவர்களையும் பங்கேற்கச் செய்ய வேண்டும் என்ற கருத்து சில காலமாகவே நிலவி வருகிறது. இதன் மூலம் வங்கிகளின் செயல்திறனும் பொறுப்புணர்ச்சியும் அதிகரித்து, அவை மேம்பாடடையும் என்பது நோக்கம். இந்தக் கொள்கையின் அடிப்படையில் முதன் முதலாக இந்தியாவின் மிகப் பெரிய வர்த்தக வங்கியான ஸ்டேட் பாங்க், பங்குமார்க்கெட்டுக்கு வருகிறது.

இந்திய வங்கிகளின் ஒட்டுமொத்தமான வைப்பு நிதி, கடன் வழங்கியுள்ள ஒட்டுமொத்தத் தொகை என்று பார்த்தால், அவற்றில் 22 சதவீதம் ஸ்டேட் வங்கியினுடையதாக இருக்கிறது! 31.3.93 முடிய வங்கியின் வைப்புநிதி ரூ. 66,317 கோடி; வழங்கியுள்ள கடன் ரூ. 47,695 கோடி. தற்சமயம் வங்கியின் பங்குகளில் இரண்டு சதவீதம் மட்டுமே பொது மக்களிடம் உள்ளது. பாக்கி, ரிஸர்வ் வங்கியிடமும் மத்திய அரசிடமும்தான் இருக்கிறது. இன்றைய நூறு ரூபாய் பங்கு ரூ 4000க்கு விலை போகிறது!

தற்போது ஸ்டேட் வங்கி, தனது நூறு ரூபாய் பங்குகளை பத்து ரூபாய் பங்குகளாகப் பகுத்து 12 கோடியே 40 லட்சம் பங்குகளை விநியோகிக்கிறது. ஒவ்வொரு பங்கையும் ரூ. 90 கூடுதல் விலை தந்து ரூ. 100க்குப் பெற வேண்டும். எனினும் இன்றைய தேதியில் ரூ. 10 பங்கின் மார்க்கெட் மதிப்பு ரூ. 400 என்பதைக் காண, இது மிகவும் லாபகரமான முதலீடாகவே இருக்கும். டிசம்பர் 15 முதல் விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன. வாசகர்கள் இந்த நல் வாய்ப்பை நழுவ விடாது செயல்படலாம்.

T.I. DIAMOND CHAIN LTD

பலரக சைக்கிள்களைத் தயாரித்து உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் விற்பனை செய்யும் பிரபலமான TI குருப் நிறுவனங்களில் ஒன்று இது. டயமண்ட் செயின் நிறுவனம், சைக்கிள்களுக்கு மட்டுமின்றி, மோட்டார் சைக்கிள்கள், மற்றும் தொழிலகங்களில் பயன்படுத்தப்படும் பலரக சங்கிலிகளை அவரவர் தேவைக்கேற்பத் தயாரிக்கிறது. 1960ல் நிறுவப்பட்டதிலிருந்து நிறைய முன்னேற்றம் கண்டிருக்கிறது. 31.3.93 முடிவுற்ற ஆண்டில், ரூ. 136 லட்சம் மூலதனத்துக்கு ரூ. 115 லட்சம் லாபம் கண்டிருக்கிறது! கடந்த மூன்று ஆண்டுகளாகவே 20 சதவீதத்துக்குக் குறையாமல் லாபப்பங்கீடு வழங்கி வந்திருக்கிறது. ஏற்றுமதிக்குத் தேவையான தரத்தை அடைந்து "ISO 9000" சான்றிதழ் பெற்றுள்ளது.


தற்போது ஏற்றுமதியை மேலும் அதிகரிக்க ரூ. 20 கோடி முதலீட்டில் விரிவாக்கம் செய்யக் கருதுகிறது. புதிய முதலீட்டில் பகுதி அளவு பொதுமக்களிடமிருந்து பெறப்படுகிறது. இதற்காக ஒவ்வொன்றும் ரூ. 120 பெறுமானமுள்ள கடன் பத்திரங்கள் வழங்கப்படுகின்றன. இதற்கு 13 சதம் வட்டி உண்டு. இந்தக் கடன் பத்திரம் முற்றிலும் பங்குகளாக மாறக்கூடியது. முதல் பகுதியான ரூ. 50, ஒதுக்கீடான உடனேயே ஒரு பங்காக மாறி விடும். அதாவது ரூ. 40 கூடுதல் விலை தந்து பெறுவதாகிறது. இரண்டாவது பகுதியான ரூ. 70, பதினெட்டு மாதங்கள் சென்று ஒரு பங்காக மாறும். அதாவது கூடுதல் விலை ரூ. 60 கொடுத்துப் பெறுவதாகும். ஆக மொத்தம் ரூ. 120 பெறுமானமுள்ள ஒவ்வொரு டிபன்சருக்கும் இரு பங்குகள், சராசரியில் ரூ. 50 கூடுதல் விலை தந்து பெறலாம். என்றாலும், இந்தப் பங்குகள் மார்க்கெட்டில் பேரம் பேசப்படும் போது இதை விடவும் மிக அதிகமான விலை கிடைக்கும் என்றே கருதப்படுகிறது.

ESSAR SHIPPING LTD


எஸ்ஸார் குஜராத் குருப் நிறுவனங்களில் ஒன்று. ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்துக்கு உதவும் வகையில் சரக்குகளைச் சுமந்து செல்லும் 39 கப்பல்கள் தற்போது இதற்குச் சொந்தமானவை. அயல்நாட்டு வாணிபம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் மேலும் பல சரக்குக் கப்பல்கள் வாங்கத் திட்டமிடுகிறது. இதற்காக ரூ. 300 கோடி ஆறு கோடி பங்குகளை விநியோகிக்கிறது. ஒவ்வொரு பத்து ரூபாய் பங்கையும் ரூ. 40 கூடுதல் விலை தந்து ரூ. 50க்குப் பெற வேண்டும். எனினும் இந்த நிறுவனத்தின் பங்குகள் தற்போது மார்க்கெட்டில் ரூ. 75க்கு விலை போகின்றன என்பதைக் கவனிக்க வேண்டும். •

– வி. கோபாலன்

பெருகச் செய்யுங்கள்!



✱ அசோகமித்திரன் எழுதியது...



✱ டி.டி. வாசு எழுதியது...


கையெழுத்து ஜோசியம்!



✱ அருண்

சேலத்துக்காரரான வி. அருண், ஒருவர் கையெழுத்தைப் பார்த்து, அவருடைய குணாதிசயங்களைச் சொல்கிறார். அவர்களது உயரம், பணி, விருப்பம், நோய் என்று மிக நுணுக்கமாக வெல்லாம் புகுந்து பார்த்து எடுத்துச் சொல்கிறார் - வெறும் கையெழுத்து மட்டும் வைத்துக் கொண்டு! இதற்காக அநேக விருதுகள், பாராட்டுக்களெல்லாம் பெற்றிருக்கும் அருணிடம், பிரபலமான நான்கு பேரின் கையால் எழுதப்பட்ட சில குறிப்புகளைத் (அருணே எழுதச் சொன்னது) தந்தோம் - அந்தப் பிரபலங்களின் பெயரைச் சொல்லவில்லை!

அருண் சொன்ன ஜோசியமும் அந்தந்தப் பிரபலங்களின் (அசோகமித்திரன், டி.டி. வாசு, சுதா ரகுநாதன், ஹேமலதா வெங்கட்ராமன்) ஒப்பீடும் இங்கே தரப்படுகின்றன :



* ஹேமலதாவினுடையது....

* சுதா ரகுநாதன் எழுதியது....

டி.டி. வாசு பற்றி அருண் :

மகள் மீது அதிக பாசம் கொண்டவர். எப்போதும் வீட்டைப் பற்றியே யோசிப்பவர். தற்போது நல்ல செல்வந்தர். சமூகத் தொடர்புகள் அதிகம். தன்னம்பிக்கை மிக்கவர். ஒத்துப் போகும் குணம் மிக்கவர். 5'.6'' உயரம். அகல நெற்றி. 21/2'' மூக்கு. 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்கிற சித்தாந்த வாதி. நம்மால் பலர் பயன்பெற வேண்டும் என்று எண்ணுபவர். இதயக் கோளாறு. உயர் ரத்த அழுத்தம் இருக்க வேண்டும். எதையும் பகுத்து ஆராயும் மனம். தொண்டைச்சளி அடிக்கடி வந்து போகும். கையில் சூரிய ரேகை இருக்கும். (மோதிர விரலின் கீழ்) சொத்து சுகம் அதிகம்.

சுதா ரகுநாதன் குறித்து :

கான்வென்ட்டில் படித்தவர். அறிவு முதிர்ச்சி மிக்கவர். மனத்தில் எப்போதும் ஏகாந்தம். தனிமை விரும்பி. மகிழ்ச்சியான கற்பனைகள் அதிகம் செய்பவர். அவ்வப்போது தன்னைப் பற்றிய நம்பிக்கை சற்று குறைந்து காணப்படும். காரணகாரியங்களை நிதானமாக ஆராய்பவர். இலக்கியம் பிடிக்கும். அதிக செலவாளி. கவனம் அதிகம். பலர் கூடியிருக்கையில் தாழ்வு மனப்பான்மை தோன்றும். வெளிநாட்டுப் பயணங்கள் வாய்ப்பு அதிகம். ஞாபக சக்தி அதிகம். மூன்று மொழிகளில் புலமை உண்டு. மூன்று வாழ்க்கை லட்சியங்கள் வைத்திருப்பவர். கலைகளில் திறமை பெற்றவர். யாரையும் சார்ந்திருக்கும் அவசியமில்லாதவர். தனக்குத் தானே கட்டுப்பாடுகளும் ஒழுக்க விதிகளையும் வரையறுத்துக் கொண்டு வாழ்பவர்.

அசோகமித்திரன் பற்றி :

ஒல்லியான உடல் வாகு. சூடு அதிகம். 5'.6'' உயரம். எதையும் எளிதில் புரிந்து கொண்டு செயலாற்றுவார். உடல் வருந்தாத மூளை வேலையே இவரது தொழில். விமர்சனம் செய்வதில் வல்லவர். பேச்சில் கெட்டி. சொந்தக்காலில் நிற்பவர். உணர்ச்சி வசப்படும் டைப். கடவுள் பக்தி மிக்கவர். அடிக்கடி இவர் 'மூட்' மாறும். பிள்ளைகள் பட்டதாரிகளாக இருப்பர். இலக்கிய ஆர்வம் மிகுந்தவர். இசையிலும் ஈடுபாடு உண்டு. ஒரு பெண் மகவு இருக்கும். உற்சாகம் அதிகம். I.Q. 110 க்கும் மேல். செலவாளி. ஆடம்பரம் அறவே பிடிக்காது. சிந்தனையாளர். நெற்றி (கண்) மத்தியில் பதிவோரு கோடுகள் இருக்கும். (இருகண்ணையும் இணைத்து வைத்துப் பாருங்கள்.) நடு நிலைமையாளர்.

ஹேமலதா குறித்து :

பிறரைக் கவருவதில் வல்லவர். பள்ளிப் படிப்பில் கணக்கில் அதிக மதிப்பெண் பெற்றவர். சொந்த வீடு உடையவர். இசை-கலை ரசனை மிக்கவர். திடமான, வலுவான அபிப்ராயங்கள் கொண்டவர். அன்பு, பாசம் விரும்புபவர். அலங்கார, ஆடம்பரப் பிரியர். ரகசியங்களை மூடிக் காப்பவர். கண்கள் சற்றே பெரியவை. வெஜிடேரியன். பரோபகாரச் சிந்தனை உடையவர். தனது கருத்துக்களைத் தீர்மானமாகச் சொல்பவர். எதையும் நெடுநாள் ஞாபகம் வைத்திருப்பதில் சமர்த்தர்.

(இதில் எத்தனை சதம் சரியாக இருப்பதாக சம்பந்தப்பட்டவர்கள் கருதுகிறார்கள்? பார்க்க. பக் 48)

அமரர் கல்கி

தியாக பூமி

24. சாவித்திரியின் பயணம்

தங்கம் மாளின் கடிதத்தைப் படித்தவுடனேதான், சாஸ்திரியார் ரொம்ப சந்தோஷத்துடன் வந்து, ''சாவித்திரி! உன் கலி தீர்ந்து விட்டது, அம்மா!'' என்றார்.

சாவித்திரிக்கு மயிர்க்கூச்சல் எடுத்தது. திடுக்கிட்டு எழுந்திருந்து, ''ஏதாவது கடுதாசி வந்திருக்கா, அப்பா!'' என்று கேட்டுக் கொண்டு வந்தாள்.

''ஆமாம்மா! சம்பந்தியம்மாள் நரசிங்கபுரத்துக்குத் தன் பொண்ணைப் பார்க்கிறதுக்கு வர்றாளாம். திரும்பிப் போறபோது கல்கத்தாவுக்கு உன்னைக் கூட்டிண்டு போறாளாம்'' என்றார்.

சாவித்திரி நம்ப முடியாத சந்தோஷத்துடன், ''நிஜமாகவா, அப்பா!'' என்று கூவினாள்.

இந்தச் சம்பாஷணையை ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்து விட்டுச் சமையலறைக்குப் போனாள் மங்களம்.

''அடி அம்மா! இந்தப் பொண்ணுக்கு விமோசனம் பிறந்துட்டாப்பலேயிருக்குடி!'' என்றாள்.

''விமோசனம் பிறந்திருக்கா? அது என்ன?'' என்றாள் சொர்ணம்மாள்.

''சம்பந்தியம்மாள் நரசிங்கபுரத்துக்கு வர்றாளாம். இவளைக் கூட்டிண்டு வந்து விடச் சொல்லி எழுதியிருக்காளாம்.''

''அந்தப் பெரிய மனுஷிக்கு இங்கே வந்து அழைச்கண்டு போக முடியலையாக்கும்! உன்னையும் என்னையும் பார்க்க வேண்டியில்லையாக்கும்.''

''அது போனால் போகட்டுண்டி, அம்மா! இந்தப் பொண் எப்படியாவது புக்காத்துக்குப் போய்ச் சௌக்கியமாயிருந்தால் சரி! அரசமரத்துப் பிள்ளையாரே! சாவித்திரி புக்காத்துக்குப் போனா, உனக்கு 108 கொழுக்கட்டை பண்ணி நைவேத்யம் பண்றேன்'' என்றாள் மங்களம்.

''அடி அசடே! புக்காத்துக்குப் போய்த் திரும்பி வராதிருந்தா நைவேத்யம் பண்றேன்னு வேண்டிக்கோ. இது வாயையும் கையையும் வச்சிண்டு, அங்கே போய் வாழறுமோ! உன் சம்பந்தி இலேசுப்பட்டவன்னு நெனைக்கக்காதே. என்னத்துக்குத் தான் வராமே, இவரைக் கூட்டிண்டு வந்து விடச் சொல்லியிருக்கா, தெரியுமா? அப்பத்தானே இந்தப் பிராம்மணனை இன்னும் நன்னா மொட்டையடிக்கலாம்?''

இந்தச் சமயத்தில் செவிட்டு வைத்தி, ''அக்கா! அம்மா என்ன சொல்றா?'' என்று கேட்டான்.

மங்களம் ஜாடை காட்டிக் கொண்டே, ''சாவித்திரி புக்காத்துக்குப் போகப் போறாளண்டா!'' என்றாள்.


''சாவித்திரிதானே? ஆமாம்; கதவைச் சாத்திண்டு ஆம்படையானுக்குக் கடுதாசி எழுதறா, எழுதறா, அப்படி எழுதறா!''

சொர்ணம்மாள், தாலி கட்டுவதுபோல் ஜாடை காட்டிக் கொண்டு, ''இல்லேடா! அவள் ஆம்படையானாத்துக்குப் போகப் போறா!'' என்றாள்.

''அதான் நானும் சொல்றேன். அப்பவே எனக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுத்திருந்தா, ராஜாத்தியாட்டமா வச்சிண்டிருப்பனே!''

''சீச்சீ! வாயை மூடிக்கோ!'' என்றாள் மங்களம்.

கல்கத்தா கடிதத்தை அப்பாவிடமிருந்து வாங்கிப் படித்ததும் சாவித்திரிக்குக் கொஞ்சம் உற்சாகம் குறைந்தது. இத்தனை நாள் கழித்து வந்த இந்தக் கடிதமாவது மாப்பிள்ளை எழுதினதாயிருக்கக்கூடாதா என்று நினைத்தாள். பிறகு, 'படித்த நாகரிக மனுஷராயிருந்தாலும் தாயார் தகப்பனாருக்கு அடங்கிய பிள்ளை. அவர்களை மீறி ஒன்றும் செய்யமாட்டார் போல் இருக்கிறது. நாமும் புக்காத்துக்குப் போனால், மாமனார் மாமியாருக்கு அடங்கி நடந்து அவரைச் சந்தோஷப்படுத்த வேண்டும்' என்று நினைத்துக் கொண்டாள். ''அழைத்துப் போகிற உத்தேசம் இருக்கிறது'' என்று மட்டும் தங்கம்மாள் எழுதியிருந்த



படியால், அதற்கு ஒன்றும் தடங்கல் இல்லாமல் இருக்க வேண்டுமேயென்று கவலைப்பட்டாள். எப்படியும் தான் இன்று எழுதிய கடிதத்தைத் தபாலில் சேர்க்க வேண்டிய அவசியமில்லை. அதைப் பத்திர மாய் வைத்திருந்து கல்கத்தாவுக்குப் போன பிறகு மாப்பிள்ளையிடம் காட்டலா மென்று தீர்மானித்துக் கொண்டாள்.

சம்பு சாஸ்திரி குறிப்பிட்ட தேதியில் நரசிங்கபுரத்துக்குப் போனார். அவரிட மிருந்து இரண்டு நாளைக்கெல்லாம் சாவித் திரிக்கு ஒரு கடிதம் வந்தது. ''சம்பந்தியம் மாள் உன்னைக் கூட்டிக் கொண்டு போவ தாக ஏற்பாடாகி விட்டது. அடுத்த புதன் கிழமை நாள் பார்த்திருக்கிறது. எனக்கு நாகப்பட்டினத்தில் கொஞ்சம் வேலை இருக்கிறது. பார்த்துக் கொண்டு நாலு நாளில் வருகிறேன். அதற்குள், உன்னை அனுப்புவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வைக்கும்படி சித்தியிடம் சொல்ல வும்'' என்று எழுதியிருந்தது.

சாவித்திரிக்கு உண்டான குதூகலத் துக்கு அளவேயில்லை. 'பகவானே! கடைசியில் உன் மனம் இரங்கிற்றா? என் னுடைய பிரார்த்தனையெல்லாம் பலித் ததா? உண்மையிலேயே என் கலி தீரப்போ கிறதா? இந்தச் சனியன்களை விட்டுப்

போகப் போகிறேனா! கல்கத்தாவுக்குப் போய் என் பிராணநாதருடன் குடித்தனம் நடத்தப்போகிறேனா? கல்கத்தா பட்டணம் எப்படியிருக்கும்? கும்பகோணத்தையும் நாகப்பட்டினத்தையும் விடப் பெரிசாயிருக்குமோ? அங்கேயெல்லாம் தெரு வீதியில் தந்திக் கம்பியிலே வண்டி ஓடுமாமே? அது எப்படியிருக்குமோ?' - ஒரு பக்கம் இம் மாதிரி எண்ணங்கள்.

'அப்பாவைச் சித்தி, பாட்டி, செவிட்டு வைத்தி இவர்கள் கையில் விட்டுவிட்டுப் போகிறோமே. இவர்கள் அவருடைய பிராணனை வாங்கிவிடுவார்களே' என்ற வேதனை மற்றொரு பக்கம். ''இந்தச் சமயத்தில்தானா அப்பாவுக்கு நாகப்பட்டினத்திலே வேலை இருக்க வேண்டும்? கிளம்புவதற்கு முன்னால் நாலு நாளைக்கு அவர் ஆத்தில் இருக்கக் கூடாதா? இந்த நாலு நாளும் அவருக்குச் சிசுருஷை செய்தாலாவது மனத்துக்குக் கொஞ்சம் ஆறுதலாயிருக்குமே?'' என்ற ஏக்கம் இன்னொரு பக்கம்.

சாவித்திரிக்கு அப்போதிருந்த மனோ நிலையில் மங்களத்துடன் கூட உறவு கொண்டாடத் தொடங்கினாள். எவ்வளவு சிரமப்பட்டும், சொர்ணம்மாளிடம் மனத்தைத் திறந்து பேச அவளால் முடியவில்லை. ஆனால், மங்களம் தனியாயிருந்த போதெல்லாம் அவளிடம் வந்து, ''சித்தி! புக்ககத்திலே எப்படியிருக்க வேண்டும்? மாமனார் மாமியாருக்கு எப்படி சிசுருஷை செய்ய வேண்டும், சொல்லு! அவர்கள் வீட்டில் ஒரு வேளை பரிசாரகன் இருந்தா, நான் என்ன காரியம் செய்யறது? என்னால் வெறுமனே உட்கார்ந்திருக்க முடியாதே?'' என்றெல்லாம் கேட்பாள். அப்புறம், ''சித்தி! என்ன இருந்தாலும் உன்னையும் அப்பாவையும் விட்டுட்டுப் போறது எனக்குக் கஷ்டமாய்த்தான் இருக்கு. நான் கல்கத்தாவிலிருந்தாலும் உங்களைத்தான் அடிக்கடி நினைச்சண்டிருப்பேன். நீ என்னை நினைச்சுக்குவயோ, மாட்டாயோ?'' என்பாள்.

மங்களத்துக்கும் அந்தச் சமயத்தில் சாவித்திரியிடம் புது அன்பு தோன்றியிருந்தது. தினம் தலைவாரிப் பூ வைத்து, அலங்காரம் எல்லாம் செய்து விட்டதோடு, மாமியாராத்தில் அப்படியிருக்க வேண்டும், இப்படியிருக்க வேண்டும் என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தாள். ''ஏதோ உலகத்திலே எல்லாரையும் போலே சாந்தி கல்யாணம் என்று பண்ணிப் புக்காத்திலே கொண்டு விட்டுட்டு வர்றத்துக்கு எங்களுக்குக் கொடுத்து வைக்கலை. எப்படியாவது நீ சந்தோஷமாயிருந்தால் சரி'' என்று அடிக்கடி கூறினாள். 'நல்ல வேளை! சாந்தி கல்யாணச் செலவெல்லாம் இல்லாமற் போச்சே' என்ற திருப்தி அவள் மனத்திற்

குள் இருந்தது. இதை நினைத்து, பெண்ணைப் புக்ககத்துக்கு முதன் முதலில் அனுப்பும் போது செய்ய வேண்டிய சீர்களை அவள் தாராளமாகவே செய்து கொண்டிருந்தாள். பருப்புத் தேங்காய், பக்ஷணம் எல்லாம் பண்ணி வைத்தாள்.

நாலு நாள் கழித்துச் சம்பு சாஸ்திரி வந்தார். மறுநாள்தான் புதன்கிழமை. ஆகையால், பிரயாண ஏற்பாடுகள் எல்லாம் துரிதமாக நடந்தன.

புறப்படும் நாள் நெருங்கிவிடவே, சாவித்திரிக்குத் தகப்பனாரை விட்டுப் பிரிய வேண்டுமே என்ற எண்ணம் அடிக்கடி தோன்றிக் கொண்டிருந்தது. அன்றிரவு அவள் சாஸ்திரியுடன் தனியாயிருந்த போது, ''அப்பா! நான் போய்ட்டா, நீங்க தனியாயிருக்கணுமே? எப்படியப்பா இருப்பயள்?' என்றாள்.

''அதற்கு என்ன குழந்தை, செய்யலாம்? உலகத்தில் பெண்ணைப் பெற்றவர்கள் என்றைக்காவது ஒருநாள் விட்டுப் பிரியவேண்டியதுதான். நீ எப்படியாவது புக்காத்துக்குப் போய்ச் சௌக்கியமாயிருக்க வேண்டும்; அதுதானம்மா முக்கியம்!'' என்றார் சாஸ்திரி.

புதன்கிழமை காலையில் நல்ல வேளையில், வாசலில் இரட்டை மாட்டு வண்டி வந்து நின்றது. நல்லான்தான் வண்டி கொண்டு வந்திருந்தான். அவன் முகத்திலும் சந்தோஷம் தாண்டவமாடிற்று.

உள்ளே சாஸ்திரி, ''ஊம்; ஊம். சீக்கிரம்!'' என்று அவசரப்படுத்திக் கொண்டிருந்தார். சாமான்கள் ஒவ்வொன்றாய் வண்டியில் கொண்டு வந்து ஏற்றப்பட்டன. சாவித்திரி தன்னால் தவக்கம் ஆகக்கூடாதென்ற எண்ணத்தினால் கையில் கூஜாவை எடுத்துக் கொண்டு, அரைமணி நேரத்திற்கு முன்னாலிருந்து தயாராய் நின்று கொண்டிருந்தாள்.

கடைசியில், சாமான்கள் எல்லாம் வண்டியில் ஏற்றியான பிறகு, புறப்பட வேண்டிய வேளை வந்ததும் சாவித்திரி, சொர்ணம்மாளுக்கும் மங்களத்துக்கும் நமஸ்காரம் செய்தாள். செவிட்டு வைத்திக்குக்கூட, ''மாமா! உனக்கும் நமஸ்காரம் பண்றேன்'' என்று சொல்லிவிட்டு ஒரு பாதி நமஸ்காரம் பண்ணி எழுந்தாள். வைத்திக்கு சந்தோஷம் தாங்கவில்லை. அவன் அசட்டுச் சிரிப்புடன், ''எனக்கு என்னத்துக்கு?'' என்றான்.

மங்களம் சாவித்திரியின் நெற்றியில் விபூதி இட்டாள். பிறகு எல்லாரும் வாசலுக்கு வந்தார்கள். சாவித்திரி தெரு வீதியில் இறங்கியதும், மறுபடியும் திரும்பிப் பார்த்து, ''சித்தி! போய்ட்டு வர்றேன்!'' என்றாள். மங்களம், ''மகராஜியாய்ப் போயிட்டுவா, அம்மா!'' என்றாள்.

ரேழியில் கதவோரமாய் நின்ற அவள் தாயார், ''போய்ட்டு வாவாம்! நிஜந்தான்னு மறுபடியும் வந்து வைக்கப் போறது!'' என்று முணுமுணுத்தாள்.


சாவித்திரியும் சம்பு சாஸ்திரியும் வண்டியில் ஏறிக் கொண்டார்கள். வண்டியும் ஜில் ஜில் என்ற மாட்டின் சதங்கைச் சப்தத்துடன் கிளம்பிற்று.

சாவித்திரியின் மனோநிலை அப்போது எப்படி இருந்தது? இத்தனை நாளும் வசித்த ஊரைவிட்டுப் போகிறோமே என்று அவள் மனத்தில் வருத்தம் உண்டாயிற்றா? நெடுங்கரையை மறுபடி எப்போதும் பார்ப்போம் என்று ஏங்கினாளா? அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை யென்பதைத் தெரிவிக்க நாம் கடமைப் பட்டிருக்கிறோம்.

'அம்மா! கடைசியிலே, இந்தச் சனியன் பிடித்த நெடுங்கரையைவிட்டுக் கிளம்பியாச்சு! இந்த ஊர் முகத்திலேயே இனிமேல் விழிக்க வேண்டாம்' என்றுதான் அவள் எண்ணினாள்.

சாவித்திரி! சாவித்திரி! இந்தச் 'சனியன் பிடித்த நெடுங்கரைக்குத் திரும்பிப் போக மாட்டோமா என்று ஒரு நாளைக்கு நீ தாபங் கொள்ளப் போகிறாய்! இப்போது நீ வெறுக்கும் நெடுங்கரை அப்போது உன்னை வரவேற்குமா?

(தொடரும்)



''மேடைல தலைவர் அலர்றாரே, ஏன்...?''

''கட்சில வாரிசுக் குழப்பம் வந்ததுலேருந்து இப்படித்தான்... யாராவது கால்ல விழற மாதிரி பலமா கிள்ளிட்டுப் போறாங்க!''

- அம்பை தேவா



சுழலும் வீடும் சூரியகாந்தியும்!

சூரிய சக்தியை கிரகித்துக் கொண்டு மின்சாரமாக மாற்றி வீட்டில் விளக்குகளை எரிய விடலாம்; எல்லா மின் உபகரணங்களையும் இயக்கலாம்; வெந்நீர் போடலாம்; அதைக் கொண்டு குளிர் காலத்தில் வீட்டை உஷ்ணப்படுத்தலாம், இதற்காக வீட்டுக் கூரையில் சூரிய வெப்பத்தைக் கிரகிக்கும் ஸோலார் தகடுகள் பொருத்தப்பட்டிருக்கும். சங்கடம் என்ன வென்றால் சூரியன் கிழக்கே உதித்து மேற்கே மறைவதால் இந்தத் தகடுகளைச் சூரியக் கிரணங்கள் எந்நேரமும் தாக்குவதில்லை. அதனால் அவற்றின் ஆற்றல் ஓர் எல்லைக்குள் அடங்குகிறது.

ஜெர்மானிய கட்டடக் கலை நிபுணர் ஒருவர் சூரியகாந்தி வயலைப் பார்த்தார். சூரியனின் பயணத்துக்கு ஏற்ப சூரியகாந்தி மலர்கள் திசை திரும்புவதையும் கண்டார். இந்த ஐடியாவை ஸோலார் வீட்டில் புகுத்தினால் என்ன? என்று சிந்தித்தார். இவர் உருவாக்கிய வீடு, வட்ட வடிவ தண்டவாளம் - சக்கரத்தின் மீது அமைந்த ஒரு காங்கிரீட் மேடைக்கு மேல் நிர்மாணிக்கப்பட்டது. சூரியனின் சஞ்சாரத்துக்கு ஏற்ப வீடு சுழல்கிறது. இதனால் சூரிய ஒளி எப்போதும் கூரை மீதுள்ள ஸோலார் தகடுகளைத் தாக்குகிறது. அதற்கேற்ப மின் உற்பத்தியும் மேம்படுகிறது. இந்த மின்சாரத்தின் ஒரு பகுதியே, வீடு கட்டப்பட்டுள்ள மேடையைச் சுழல வைக்கவும் பயனாகிறது.

இந்த வீடு இப்போது கொஞ்சம் காஸ்ட்லிதான். ஆனால் சூரிய சக்தியிலிருந்து மின்சாரம் பெறுவது நாளடைவில் மலிவாகிவிடும் என்றே விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.



''அந்த கட்சிப் பொருளாளர் ரொம்பத் திறமைசாலி சார்.''

''எதை வச்சுச் சொல்றீங்க?''

''தலைவர் மேல சுமத்தப்பட்ட களங்கத்தைத் துடைக்க, காடா துணி வாங்கிய வகையில் செலவு ரூபா ஐம்பதாயிரம்னு எழுதி வச்சிருக்காரே!''

– சீர்காழி வி. ரேவதி.



ஐசிஎஸ் R. நடராஜன்
நிர்வாக இயக்குநர்

ஐசிஎஸ் குரூப்

வர்த்தக அலுவலகம்: 221, சத்தியமூர்த்தி சாலை, இராம் நகர்,
கோயமுத்தூர் - 641 009. போன்: 230463.

50 ஆண்டுகளுக்கு
மேலான
அரிய சேவை

டெபாசிட் திட்டங்கள்

குறுகிய கால டெபாசிட் | பிக்சட் டெபாசிட்

காலம்	1 நாள் முதல் 90 நாட்கள் முடிய	91 நாட்கள் முதல் 180 முடிய	181 நாட்கள் முதல் 365 முடிய	12 மாதங்களுக்கு	25 மாதங்களுக்கு	36 மாதங்களுக்கு	48 மாதங்களுக்கு	60 மாதங்களுக்கு
வட்டி விகிதம் ஆண்டுக்கு	15%	16%	17%	18%	18.5%	19%	19.5%	20%
				17%	17.5%	18%	18.5%	19%
				16%	16.5%	17%	17.5%	18%

அபிட்சம் வைப்புத் திட்டம்

ரூ. 10,000/- செலுத்தினால் 45 மாதங்களில் ரூ. 21,000/- கிடைக்கிறது.

ரூ. 10,000/-ம் அதன் மடங்கில் பணம் செலுத்துவோர் மட்டுமே பங்கு பெற முடியும்

ரெக்கரிங் டெபாசிட் திட்டம்

மாத தவணைத் தொகை ரூ.	காலக்கெடுவில் பெறவுள்ள முதிர்வுத்தொகை				
	12 மாதங்கள்	24 மாதங்கள்	36 மாதங்கள்	48 மாதங்கள்	60 மாதங்கள்
100	1310	2850	4680	6870	9490
250	3275	7125	11700	17175	23725
500	6550	14250	23400	34350	47450

குமுலேட்டிவ் டெபாசிட் திட்டம்

டெபாசிட் தொகை ரூ.	முதிர்வு அடையும் போது பெறும் தொகை		
	45 மாதங்கள்	68 மாதங்கள்	90 மாதங்கள்
1000	2000	3000	4000
5000	10000	15000	20000
7500	15000	22500	30000
10000	20000	30000	40000

- 45 மாதங்களில் இரு மடங்கு
- 68 மாதங்களில் மூன்று மடங்கு
- 90 மாதங்களில் நான்கு மடங்கு

நகைக்கடன் மற்றும் இரண்டு சக்கர வாகனங்களுக்கு கடனுதவியும் வழங்கப்படும்

செழுமை தரும் சேமிப்பு திட்டங்கள்! ஐஸ்வர்யத்தின் அட்சயபாத்திரம் - ஐசிஎஸ்!

தடயம்

வாசன்

போட்டிக்கதை - 16

சார்லி ஒருமுறை அறையைச் சுற்றிப் பார்வையிட்டான். எதைச் செய்ய வந்தானோ அதை முடித்து விட்டான். பெட்டியை எடுத்துக் கொண்டு கீழே நடந்தான்.

'இனி அவளைப் பற்றிக் கவலையில்லை... சார்லி, இதைச் செய்... அதைச் செய்... எப்போது வருவாய்.... என்றெல்லாம் அவள் பிடுங்கல் இருக்காது' இதை நினைத்த போது சார்லியின் முகத்தில் வரட்டுப் புன்னகை.

அன்று காலை அந்த வீட்டில் அவன் நடமாடிய இடங்களையெல்லாம் ஒரு முறை பார்த்தான். 'எதையும் விடவில்லை...' என்று முணுமுணுத்துக் கொண்டே பின்புறக் கதவு வழியாக வெளியேறினான். அடுத்த சில வினாடிகளில் காரில் ஏறிக் கொண்டு கவனமாக ஓட்டினான். தெருவில் இன்னும் நடமாட்டமே இல்லை...

போன் அலறியது. சிகரெட் துண்டை எறிந்துவிட்டு ராண்டி போனை எடுத்தான்.

''ஹலோ... டி.சி. போலீஸ்... ராண்டி மில்லர், டிடெக்டிவ் ஸ்பீக்கிங்....''

அடுத்த சில நிமிடங்களில் அவன் வேகமாகக் குறிப்புகளை எடுத்துக் கொண்டான்.

''ஏற்கெனவே எமர்ஜன்ஸி 911 ஐக் கூப்பிட்டாச்சா? நான் இதோ வருகிறேன்...''

பளபளக்கும் போலீஸ் காரின் மேற்புறம் மாக்னட்டால் பொருத்திய சிகப்பு விளக்கை பளிச் பளிச்சென்று மின்னிக் கொண்டு ராண்டியின் கார் பறந்தது. காலை நேர டி.சி. டிராஃபிக்கில் நுழைந்து. வளைந்து ராண்டி மிக லாகவமாக ஓட்டினான்.

எட்டே நிமிடங்களில் அந்த வீட்டிருகே அவன் வந்து சேர்ந்தான்.

அந்த வீடு இருந்த இடம் லிங்கன் தெரு. சார்லி வந்துபோன அதே வீடு.

வீட்டின் முன் போலீஸ், ஆம்புலன்ஸ், தீயணைப்பு வண்டிகள். சிகப்பு, நீலம், பழுப்பு வண்ணங்களில் சுழலும் விளக்குகள். கணிசமான கூட்டம். ராண்டிக்கு பழகிப் போன காட்சி.

''தள்ளுங்கள்.... வழி விடுங்கள்'' என்று கூவிக் கொண்டே அவன் கையில் போலீஸ் பேட்ஜுடன் விரைந்தான்.

''நான் டிடெக்டிவ் மில்லர்... டி.சி. போலீஸ்...''

வாசலில் நின்றிருந்த போலீஸ்காரன் ''உள்ளே போகலாம்...'' என்று வழி விட்டான்.

வீட்டுக் கதவு சிறிது திறந்திருந்தது. உள்ளே நுழைந்த ராண்டிக்கு மாடிக்கு வழி காட்டப்பட்டது. என்ன எதிர்பார்ப்பது என்று தெரியாமல் ராண்டி படிகளில் ஏறினான். மாடி அறையில் அவன் கண்ட காட்சி அருவருப்பூட்டியது.

ஐம்பது வயதுக்கும் மேலான பெண்ணின் உடல். இடுப்புக்குக் கீழ் உடுப்பில்லை. தலை பலமாகத்தாக்கப்பட்டிருந்தது. மார்பில் ஒன்பது அங்குல கத்தி. பழுப்பு நிறத் தரை விரிப்பில் உறைந்து கிடந்த ரத்தப் பெருக்கு.

''இன்னக்கி வேலையே இல்லாம இருந்திருக்கலாம்... டூ லேட்...'' ராண்டி நினைத்துக் கொண்டான்.

அவளுக்கும்தான் டூ லேட்....!

''போட்டோக்கள் எடுத்தாச்சு, டிடெக்டிவ் மில்லர்...'' என்ற குரல் அவனை உசுப்பியது.

''கைரேகைகள்...'' தன்னையறியாமல் ராண்டி பேசினான்.

''எதுவுமே கிடைக்கவில்லை... எல்லா இடத்துலேயும் தேடியாச்சு....'' அலுப்புடன் பதில் வந்தது.

'இது நிச்சயம் தகராறான கேஸ்தான். கைரேகைகள், அது இதுன்னு தடயம் கிடைச்சாலே பிரச்னைகள் வரும். போஸ்ட் மார்ட்டத்தில் அதிகமாக என்ன தெ ரி ந் து விடப் போகிறது?' ராண்டிக்குத் தலைவலி ஆரம்பாம்.

பெரிய பிளாஸ்டிக் பையில் உடலை அனுப்பிவிட்டு, வீட்டின் ஒவ்வொரு பகுதியாக அலசினான். ஏதாவது ஒரேயொரு தடயம்...? நம்பிக்கைதான்.

சில முக்கியக் குறிப்புகளை எழுதிக் கொண்டான். வீட்டு வாசற்கதவு, பின்புறக் கதவு - எதுவுமே பலாத்காரமாகத் திறக்கப்படவில்லை. அவளுக்குத் தெரிந்த ஆளாகத்தான் இருக்க வேண்டும்... ஒரு அறை



யில் புது பெயிண்ட் வாடை. சமையலறையில் புது அலமாரிகள். யாரோ ஆளை வைத்து வீட்டைப் புதுப்பிக்க முயற்சிகள்... யாரந்த ஆள்? அவனைக் கண்டுபிடித்தால்?

சமையலறையில் ஒரு 'கோக் பாட்டில்'. பாவம் அந்தப் பெண்.. இனி அவளுக்குத் தாகமே எடுக்காது.

வரிசையாகச் சிலருக்குப் போன் செய்ய ஆரம்பித்தான்.

கொலை செய்யப்பட்டவளின் மகள் வாஷிங்டனிலேயே இருப்பதாய் ராண்டிக்கு யாரோ சொன்னார்கள். பெயர்.. கட்ரீனா.. அவளைக் கூப்பிட்டான். அவள் பேச்சு ராண்டியின் உற்சாகத்தை உச்ச நிலைக்குத் தள்ளியது.

கட்ரீனாவுடன் பேசி முடித்ததும் ஒரு கோக் பாட்டிலைக் கையிலெடுத்துக் கொண்டு அவன் அவசரமாக லிங்கன் தெருவிலிருந்த கொலை நடந்த வீட்டுக்கு விரைந்தான்.

சார்லி தூங்கியெழுந்த போது மாலை மணி ஏழு. நாள் முழுக்க தூங்கியதில் அவனுக்குத் திருப்தி. எழுந்ததும் தாகம். பிரிட்ஜைத் திறந்து ஒரு பீர் எடுத்தான். மனதை மாற்றிக் கொண்டு அதை உள்ளே வைத்தான். பீர் குடிக்க இரவு முழுக்க இருக்கிறதே... அவசரம் என்ன? கோக் பாட்டில் ஒன்றை எடுத்தான்.

'நோ... நோ....'

சார்லியின் மனம் வேகமாக அடித்துக் கொண்டது. காலையில் அவள் வீட்டில் கோக் குடித்தது ஞாபகம் வந்தது.

'கையில் உறை போட்டுக் கொண்டு குடித்தேனா.... இல்லை, பிறகு உறை போட்டுக் கொண்டேனா.... ஓ... நோ... அதில் என் கைரேகைகள் இருந்து விட்டால்... எந்தத் தடயமும் இல்லாமல் இந்தக் கொலையைச் செய்யணும்னு நினைச்சேனே...'

சந்தேகம் உலுக்க, சார்லிக்கு வியர்த்துக் கொட்டியது. புயலாக வெளியே ஓடினான். காரில் ஏறி, லிங்கன் தெருவுக்கு ஓட்டினான்.

'அந்த கோக் பாட்டிலை எடுத்து வந்து விட வேண்டும். போலீஸ் வீட்டைப் பூட்டி காவல் வைத்திருக்கலாம். அப்படி ஒரு வேளை காவல் இல்லையென்றால்... வேலை சுலபம்... போனால்தானே தெரியும்...'

தெருக்கோடியிலேயே வண்டியை நிறுத்திவிட்டு நடந்தான். அந்த வீட்டிற்கு போலீஸ் காவலில்லை. நல்லகாலம்... துணிச்சலுடன் உள்ளே நுழைந்தான்.

சமையலறைக்குள் நுழைந்தவனுக்கு அங்கிருந்த கோக் பாட்டிலைப் பார்த்ததும் மனம் நிம்மதியாயிற்று. இந்தத் தடயம் போலீசுக்குக் கிடைக்கவில்லை... பெருமூச்சுடன் அதை எடுத்துக் கொண்டு சார்லி விரைந்து வெளியேறினான்.

கோர்ட் நேரத்தில் கூடிவிட்டது. இருபத்தியேழு பேர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர். சார்லியின் மீது மட்டும் வழக்கு பதிவாகியிருந்தது!

முதல் மூன்று நாட்கள் சார்லியின் வக்கீல் காரசாரமாக விவாதித்தார்.

''சார்லி அந்தப் பெண் வீட்டில் தட்டு முட்டு வேலை செய்தது உண்மை. அலமாரி பொருத்தியது, பெயிண்ட் அடித்தது எல்லாமே உண்மை. சார்லி ஏற்கெனவே ஒரு முறை சிறைக்குப் போய் வந்தவன் என்பது உண்மை... ஆனால்... கொலை நடந்த அன்று அவன் அந்த வீட்டிற்குப் போகவேயில்லை என்பதும் உண்மைதான்... ஒரு தடயமுமில்லாமல், சந்தர்ப்ப வாதங்களை வைத்து சார்லியின் மீது இந்தக் கொலைக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது...''

எதை வைத்து ராண்டி மில்லர் சார்லியைக் குற்றவாளி என்கிறான்? வழக்கு சூடு பிடித்தது.

ராண்டி சாட்சிக் கூண்டில் ஏறினான். ஒரு பிளாஸ்டிக் பையிலிருந்த கோக் பாட்டிலைக் காட்டி, ''இதை மிக முக்கியத் தடயமாகச் சேர்க்க விரும்புகிறேன்'' என்றான்.

சார்லி எதுவும் பேசவில்லை. 'இந்த டிடெக்டிவ் ராண்டி மில்லர் ஏதோ ஒரு கோக் பாட்டிலைக் காட்டி தடயம் என்கிறான்... அதைத்தான் நான் தூக்கியெறிந்து விட்டேனே...' சார்லி மேலே என்ன நடக்கிறது என்று கவனித்தான்.

''ஏண்டா, இப்படி பெண் பார்க்க வந்த இடத்தில 'அல்பமா' நடந்துக்கிறே!''

''என்ன செஞ்சேன்?''

''அங்கேயே பாக்கிறியே?''

''அதுல என்ன தப்பு?''

''அவ எழுந்து போய், அஞ்சு நிமிஷம் ஆயிடுச்சி... அதான்!''

- ஆர். வசந்தகுமார்.

''கொலையுற்ற பெண்ணின் வீட்டுச் சமையலறையில் இருந்த கோக் பாட்டில் தான் இது!'' என்றான் ராண்டி.

''இதில் சார்லியின் கைரேகைகள் இருக்கா?'' எதிர் தரப்பு வக்கீல்.

''இல்லை...''

''அந்தப் பெண்ணின் கைரேகைகள்....?''

''இல்லை... அவளுடைய கைரேகைகள் இருக்கவே முடியாது. அவள் கோக் குடித்ததேயில்லை. விருந்தினருக்கு மட்டும் அதை வாங்கி வைத்திருந்தாளாம்... கட்ரீனா சொன்ன விவரம்'' என்று விளக்கினான்.

''சார்லிதான் அதைக் குடித்தான் என்பதற்குக் கூட என்ன ஆதாரம்?''


''ஒரு நவீன விஞ்ஞானப் பரிசோதனை மூலம் நாங்கள் அறிந்து கொண்டோம்...'' என்றான் ராண்டி.

நீதிபதி குறுக்கிட்டார். ''மிஸ்டர் மில்லர், விவரமாகச் சொல்லுங்கள்'' என்றார்.

''இது கடந்த பன்னிரண்டு - பதினைந்து ஆண்டுகளில் 'மாலிகுலர் பயாலஜி'யில் ஏற்பட்ட விஞ்ஞான சாதனை. முதல் முதலில் இங்கிலாந்தில் கண்டு பிடிக்கப்பட்டது. ஒரு முற்றுப்புள்ளி அளவேயுள்ள ரத்தம், விந்து, எச்சில் போன்ற உடல் திரவங்களையோ அல்லது சிறு மயிரையோ வைத்து, மரபுப் பொருளான டி.என்.ஏ மூலக்கூறுகளைப் பன்மடங்கு பெருக்கலாம். இதற்கு 'பாலிமேரஸ் செயின் ரியாக்ஷன்' என்ற முறை - 'பிசிஆர்' என்பார்கள் - பயன் படுத்தப்படுகிறது. 'பாலிமேரஸ்' என்பது ஒரு என்சைம். இதைக் கொண்டு ஓரேயொரு டி.என்.ஏ மூலக்கூற்றை இரண்டு, நான்கு, எட்டு என இரட்டித்துக் கொண்டே போகலாம். சில மணி நேரத்தில் கோடிக்கணக்கான டி.என்.ஏக்களைத் தயாரித்து விடலாம். இதற்கான நவீன இயந்திரங்கள் உள்ளன.''

''நான் கேட்டது பரிசோதனையை எப்படிச் செய்வது என்ற விவரமில்லை... அதை எப்படி ஒரு தடயமாக்குவது என்பதைத்தான்!''

''யார் மீது சந்தேகமோ அவர்களுடைய ரத்தத்திலிருந்து டி.என்.ஏக்களைப் பிரித்து, 'பிசிஆர்' மூலம் செய்தவற்றுடன் ஒப்பிட்



டால் அவை தமக்கே உரிய அடுக்குத் தொடரைக் காட்டும். இரண்டும் ஒரே மாதிரி என்றால் குற்றம் சாட்டத் தடயம் கிடைத்தாற் போல்தான்... இந்த 'பிசிஆர்' முறையை எய்ட்ஸ் போன்ற சில நோய்களைக் கண்டறியக் கூட பயன் படுத்துகிறார்கள்....''

ராண்டியைக் குடைந்து எடுக்க ஆரம்பித்தார் சார்லியின் வக்கீல்.

''கோக் பாட்டிலிலிருந்து சார்லியின் எச்சிலை 'பிசிஆர்' மூலமாக ஒரு தடயமாக்க முயற்சியா?''

''ஆமாம்....''

''சாம்பிள் கன்டாமினேஷன் இருக்க வாய்ப்புண்டா?''

''ம்ம்... உண்டு...'' என்றான் ராண்டி. கொஞ்சம் தடுமாறினான்.

''அப்படியே கண்டுபிடிக்கப்பட்ட டிஎன்ஏ தொடர் மற்ற எவரிடமும் இருக்க வாய்ப்புண்டா?''

அந்த வக்கீல் கனைத்துக் கொண்டார். ''யுவர் ஆனர்... இது போன்ற டிஎன்ஏ பரிசோதனைகள் அமெரிக்காவில் முப்பத்தாறு மாநிலங்களில் கோர்ட் வழக்குகளில் அனுமதிக்கப்படுவது உண்மைதான். ஆனால் இது ஒரு முடிவான தடயமில்லை. நீங்கள் இதை இந்த வழக்கில் அனுமதிக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்...''

நீதிபதி யோசித்தார். பிறகு, ''விஞ்ஞானத்தின் மூலம் சரியாக நிரூபிக்க முடியுமானால் நான் அனுமதிக்கத் தயார்'' என்று சொன்னார்.

சார்லிக்குத் தூக்கிவாரிப் போட்டது. 'நான் குடித்த அந்தக் கோக் பாட்டில் அவள் வீட்டில் எப்படி இருந்திருக்க முடியும்? இதைப் பற்றி வக்கீலிடம் கூட நான் மூச்சு விடவில்லையே... இப்போது சொன்னால் பெரிய பிரச்னை ஆகிவிடலாமே....'' சார்லிக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.

''ஆனால் ஒரேயொரு பிரச்னை...'' சார்லியின் வக்கீல் விடுவதாயில்லை.

''என்ன?'' என்றார் நீதிபதி.

''சார்லிதான் அந்த கோக்கைக் குடித்தான் என்பது 'பிசிஆர்' மூலம் நிரூபணம் ஆனாலும், அவன் அந்த வீட்டில் வேலை செய்யும்போது எப்போதாவது குடித்திருக்கலாமே... கொலை நடந்த அன்றுதான் குடித்திருக்க வேண்டுமென்பதில்லையே.... இது ஒரு தடயமா?'' என்றார் வக்கீல்.

சார்லிக்குத் துள்ளிக் குதிக்க வேண்டும் போலிருந்தது. இந்த வக்கீல், வாங்கும் பணத்துக்கு வஞ்சனை இல்லாமல் வாதாடுகிறானே.... வக்கீலுக்குத் தன் மனசுக்குள்ளேயே ஒரு ஷொட்டு கொடுத்தான் சார்லி.

ராண்டி மில்லர் அமைதியாக எழுந்து போய் அரசாங்க வக்கீலிடம் எதையோ கொடுத்தான். அவருடைய காதில் எதையோ சொல்லிவிட்டு தன் இடத்துக்குத் திரும்பினான்.

அரசாங்க வக்கீல் எழுந்தார்.

''போலீஸின் தடயமாக இந்த வீடியோ டேப்பை நான் சேர்க்கிறேன். இதைப் பார்த்தால் எல்லாம் புரிந்து விடும்...'' என்றார்.

வீடியோ சாதனங்கள் வந்தன. டேப் ஓடியது.

அதோ... சார்லி லிங்கன் தெருவில் அந்த வீட்டின் பின்புறக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைகிறான்... சமையலறைக்குள் வந்து கோக் பாட்டிலை எடுத்துக் கொள்கிறான்... பெருமூச்சு... விரைந்து வெளியே போகிறான்....

மொத்தமே எண்பது வினாடிகள்தான் டேப் ஓடியது. டேப் ஓடியபோது படத்தில் தேதி, நேரம் பதிவாகியிருந்தன. கொலை நடந்த நாள்... மாலை ஏழரை மணியளவு...

''கொலை நடந்த அன்று சார்லி எதற்காக லிங்கன் தெருவில் அந்த வீட்டிற்குள் போய் கோக் பாட்டிலை எடுத்துப் போக வேண்டும்?'' என்று அரசாங்க வக்கீல் கேட்டதற்கு சார்லியின் வக்கீலிடம் பதிலில்லை.

நீதிபதி ராண்டியிடம் விவரம் கேட்டார்.

ராண்டி வீடியோ பற்றி விளக்கினான். ''கட்ரீனா என்னிடம் சொன்னதை வைத்து, கோக் பாட்டிலைத் தடயமாக்கினேன். சார்லியின் மேல் உடனடியாகச் சந்தேகம் வந்தது. தடயமே இல்லாமல் கொலை செய்ய வேண்டுமென்பது கொலைகாரனுக்கு ஏற்படும் வேட்கை. அதனால் கோக் பாட்டில் அவனுக்கு நினைவு வரலாமே என்ற நம்பிக்கை... நான் அந்த வீட்டிலேயே வீடியோ காமிராவுடன் இரண்டு மூன்று நாட்கள் கூடத் தங்கலாம் என்று நினைத்தேன்... சார்லி என்னை ஏமாற்றாமல் அன்று மாலையே வந்து சேர்ந்தான்... அவனுக்காக வேறொரு கோக் பாட்டில் அங்கு தயாராக இருந்தது அவனுக்குத் தெரிய நியாயமில்லை... விஞ்ஞானம் அளித்த தடயம் முக்கியம்தான்.... ஆனால் சார்லியைப் போன்ற கொலைகாரர்களுக்கு எதிராக நம் திறமையையும் அனுபவத்தையும் காட்டணுமே...''

ராண்டி முடித்துவிட்டு சார்லியைப் பார்த்தான். சார்லிக்கு டிடெக்டிவ் ராண்டி மில்லரிடம் புது மரியாதை ஏற்பட்டது!

சரத்பவார் முதல் சச்சின் டெண்டுல்கர் வரை, சசி கபூர் முதல் சல்மான் கான் வரை, பலப்பல பிரபலங்கள் வரிந்து கட்டிக் கொண்டு வரிசை வரிசையாகக் கையெழுத்திட்டு, ஒரு ரயில் பாதைத் திட்டத்துக்கு ஆதரவு திரட்டுவது சரித்திரத்தில் இதுதான் முதல் தடவையாக இருக்கும். காரணம், கொங்கண் ரயில்வே திட்டத்துக்கு எழுந்துள்ள எதிர்ப்புதான். எதிர்ப்பாளர்கள் ஏன் எதிர்க்கிறார்கள்? ஆதரவாளர்கள் என்ன சொல்கிறார்கள்? பார்ப்போம்...

வி. பி. சிங் பிரதமராக இருந்த போது, ரயில்வே அமைச்சராக இருந்த ஜார்ஜ் பெர்னாண்டஸ் ஆரம்பித்து வைத்தது தான் கொங்கண் ரயில்பாதைத் திட்டம். மகாராஷ்டிராவிலுள்ள ரோஹாவிலிருந்து மங்களூர் வரை மேற்குக் கடற்கரையையொட்டி 760 கி. மீ. நீளத்துக்குப் புதிய ரயில் பாதை! சிங் அமைச்சரவை ராஜினாமா செய்து விடவே, அந்தத் திட்டம் அம்போ என்று கொஞ்ச காலம் விடப்பட்டது.

திட்டத்தால் என்ன பயன்?

கொங்கண் ரயில் பாதையை உபயோகிக்க ஆரம்பித்தால், போக்குவரத்துத் தூரம் சுருங்க, எரிபொருள் மிச்சப்படும். அதனால் சுமார் 200 கோடி ரூபாய் அந்நியச் செலாவணி லாபமாகும். பெட்ரோலிய ரசாயனத் தொழிற்சாலை உருவாகவும், பதப்படுத்தப்பட்ட உணவுகள் (குறிப்பாக மீன் வகைகள்) விற்பனை பெருகவும், சுற்றுலாத் துறை விரிவடைந்து வளர்ச்சி பெறவும் ஏராளமான வாய்ப்புகள் உருவாகும். தொழிற் பெருக்கம் நிறைந்த மகாராஷ்டிர மாநிலத்துக்கு, கோவா - கர்நாடகா - கேரளா சந்தைகளை வெகு நெருக்கமாக்கி விடும். இத்திட்டம் அரங்கேறினால் பத்தே மணி நேரத்தில் பம்பாயிலிருந்து கோவா சென்றுவிடலாம். பம்பாய் - மங்களூர் பயணம், இப்போது 41 மணி நேரம் பிடிக்கிறதல்லவா? இனி 15 மணி நேரத்திலேயே போய்ச் சேர்ந்து விடலாம். பம்பாய் - கொச்சிப் பயணம் 24 மணி நேரத்தில்! (இப்போது 36 மணி நேரம்.) இந்த நவீனப் பாதையில் மணிக்கு 160 கி. மீ. வேகத்தில் செல்லக் கூடிய ரயில்களை விட முடியும்.

சவால் :


நாடு முழுக்க ரயில் பாதை அமைத்த பிரிட்டிஷ்காரர்களே இந்த மாதிரி ஒரு திட்டம் போட முனையவில்லை. ஏனென்றால் அத்தனை கஷ்டம்! குறுக்கிடும் பாலங்கள் 1670. கும்மிருட்டுக் குகைகள் 73. குதுப்மினார் உயரத்துக்குச் சில இடங்களில் தூண்கள் எழுப்பியாக வேண்டும்! அதனால், இந்திய ரயில்வே இஞ்சினீயரிங் துறைக்கு இது ஒரு இமாலயச் சவால்! 'மார்ச் 95 க்குள் முடித்து விடுவோம்' என்று உறுதியளித்திருக்கிறது ரயில்வே நிர்வாகம். அப்படிச் செய்தால், அது இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய சாதனையாகக் கருதப்படும்.


முட்டுக்கட்டை...!

கோவா, மங்களூர் பஸ் முதலாளிகள்தாம் முதலில் இத்திட்டத்துக்குக் குறுக்கே நின்றார்கள். அவர்களின் சுய நலத்தை வெளிச்சம் போட்டுக் காட்டிய பின் வாயடைத்துப் போய் விட்டார்களாம்.

மங்களூர் பகுதியிலிருந்தும், மகாராஷ்டிரா பகுதியிலிருந்துமாகச் சுமார் 50 சதவிகித வேலைகள் இந்த மூன்று வருடங்களில் முடிந்துவிட்டன. ஆனால் கோவா பகுதி வந்த போது மீண்டும் தோன்றியது முட்டுக்கட்டை!

கடற்கரைப் பாதைகளிலும், முகத்துவாரங்களிலும் பிரம்மாண்ட சிமெண்ட் தூண்கள் நிறுவப்பட்டு ரயில் பாதை அமைத்தால், அது கோவாவின் இயற்கை எழிலைப் பாதிக்கும்; வயல்களுக்கு நடுவே ரயில் பாதை அமைக்க நேரும்போது, விவசாயிகளின் நிலங்கள் பறிபோகும். கிறிஸ்துவத் தலங்களை





• மும்முரமான பணி....

இடையூறுகளை வென்று ஓர் இமாலயச் சாதனை!

யும் மாதா கோயில்களையும் மறைத்துக் கொண்டு குறுக்கேயும் நெடுக்கேயும் பிரம்மாண்ட சிமெண்ட் தூண்கள் எழுந்து நின்றால், அவை கோவாவின் பாரம்பரியப் பெருமையைக் குலைக்கும். ரயில் பாதை அமைந்து விட்டால் கோவாவிலும் தொழிற்சாலைகள் பெருகி, மக்கள் தொகையும் கூடி, கத்தோலிக்க இனத்தின் தனித்தன்மையே பாழாகிவிடும் என்று சுற்றுச்சூழல்காரர்கள் மற்றும் கத்தோலிக்கப் பிரிவினரின் எதிர்ப்பு. பணிகள் நிறுத்தப்பட்டன! கத்தோலிக்கரான சோனியாவும் இதற்கு ஒரு காரணம் என்று கிசுகிசுக்கள் அடிபட்டன.


ஓசா கமிட்டி :

எதிர்ப்புகள் கிளம்பியதும், மத்திய அரசு நீதிபதி ஓசாவின் தலைமையில் ஒரு கமிட்டி அமைத்தது. இந்த செப்டம்பரில், ஓசா தமது அறிக்கையைச் சமர்ப்பித்தார். அதன் விவரங்களை இதுவரை வெளியிடவில்லை. ஆனால், எதிர்ப்பாளர்களின் வாதத்தில் போதிய சரக்கு இல்லை என்பதை மட்டும் ஓசைப்படாமல் வெளிப்படுத்தி விட்டார் ஓசா. (இதற்கு முன்பு மத்திய அரசு '91 இல் நியமித்த மௌனிஸ் கமிட்டியும் சரி, '92 இல் நியமிக்கப்பட்ட டாக்டர் கமலா சௌத்ரி கமிட்டியும் சரி, பாதையை மாற்றிப் போட அவசியமில்லை, திட்டம் சரியானது தான் என்றே கருத்துத் தெரிவித்திருந்தன.) பிரதமருக்கும் ரயில்வே போர்டுக்கும் ஓசா அறிக்கை அசாத்திய தைரியத்தைக் கொடுத்தது. மறுபடி வேலை உடனடியாகத் தொடங்கியாக வேண்டும் என்று உத்தரவு போட்டு விட்டார் பிரதமர்.


எதிர்ப்பில் சாரமில்லையா?

கோவாவின் அழகை இந்த ரயில் பாதை பாதிக்கும் என்போருக்கு ரெடியான பதில் வைத்துள்ளனர் உள்ளூர் மக்கள். ''கற்றுலா பெருக காங்கிரீட் கட்டடங்களும் ஹோட்டல்களும் கட்டி, இயற்கை அழகை அழித்த போது, இந்த எதிர்ப்பெல்லாம் எங்கே போயிற்று?'' என்று அவர்கள் கேட்கிறார்கள். 'காட்டுமிராண்டிகள் போல முன்னேற்றம் எதுவுமே இல்லாமல் இருக்க வேண்டும் என்பது எத்தனை தவறான மனப்பான்மை!' என்று குத்திக் காட்டுகிறார்கள் இவர்கள்.

பிருதுவான கழனி நிலங்கள், இப்படிப்



● கையெழுத்து வேட்டை


● கோவா : இயற்கை எழில் பாழாகுமா?

பட்ட ராட்சதத் தூண்களைத் தாங்காது என்று கதை கட்டினர், ஒரு சாரார். 'நவீன தொழில் நுட்பம் பொகாரோவிலும், காண்ட்லாவிலும் பெற்ற வெற்றிகளைப் போய்ப் பார்க்கட்டும்' என்று இதற்குச் சுடச்சுடப் பதில் சொல்லுகிறார்கள் கொங்கண் ரயில்வே அதிகாரிகள்.

'இதற்காக ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களுக்குக் கொடுக்கப்படும் சட்டுத் தொகை போதாது என்று கோர்ட்டுக்குப் போயிருக்கிறார்கள் சிலர். ஆனால் அதைச் சமாளித்து விடுவோம். வேலையில் தடங்கல் எதுவும் தொடராது' என்கிறது கொங்கண் ரயில்வே நிர்வாகம்.


நிதி வசதிக்கு என்ன வழி?

தொடக்கத்தில் ஜப்பானிய நிதி அமைப்பும், ஏஷியன் டெவலப்மெண்ட் வங்கியும் நிதியுதவி செய்தன. இப்போது மேலும் நிதி தேவை. அதற்காக, பத்தரை சதவிகித (பாண்டு) கடன் பத்திரங்களை வெளியிட்டிருக்கிறது கொங்கண் ரயில்வே. ''இந்த வருஷத்துக்கு இதுபோதும்!'' என்கிறார் இதன் தலைவர் ஸ்ரீதரன். வங்கிகள் மூலம் இந்த பாண்டுகள் எளிதாக விற்பனை செய்ய வேண்டும் என்று பிரதமரின் அலுவலகம் வேறு கேட்டுக் கொண்டிருக்கிறது. ''பத்து வருஷத்திலேயே கடனையெல்லாம் திருப்பிக் கொடுத்து விடுவோம்!'' என்கிறார் ஸ்ரீதரன்.

பச்சைக் கொடி படபடக்க, வேகம் எடுத்துவிட்டது கொங்கண் ரயில் திட்டம்.

– சாருகேசி




ல்யாண ரிஸப்ஷனில் பதினைந்து தவறுகள். பொழுது
போகாத போது தேடிப் பார்க்கலாம். அவசரக்காரர்கள்
48 ஆம் பக்கத்திற்கு ஓடலாம்.

உழவன் கணக்கு

ராமையா தாத்தா நல்ல பாட்டாளி. சதா நேரமும் 'மாங்கு மாங்கு' என்று மண் வெட்டியால் எதையாவது வெட்டிக் கொண்டோ, வேறு வேலை புரிந்து கொண்டோதானிருப்பார். வயதான காலத்தில் பேசாம வயலை 'ஒத்திக்கு' விட்டுட்டு அக்கடான்னு வீட்ல கெடக்க வேண்டியது தான...' இது மாதிரி யாராவது அவரைப் பரிவுடன் கேட்டால், ''நெலம் வச்சிருக்கிறவனெல்லாம் பொறுப்பில்லாம போயிட்டா அப்புறம் ஜனங்களுக்கு சோறு கெடக்காதுப்பா...'' என்று நெகிழ்ச்சியாய்க் கூறுவார்.

அப்படி ராப்பகலாய் வியர்வை சிந்தி உழைத்ததின் பயனால் இன்று அவருக்கு நல்ல கண்டுமுதல் காத்திருந்தது. கையில் காசில்லாவிட்டாலும் 'கடனோ உடனோ' வாங்கி, பயிருக்குச் செய்ய வேண்டியதைச் செய்துவிடுவார். கருக்கலோடவே ஆட்கள் வந்து அறுத்துப் போட்டு விட்டு ஆகாரம் சாப்பிடச் சென்றிருந்தார்கள். பூரணமான சந்தோஷத்துடன் வரப்பில் உட்கார்ந்த வண்ணம் அறுத்துக்கிடக்கும் அரிகளையே பார்த்தபடி அமர்ந்திருந்தார். சாயங்காலம் 'செண்டரில்' விட்டுவிட்டு யார்யாருக்குப் பணம் செட்டில் செய்ய வேண்டுமென்று கணக்குப் பண்ணிப் பார்த்தார்...

''தாத்தா... இந்த வருஷமாச்சும் எனக்கு கொலுசு வாங்கித் தரணும்...'' பேத்தி கெஞ்சலும், கண்டிப்புமாய்க் கேட்டாள்.

''சரிதான் போ. நடவுக்கு அடகு வச்ச உன் தோட்ட மீட்டுக் கொடுத்தாலே பெரிசு. இந்த வருஷம் உரம் வெலயெல்லாம் 'டபுளாப்' போச்சி. சொச்ச காலத்துக்கு என்ன ஆவப் போவுதோன்னு நா இருக்கேன். இதில கொலுசாம் கொலுசு...''

''அதெல்லாம் எனக்குத் தெரியாது. நீ கொலுசு வாங்கித் தரணும்....'' அவள் சில வருஷமாகக் கேட்டு நிறைவேறாமல் போனதால், இந்த வருஷமாவது கிடைக்குமா என்ற சந்தேகத்தில் கண்ணைக் கசக்கியபடி வாளியை எடுத்துக் கொண்டு போனாள்.

''அதெல்லாம் உங்களுக்குத் தெரியாதுதான். விவசாயம் பண்றவன் வேதன கடவுளுக்கே தெரியு தான்னு சந்தேகம்தான்...''

சாப்பிடச் சென்ற ஆட்கள் வர, வேலை மும்முரமாகியது. அவர்களோடு கூடமாட சேர்ந்து தாத்தாவும் வேலை செய்தார். கையை கட்டிக் கொண்டு நிற்பதோ, வரப்பில் குடை பிடித்துக் கொண்டு உட்காருவதோ அவருக்குச் சிறிதும் பிடிக்காத விஷயம்.

அரிகளைக் கட்டாக்கி களத்து மேட்டுக்குக் கொண்டு சென்று அடித்து, சுறுக்காய் போக்கி சுத்தம் பண்ண அந்தி சாய்ந்து விட்டது.

வாடகைக்கு வண்டி அமர்த்தி 'செண்டருக்கு' நெல்லை எடுத்துச் சென்றார். சுற்று வட்டாரத்து நெல் அனைத்தும் வந்து மலையாய்க் குவிந்திருந்தன.





'அடேங்கப்பா... இந்த வருஷம் நல்ல வெளச்சதான்...' என்று தாத்தா ஆச்சரியப்பட்டார்.

அடுக்கியிருந்த நெல் மூட்டைகளின் மேல் தார்ப்பாய் விரித்து 'மூட்டை செட்' ஆட்கள் சீட்டு விளையாடிக் கொண்டிருந்தார்கள். கையில் ஆளுக்குத் தகுந்தார்போல் பீடி, சிகரெட், சுருட்டு என்று புகைந்து கொண்டிருந்தது. அந்த இடம் பூராவும் சாராய நாற்றம் நிறைந்திருந்தது. மற்ற காலங்களில் எப்படியோ, இந்த அறுவடை சீஸனில் அவர்களுக்கு வாழ்க்கை சாராயம், கறி, மீன் என்று திருப்திக்கு மேல் கொண்டாட்டமாய்த் தானிருந்தது.

மூட்டைகளை ஒரு பக்கமாய் அடுக்கி விட்டு ஆபிசுக்குப் போகும் போது, மேலிருந்து ஒருவன், 'தாத்தா! சாரு இல்ல.... டவுனுக்குப் போயிருக்காரு. பணம் தீர்ந்து போச்சு. இனிமே நாளைக்குப் பத்து மணிக்கு பணம் வந்துதான் நெல்லு புடிப்போம். நீங்க வூட்டுக்குப் போய் சாப்பிட்டு கிப்பிட்டு வந்து படுத்துக்கங்க...''

'வருஷா வருஷம் இதே எளவாப் போச்சி. வந்தமா போனமான்னு இருக்காது. நாத்து விட்டதிலேர்ந்து, அறுத்து காசாக்கிறவரைக்கும் ஒரே பிரச்னைதான். லோனுக்கு பேங்குக்குப் போனா நாளைக்கு வாடான்னு இழுத் தடிப்பான். விதை வாங்க டெப்போவுக்குப் போனா, களைக் கொல்லி வாங்கிக்கன்னு கண்டிசன் போடறான். களையே இல்லாம சுத்தமா வச்சிருக்கிற பங்குக்கு எதுக்குப்பா களைக் கொல்லின்னா, உத்தரவு அப்படித் தாங்கறான். நெல்ல கொண்டாந்தா பணம் இல்லேங்கறான்... கருமண்டா... ச்சே...' - சலித்துக் கொண்டார்.

பகல் பூராவும் வெயிலில் நின்று களைத்துப் போயிருந்தவருக்கு மேலும் களைப்பாய்ப் போயிற்று. ''சரி, போ... முணுமுணுத்து என்னத்த ஆவப் போவுது... தம்பிங்களா... வூட்டுக்குப் போயி ரெண்டு வா சோறு தின்னுட்டு வந்திடறேன். அதுவரைக்கும் மூட்டயக் கொஞ்சம் சாக்கிரதயா பாத்துக்கங்க. கொஞ்சம் அசந்தா முழு மூட்டயக் கூட லவுட்டிக்கிட்டு போயிடுவானுக....''

''நாங்க பாத்துக்கறோம், நீங்க போங்க தாத்தா...'' பீடியை புகைத்த வண்ணம் ஒருவன் தைரியமூட்டினான்.

'எதுக்கும் சீக்கிரம் வந்திடணும்' என்றபடி விரசாய் நடந்தார்.

தாத்தா சென்றதைக் கவனித்துக் கொண்டிருந்த ஒருவன், அவர் போய் விட்டார் என்பதை ருசுப்படுத்திக் கொண்டு கீழே குதித்தான். தயாராய் வைத்திருந்த சாக்கையும், குத்தூசியையும் எடுத்துக் கொண்டு தாத்தாவின் நெல் மூட்டைகளை நெருங்கினான். யாரேனும் கவனிக்கிறார்களா என்று ஒருமுறை சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு காரியத்தில் இறங்கினான். கீழே சாக்கை விரித்து விட்டு, குத்தூசியை மூட்டையில் செருகினான். அதன் இடுக்கு வழியாக நெல் சன்னமாகக் கொட்டியது.

புதூர் வள்ளுவன்

பரக்க பரக்க சாப்பிட்டுவிட்டு இருப்புக் கொள்ளாமல் விரைவாகத் திரும்பி வந்து, மூட்டை மேல் துண்டு விரித்துப் படுத்துக் கொண்டார்.

காலையில் பத்து மணிக்கு மேல்தான் மூட்டை எடை வைக்க ஆரம்பித்தார்கள். இவரின் நெல்லை சாக்கு மாற்றி எடை போட மூன்று மணியாகிவிட்டது.

நெல்லை சாக்கு மாற்றும் போது ஏகமாகச் சிதறியதை ஆட்கள் பொருட்படுத்தாதது கண்டு நெஞ்சு கொதித்தார். எவ்வளவோ கெஞ்சினார். ஒவ்வொன்றாய்ச் சேர்த்து பொறுக்கி வந்ததை எடுத்துச் சொன்னார். அவர்கள் அதைப் பற்றி ஒன்றும் கவலை கொள்ளாமல் வேலை செய்தார்கள். 'அடப் பாவிங்களா... அடப்பாவிங்களா...' என்று ஈனமாக முனகிக் கொண்டார். வருஷா வருஷம் இதே தொந்தரவு இருந்தாலும், இதற்கு எந்தத் தீர்வும் ஏற்படாததால் ரொம்ப ஆற்றாமையாக வந்தது. அவரின் பேச்சை மதிக்காத வண்ணம் மேலும், மேலும் மானாங்கண்ணியாக இரைத்தடித் தார்கள்.

''நீங்க வச்சதுதான் இங்க சட்டம். எத வேணும்னாலும் செய்வீங்க... பொட்ட வெயிலுல ரத்த வேர்வ சிந்தி பாடுபட்டாத்தான் உங்களுக்கு கஷ்டம் புரியும். 'தேடறான் பழனியாண்டி; திங்கறான் முனியாண்டி'ங்கற மாதிரி உங்களுக்கென்ன...''

''யோ, தாத்தா.. கம்மா கத்திக்கிட் டிருந்த, மூட்டயத் தூக்கி ஓரங்கட்டிடு வோம். பேசாம கம்முனு கெட.....''

பொங்கி வந்த ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு கம்மென்று ஆகிவிட்டார். இல்லையென்றால், வேண்டுமென்றே இன்னும் இழுத்தடித்து, கழுத்தறுத்து விடுவார்கள். ஊரில் 'பெத்த பேராய்' உள்ளவனையெல்லாம் கூட அவர்கள் ஆட்டி வைத்திருப்பது தெரியும்.

ஒரு வழியாய் எடை போட்டு கணக்குப் பார்த்து காசு தந்தார்கள். மூட்டைக்கு ஒரு ரூபாய் வீதம் எடுத்துக் கொண்டதாய் கிளர்க் சொல்ல,

''என்னப்பா இது அநியாயம்... நீ பாட்டுக்கு உன் வீட்டுக்காக மாதிரி எடுத்துக் கிட்டேன்னு சொல்ற... எவ்வீட்டு நெல்ல போட்டுட்டு நான் காசு வாங்கறேன். அதில நீ எடுத்துக்கறேன்னு சொன்னா என்னப்பா நியாயம்...?''

''தோ பாருங்க பெரியவரே... கவர் மெண்ட்ல நெல்லுப் புடிக்க மட்டுந்தான் காசு தர்றாங்க. லாரிக்கு மாமூல் கொடுக்கிறத்துக்கெல்லாம் தர்றதில்ல. மாமூல் கொடுத்தாத்தான் இங்க உள்ள நெல்ல எல்லாம் எடுத்துக்கிட்டுப் போக முடியும். இல்ல, கொடோன் வசதியு மில்ல, வெளியில அடுக்குறத்துக்கு போதுமான இட வசதியுமில்லன்னு நெல்லு புடிக்கிறத நிப்பாட்டிட வேண்டியதுதான். அதுமட்டுமில்ல, இந்த காச நான் மேலவரைக்கும் அனுப்பணும்... இல்லாட்டி என்ன ராவிடுவானுக...''

மேல அனுப்பணும் என்றதும், அவர் அப்பாவியாய் அண்ணாந்து பார்க்க, பக் கத்தில் நின்றவர்கள் நக்கலாய்ச் சிரித்தார்கள். அவர் யோசனையோடு கையில் பணத்தை வைத்தபடியே நின்றார்.

''தாத்தா உங்ககிட்ட மட்டுமல்ல, எல் லாருகிட்டயுந்தான் வசூல் பண்றாங்க. பாவம் பி.சி சாரு என்ன பண்ணுவாரு, மேல உள்ள ஆபிஸருங்க இவருகிட்ட வீதம் போட்டு பணம் கேட்டுத் தொந்தரவு பண்றாங்க. விடுங்க. பணத்த பத்ரமா மடியில வச்சிக்கிட்டு கௌம்புங்க...'' தெருக்காரன் ஒருவன் அவரைச் சமாதானப்படுத்தினான். ஆனாலும், அவரால் சமாதானமாக முடியாமல் மிகவும் மனக்கஷ்டத்தோடு நகர்ந்தார்.

நகை அடகு வைக்க பேங்கு பேங்காய் நாயாய் அலைந்ததோ, ராப்பகலாய் உழைத்ததோ, மண்வெட்டியால் காலை வெட்டிக் கொண்டு நொண்டி நொண்டி கஷ்டப்பட்டதோ கூட அவருக்குப் பெரிதாய்த் தெரியவில்லை. சம்பந்தமில்லாமல் எவனோ எடுத்துக் கொள்வதைத்தான் அவரால் பொறுக்க முடியவில்லை.

''போதுண்டா சாமி இந்த பொழப்பு... நமக்கு விவசாயம் லாயக்குப்பட்டு வராது. நம்ம வூட்டு காச எடுத்துக்கிட்டு, இளக்காரமா வேற பேசறானுக....'' வழி நெடுக இதே போன்று புலம்பிய வண்ணம் வந்தார்.

''**எ**ன்ன தாத்தா... முணுமுணுத்துக் கிட்டே வர்றீங்க...'' எதிர்பட்ட, எதிர்த்த வீட்டு அப்பு விசாரித்தான். அவன் டவுனில் வியாபாரம் செய்து வருகிறான்.

''அட யாண்டா தம்பி இந்த அநியாயத்தக் கேக்கிற...'' என்று விசாலமாய் விவரத்தைச் சொன்னார்.


''தாத்தா.... உங்களுக்கெல்லாம் நல்லா வேணும். வயசாயிட்டுல்ல, பெசாம நிலத்த வித்து பேங்கில போட்டுட வேண்டியது தானே? வட்டி வரும். வாங்கி சாப்பிடலாம். இல்ல, எங்கூட டவுனுக்கு வாங்க, 'கந்து வட்டிக்கு' விட்டு ஒரே வருஷத்தில டபுளாக்கிடலாம். வேலி, வேலியா நெலம் வச்சிருந்தவனெல்லாம் இன்னிக்கு என்ன பண்ணியிருக்கான் தெரியுமா? நான் சொன்னதைத்தான் செஞ்சிருக்கான்.... ஆனா, நீங்க மட்டும் மாடா உழைச்சி பிரயோசனமில்லாம தேயிறீங்க... சரின்னு ஒரு வார்த்த சொல்லுங்க. இந்த வருஷமே ஏற்பாடு பண்றேன்....''

அவர் ஒன்றும் பதில் சொல்லாமல் வர, ''என்ன தாத்தா யோசிக்கிறீங்க. உழவன் கணக்குப் பாத்தா உழக்குக்குக்கூட மிஞ்சாதுன்னு அப்பவே தெரிஞ்சித்தான் சொல்லியிருக்கான்...''

''தம்பி... நீ சொல்ற மாதிரி விவசாயம் பண்றத்துக்கு பயந்துக்கிட்டு, எல்லாரும் போட்டுட்டா அப்புறம் எப்படித்தான் நெல்லு வெலய வைக்கிறது? உழவன் கணக்குப் பாத்து எதுக்கு மிஞ்சித்தோ மிஞ்சிலயோ, ஆனா சோத்துக்கு மிஞ்சித்தே. அது போதும்போ... எதோ அவனுக தெரியாம செய்யறானுக. நம்மளால நாலு பேரு பொழச்சதாயிருக்கட்டும் விடு...'' அவர் சர்வ சாதாரணமாக சொல்லிக் கொண்டு வந்ததும், இவன் நடையை நிறுத்திவிட்டு அவரை ஒரு மாதிரியாகப் பார்த்தான்.

''நீங்க எல்லாம் திருந்த மாட்டீங்க. எங்கப்பனும் இதே மாதிரிதான். போங்கய்யா, போங்க... எவ்வளவு பட்டாலும் புத்தி வராது. இன்னும் நாய் மாதிரி அடிபடப் போறீங்க பாருங்க...'' அவன் விடுவிடுவென கடுப்பாக நடந்து போனான்.

''இவனுக்கெல்லாம் என்னத் தெரியும். சின்ன பசங்க...'' என்றபடி நடந்தார். 'இந்த வருஷமும் பேத்திக்கு கொலுசு வாங்க முடியாது' என்று மனசுக்குள் எண்ணிக் கொண்டார்.





சங்கீத கலாநிதி ஸ்ரீ கே. வி. நாராயணசாமி, ஸ்ரீமதி பத்மா நாராயணசாமியின் புதல்வி
சௌபாக்கியவதி அனுராதா

ஸ்ரீ எஸ். கிருஷ்ணமூர்த்தி, ஸ்ரீமதி ராஜி கிருஷ்ணமூர்த்தியின் புதல்வன்
சிரஞ்சீவி சுரேஷ்

சுரேஷ் - அனுராதா திருமணம் நவம்பர் 15, 1993 அன்று சென்னை, ஸ்ரீ ராமசு கல்யாண மண்டபத்தில் கோலாகலமாக நடந்தேறியது. முகூர்த்தத்துக்கும் மாலை வரவேற்பின் போதும் நடைபெற்ற சங்கீத கலாநிதி, டாக்டர் எம். எஸ். சுப்புலட்சுமியின் இன்னிசைக் கச்சேரிக்கும் ஏராளமான நண்பர்களும் இசைத் துறை அன்பர்களும் வந்திருந்து, தம்பதிகளை வாழ்த்தினார்கள். வாழ்க மணமக்கள்!

பாண்டியன் மகன்

48. ஸ்ரீவல்லபர் நம்பிக்கை

அபாயம் அருகிலேயே உறைவதை அறியாது மதுரையின் அரண்மனையில் திருமணத்திற்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடந்து கொண்டிருந்தன. குலை தள்ளிய வாழைகள் வாசல்புறத் தூண்களை அலங்கரிக்க, தஞ்சையின் வாசனைப் பொருட்களும் சேரலாதன் அளித்த சந்தனமுமாக அரண்மனையே மணந்து கொண்டிருந்தது.

ஸ்ரீ வல்லபரின் 'ஆகா ஆகா' என்ற உற்சாகச் சிரிப்பும் பேச்சும் அதிர வைத்துக் கொண்டிருக்க, அனேகமாக அனைத்து பணியாட்களின் முதுகிலும் அவரது கைரேகைகள் பதிந்திருந்தன. மதுரை மாநகரத்துத் தெருக்களில் வண்ண வண்ணக் கோலங்களும், மரகதத் தோரணங்களும், மலர்களும் வரவேற்பளிக்க, அந்த நகரத்தின் அனைத்து சௌபாக்கியத்திற்கும் நாமே அதிபதியென்று அறிவித்த மீனாட்சி ஆலயத்தின் மணிகள் ஓயாது ஒலித்துக் கொண்டிருந்தன.

கார்குழலியின் சுருண்ட கூந்தலும் நாணத்தில் சிவந்து கன்றிவிட்ட முகமும் வேளைக்கொரு வண்ணமாக அம்மங்கை செய்த அலங்காரமும் அவளை தேவலோகத்துப் பெண்ணாகவே மாற்றியிருந்தது. அம்மங்கையின் பரிகாசப் பேச்சில் கார்குழலிக்குப் பிராணனே போய் விடும் போலிருந்தது. விக்கிரமனோ அம்மங்கையைக் கண்டதுமே தலை தெறிக்க ஓடிக் கொண்டிருந்தான்.

திருமணத்தின் முதல் நாள் அனைத்து சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் முடித்து, மேன்மாடத்தில் அமர்ந்திருந்த கார்குழலியைக் கண்கள் நிறையக் கண்ட அம்மங்கையின் இதழ்களில் வருத்தம் நிறைந்த புன்னகை ஒன்று மலர்ந்திருந்தது. ''கார்குழலி'' - என்றழைத்த அவள் குரலில் கனிவுமிருந்தது.

''என்ன அம்மங்கை?''

''மணம் முடிந்தபின் நான் உறையூர் சென்று விடுவேன்.''

கார்குழலிக்கும் பிரிவின் நினைவு அப்பொழுதே தோன்றியதால் அவள் அகன்ற விழிகளிலும் மெல்லக் கலக்கம் தோன்றியது. இருவரையும் மௌனம் ஆட்கொள்ள, நான்கு மலர்க் கரங்களும் ஒன்றுடன் ஒன்று பிணைந்து கொள்ள விழிகள் ஏதேதோ கதைகள் பேசின.

அந்த நிலையில் அறைக்குள் வேகமாக நுழைந்த விக்கிரமன், அவர்களிருந்த நிலையைக் கண்டு, நாலு விழிகளும் கலங்கியிருப்பதைப் பார்த்து, சற்றே தயங்கிய போதிலும், அதிகம் தாமதியாமல், ''அம்மங்கை! முக்கியமான செய்தி, மார்த்தாண்டன் மதுரைக்கு வந்திருக்கிறான்'' என்றான்.

''என்ன?'' - அதிர்ச்சியுடன் கார்குழலியை நோக்கினாள் அம்மங்கை. விக்கிரமனது வரவால் சிவந்து, தரையை நோக்கியபடியிருந்த கார்குழலியின் முகம் நிமிர்ந்து அகன்ற விழிகள் அவனை நோக்கின.

''இங்குள்ள சிலரும் அவனுக்கு உதவ முற்பட்டிருக்கிறார்கள். எனவே நாம் எச்சரிக்கையுடனிருக்க வேண்டும்'' என்று விக்கிரமன் கூறிக் கொண்டே இருக்கும்போது அறைக்கு வெளியே அரவம் கேட்டது.

காலிங்கராயன் பின் தொடர, மன்னன் நுழைந்தான்.

''விக்கிரமா, மார்த்தாண்டனின் திட்டம் பற்றி ஏதும் அறிந்தாயா?''

''இன்னும் முழுமையாக அறியவில்லை. ஆனால் அவன் நோக்கம் என்னையும் கார்குழலியையும் ஒழிப்பது.''

''அது*எப்படித் தெரிந்தது?''

மன்னன் கேள்விக்குப் பதிலாகக் கச்சையிலிருந்து ஒரு ஓலையை

விஷ்வக்சேனன்

எடுத்து நீட்டினான் விக்கிரமன். ஓலையை வாங்கிச் சற்று உரக்கவே படித்தான் காலிங்கராயன்.

''சோழ இளவலுக்கு வணக்கம். திருமண ஊர்வலத்தில் தங்களையும் பாண்டிய இளவரசியையும் கொல்லத் திட்டமிடுகிறான் மார்த்தாண்டன். நேரில் விபரம் கூறுகிறேன். எச்சரிக்கை - அரையன் மதுராந்தகன்.''

''மதுராந்தகன் இங்குதானிருக்கிறானா?'' - காலிங்கராயனின் கேள்வி இளவரசிகளின் முகத்திலும் பிரதிபலித்தது.

விக்கிரமன் மெல்ல பதில் கூறினான் : ''காலிங்கராயரே, மதுராந்தகன் இங்கு வந்து ஆறுநாட்களாகின்றன!'' - அம்மங்கை திகைத்தாள். ஆறு நாட்களுக்கு முன்பே வந்துவிட்ட அரையன் ஏன் தன்னையும் மற்றவர்களையும் சந்திக்க வரவில்லை? ஏதும் ஆபத்தில் சிக்கியிருக்கிறாரோ?

அவள் சித்தத்தில் ஓடிய கேள்விகளுக்கு எவரும் விடை கூறும் நிலையில் இல்லை.

''என்ன நடக்கிறது இங்கே?'' - வெண்கலக்குரல் ஒலிக்க ஸ்ரீ வல்லபர் உள்ளே நுழைந்தார். மன்னனிருப்பதைக் கண்டவர், சற்று குரலை அடக்கி மெல்ல விசாரித்தார்.

''என்னையும் கார்குழலியையும் கொல்ல மார்த்தாண்டன்....'' - விக்கிரமன் வார்த்தைகளை முடிக்குமுன் ஸ்ரீவல்லபர் அந்த அறையே அதிரும்படி இரைந்தார்.

''என்ன? அவனைக் கண்டுபிடித்து தரையோடு தரையாக நசுக்கி விட்டுத் திரும்புகிறேன்'' என்று அதிவேகமாகக் கிளம்பினார் ஸ்ரீவல்லபர். அவர் பற்களை நறநறவெனக் கடித்த ஒலி தெளிவாகக் கேட்டது.

விக்கிரமன் குரல் அவரைத் தடுத்தது : ''ஸ்ரீவல்லபரே, இந்த ஓலையைப் பாரும்.''

''என்ன ஓலை இது?'' கேட்டபடி ஓலையை வாங்கிப் படித்த அவர் முகபாவம் சட்டென்று மாறியது. முகத்தில் ஆனந்தம் தெரிய அவரது வெண்கலக் குரலும் ''ஆகா, ஆகா'' என்று ஒலித்தது.

காலிங்கராயனின் கடுவிழிகள் அவரை நோக்கின. ''என்ன ஆகா?'' - என்றான் படைத்தலைவன் உஷ்ணமாக.

''அரையன் நேரில் வருவதாக எழுதியிருக்கிறானே!''

''இப்போது முதல் ஜாமம் தொடங்கி விட்டது. விடிந்தால் திருமணம்.''

''கண்டிப்பாகத் தக்க சமயத்தில் வருவான்'' - சாவதானமாகவும் திடமாகவும் கூறிய ஸ்ரீவல்லபரை அனைவர் விழிகளும் வியப்புடன் நோக்கின. அரையன் மீது அவருக்கிருந்த நம்பிக்கை அவர்களை அசர வைத்தது.

அதே தருணத்தில் இடையில் தொங்கும் நீண்ட வாளுடனும் வழக்கமான விஷமப் புன்னகையுடனும் அரண்மனையின் முன் வாசலுக்குள் நுழைந்து கொண்டிருந்தான் அரையன் மதுராந்தகன்.

என்றைக்கும் மரணத்தைக் கண்டு அஞ்சாதவனும், எத்தனையோ முறை அதன் பிடியிலிருந்து மயிரிழையில் தப்பியவனுமான மன்னன் குலோத்துங்கனது விழிகளும் கூட அரையன் வருகையை ஆவலுடன் நோக்கின. மறைந்து நின்று தாக்கும் செயல் வெறுப்பையே தந்தாலும், தோல்வியடைந்த எதிரிகளின் இறுதி முயற்சி அதுவாகத்தான் இருக்கும் என்ற உண்மையையும் அவன் அனுபவத்தில் அறிந்திருந்தான். அதை விளக்கவும் தடுக்கவும் வல்ல அரையன் மதுராந்தகனை எதிர்பார்த்து ஆவலுடன் நின்றான்.

கார்குழலியின் அகன்ற விழிகள் விக்கிரமனுடைய கண்களைச் சந்தித்துச் சந்தித்து விலகிக் கொண்டிருந்தன. அதில் மிதந்த அச்சமும், ஆர்வமும், நாணமும், நிதானமான விக்கிரமனது விழிகள் அளித்த ஆறுதலால் அமைதி பெற்றுக் கொண்டிருந்தன. விக்கிரமன் விழிகளில் ஆபத்தைப் பற்றிய கவலை கொஞ்சமும் காணப்படவில்லை. அசாதாரணமான ஒரு ஒளி நிலவியது அவன் முகத்தில். ஆழமான அவன் சிந்தனையின் போக்கையோ, சதியைப் பற்றிய கலக்கத்தையோ அவன் முகம் பிரதிபலிக்காவிட்டாலும் ஆருயிர் நண்பனின் வருகையை அவனும் ஆவலுடன் எதிர்பார்த்தான்.

இப்படி ஒவ்வொருவர் எண்ண ஓட்டத்தையும் பிரதிபலித்த பலவிதமான பார்வைகள் அரையனை நோக்கிப் பாய்ந்தாலும், அவன் ஒன்றுமே நடக்காதது போல் சர்வ சாதாரணமாக அறைக்குள் நுழைந்து மன்னனையும் படைத்தலைவனையும் வணங்கி நின்றான். அவன் முகத்தில் அந்தப் பழைய விஷமப் புன்னகையே நிலவியது.

அம்மங்கையின் அழகிய மருண்ட விழிகளைக் கண நேரமே சந்தித்த அரையனின் விழிகளில் தெறித்த ஆசையும், காதலும், அன்பும், பரிவும் அவளை எங்கோ சுவர்க்கத்திற்கு அழைத்துச் சென்று விட்டதால் அந்த அறையில் அதன் பிறகு நடந்த விவாதத்தையோ பேச்சுக்களையோ கவனிக்கும் நிலையில் அவள் இல்லை. சிவந்த மலர் முகத்தை, தரையை நோக்கித் தாழ்த்தியபடி மௌனமான ஒரு சாட்சியாக அவள் நின்றிருந்தாள்.

•

வணங்கி நின்ற அரையனை நோக்கி முதலில் காலிங்கராயனின் கேள்விக் கணை பாய்ந்தது.

''மதுராந்தகா, ஏன் இத்தனை தாமதம்? மன்னரை இப்படிக் காக்க வைப்பது அழகல்லவே!''



''மன்னிக்க வேண்டும் படைத்தலைவரே. மார்த்தாண்டனுக்கு உதவியாக இருக்கும் இரு பாண்டிய உப தலைவர்களிடம் சிக்கிக் கொண்டேன். விடுபட்டு வர, சற்றுத் தாமதமாகி விட்டது. அதனால்தான் முன்னதாக ஓலையும் அனுப்பினேன்'' என்றான் அரையன்.

அரையனது பதில் அறையிலிருந்தவர்களைச் சற்று அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அப்பொழுதுதான் அவன் உடை சற்று கசங்கியிருப்பதையும் ஒரிரு ரத்தக் கறைகளுடன் காணப்படுவதையும் அவர்கள் கவனித்தனர். அவன் ஒரு போராட்டத்திற்குப் பின்பே அரண்மனையை அடைந்திருக்கிறான் என்பது புரிந்ததால் சற்று பதற்றத்துடனேயே படைத்தலைவன் வினவினான், ''யார் அவர்கள்? எங்கேயிருக்கிறார்கள்?''

''ஜெயதேவன் என்பவனாலும் அவன் உபதலைவர்களாலும் இனி எந்த ஆபத்தும் கிடையாது படைத்தலைவரே, ஆனால் மார்த்தாண்டனும் அவன் உதவிக்கு வந்திருக்கும் கலியன் என்பவனும் தப்பி விட்டார்கள்'' என்றான் அரையன்.

காலிங்கராயனின் விழிகள் பளிச்சிட்டன. "யார்? சிறைச் சாலையில் பணிபுரியும் அந்தக் கலியனா?"

அரையன் தலையாட்ட, "ஆகா! அவன் மீது ஏற்கெனவே சந்தேகம் இருந்தது. இப்போதே அவனை..." என்று எழுந்த காலிங்கராயனை மன்னன் குரல் தேக்கியது.

"காலிங்கராயா, பொறு; முழுவதையும் கேள்" என்றான் மன்னன்.

அரையன் தொடர்ந்தான் : "படைத் தலைவரே! நான் அறிந்தவற்றைக் கூறுகிறேன். சிறைச்சாலைக்கும் தெற்கு எல்லையிலிருக்கும் சிறு வீடு ஒன்றுக்கும் இடையே சுரங்கப்பாதை இருக்கிறது. அதன் வழியே நாளை மாறவர்மனை விடுவிக்கக் கலியன் வீரர்களுடன் வருவதாக இருக்கிறான்."

"தெற்கே செல்லும் பாதையின் துவக்கத்திலிருக்கும் அந்தச் சிறிய வீடா?" காலிங்கராயன் கேட்டான்.

"ஆம். அதுதான். ஜெயந்தன் அங்கு காத்திருக்கிறான்."

ஸ்ரீ வல்லபரின் குரல் இடையில் ஒலித்தது. "அவனுக்கு ஏதும் ஆபத்து நேரிட்டால்?"

"ஜெயந்தனைக் கொல்ல இனிமேல் தான் ஒருவன் பிறக்க வேண்டும்" என்ற அரையன், "படைத்தலைவரே! நீங்கள் ஜெயந்தனுக்குத் துணையாகத் தேர்ந்தெடுத்த ஐம்பது வீரர்களை முதல் ஜாமத்தில் அனுப்பி வைத்தால் போதுமானது" என்றான்.

அருள்வாக்கு

ஒன்றுக்கொன்று உச்சாரணம் மாறுபட்டால் எத்தனை விபரீதம் உண்டாகி விடும் என்பதற்கு, வேதத்திலேயே (தைத்திரீய ஸம்ஹிதையில்) ஒருகதை இருக்கிறது. இந்திரனை வதைக்கக்கூடிய பிள்ளை தனக்குப் பிறக்க வேண்டும் என்பதற்காக த்வஷ்டா என்ற தேவதச்சன் ஒரு மந்திரத்தை ஜபம் பண்ணினான். அப்போது அக்ஷரங்களின் உச்சரிப்பில் உதாத்தம், அநுதாத்தம் என்று சொன்னேனே, இந்த உயர்த்தல் - தாழ்த்தலில் அவன் தப்புப் பண்ணியதாலேயே, அவன் விரும்பின பலனுக்கு நேர் மாறாக, "இந்திரனை வதைக்கக்கூடிய பிள்ளை"க்கு நேர்மாறாக, "இந்திரன் வதைக்கக்கூடிய பிள்ளை, அதாவது இந்திரனால் வதைக்கப்படக்கூடிய பிள்ளை தனக்கு வேண்டும்" என்று இவன் பிரார்த்தித்த

"சரி அனுப்பி வைக்கிறேன்" என்ற காலிங்கராயன் ஒரு சந்தேகம் கேட்டான் : "வீரர்களைச் சாதாரண உடையில்தானே அனுப்ப வேண்டும்?"

படைத்தலைவன் விஷயத்தைக் கிரகித்துக் கொண்டான் என்பதை அவன் கேள்வி புரியவைத்ததால் அவன் கூறியதை ஆமோதித்தான் அரையன்.

"சரி, மார்த்தாண்டனது திட்டம் என்ன?"

"தெற்கு மாடவீதியில் ஊர்வலம் வரும் போது தாக்குவதற்குத் திட்டமிட்டிருக்


"நாலு பேரை நம்பித்தான் இந்தக் காரை வாங்கியிருக்கேன்!"

"ஏன்? வண்டியை வாடகைக்கு விடப் போறியா?"

"ஊஹூம்! எங்கேயாச்சும் வழியிலே நின்னு போனா தள்ளி விடறதுக்கு நாலு பேர் வேணுமே!"

- குமார்





"கல்யாணத்துக்குப் பிறகு நடிக்க வேண்டாம்னு உங்க கணவர் சொல்லிட்டா என்ன செய்வீங்க?"

"வேற என்ன... டைவர்ஸ் தான்!"

- சீர்காழி வி. ரேவதி



தாக ஆகிவிட்டது. கதையும் அப்படியே பிற்பாடு நடந்தது!

ரேடியோவில் ஒரு wave-length க்கு (அலைவரிசைக்கு) கொஞ்சம் தப்பினால் கூட, வேறு ஏதோ ஸ்டேஷனை அல்லவா பிடித்து விடுகிறது? மயிரிழை தப்பாமல் ரேடியோவில் வேவ்-லெந்த் வைத்தால் தானே சரியாகக் கேட்கிறது? இப்படியே தான் வேத உச்சாரணமும். கொஞ்சங்கூட ஸ்வரம் தப்பிப் போகக் கூடாது. வேவ்-லெந்த் மாறினால் ஸ்டேஷன் மாறிவிடுகிற மாதிரி, வேத சப்தம் மாறினால் பலனே மாறிவிடும்.

இதனாலெல்லாந்தான் வேதத்தைக் காதால் கேட்டுப் பாடம் பண்ணவேண்டும் என்று வைத்தார்கள். ''ச்ருதி'' என்று ஸம்ஸ்க்ருதத்திலும், ''எழுதாக்கிளவி'' என்று தமிழிலும் வேதத்துக்குப் பேர் ஏற்பட்டது.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

கிறான். ஆனால் எந்த இடத்திலிருந்து என்று அவன் கூறியது தெளிவாகக் கேட்கவில்லை.''

''அடடா!''

''கவலை வேண்டாம். அதைக் கண்டு பிடிக்கும் பொறுப்பை என்னிடம் விட்டு விடுங்கள். இளவரசர் மட்டும் சற்று எச்சரிக்கையாக இருப்பது நல்லது!'' என்றான் அரையன்.

குலோத்துங்கன் முகத்தில் சிந்தனை படர்ந்திருந்தது. அதைக் கண்ட அரையன், ''மன்னருக்கு ஏதும் சந்தேகமிருப்பின் விளக்கக் காத்திருக்கிறேன்'' என்றான்.

''சந்தேகமொன்றுமில்லை மதுராந்தகா. பாண்டியர் பகையும், சேரனது பொறாமையும் ஈழத்தின் கோபமும் என்றும் தொல்லை தரக் கூடியவைதாம். அவற்றை நிரந்தரமாகத் தவிர்க்க வழியொன்றைச் சிந்தித்துக் கொண்டிருந்தேன். அந்தப் பொறுப்பையும் உன்னிடம் ஒப்படைக்கலாமென்று எண்ணினேன்'' என்றான் மன்னன்.

மன்னன் அப்போது அதைப் பற்றி விரிவாக ஏதும் கூறவில்லை. காஞ்சி திரும்பிய பிறகு பின்னாளில் தனது எண்ணத்தை அவன் அறிவித்த போது பெரும் பொறுப்பு தனக்களிக்கப்பட்டிருப்பதை உணர்ந்து அரையன் மலைக்க நேர்ந்தது.

மன்னன் அங்கிருந்து அகன்றபின் அரையனை நெருங்கிய விக்கிரமனின் வலிய கரங்கள் அவனை அப்படியே அணைத்துக் கொண்டன.

அந்த இரு மகாவீரர்களின் பரஸ்பர அரவணைப்பைக் கண்டு கார்குழலியின் முகத்திலும் அம்மங்கையின் முகத்திலும் விளைந்த வெட்கத்தையும் அதனால் சிவந்து விட்ட வதனங்களையும் கண்ட ஸ்ரீ வல்லபர், ''ஆகா, ஆகா'' என்று கூறியவாறே கையை ஓங்க, அந்த அறையிலிருந்து தப்ப அரையனை விக்கிரமன் ஒருபுறமாக இழுத்து ஒதுக்கினான்.

காலிங்கராயனின் இடி இடியென்ற சிரிப்பொலி அறையை நிறைத்தது.

(தொடரும்)

"உண்மையைச் சொல்லுங்க! உங்களுக்குப் பைக் ஓட்டத் தெரியுமா, தெரியாதா? எட்டு போடச் சொன்னால் நாலு போட்டிருக்கீங்க?''

"ஹி... ஹி... பைக் நல்லா ஓட்டுவேன் சார்! ஒண்ணு ரெண்டுதான் தெரியாது!''

- வேதபுரி எஸ். ரமேஷ்



உயிர்

பா.ராகவன்

தனது எண்பத்தேழு வருட சர்வீஸில் கோமளம் பாட்டி, பதினெட்டு புராணங்களையும் இதிகாஸ, உபநிடத, கீதை இத்யாதிகளையும் பதவுரை, பொழிப்புரை இன்னபிறவற்றோடு, இரண்டாம் வாய்ப்பாடு மாதிரி மனப்பாடம் பண்ணியிருக்கிறாள். சேங்காலிபுரம் அனந்தராம தீட்சிதரின் தாத்தாவில் ஆரம்பித்து சைதாப்பேட்டை வி. எஸ். மணி வரைக்கும் சகல சமய சொற்பொழிவாளர்களின் பொழிவுகளை வேறு, ஹியரிங் எய்ட் துணையுடன் கேட்டு வைத்திருக்கிறாள். அத்தனை பேரும் அவர்தம் கதைகளில் வருணிக்கும் எமன் என்கிற காலன் என்கிற தர்மதேவன் என்கிற எருமை வாகனன், நேரில் பார்ப்பதற்கு அத்தனை கொடூரமானவனாகத் தெரியவில்லை. இவனா மார்க்கண்டேயன் கதையில் வில்லன் ரோல் போடுகிறான்?

ஆர். எஸ். மனோகர் டிராமா மாதிரி கிலோ கணக்கில் பித்தளை நகைகள் இல்லை. பிளாஸ்டிக் கற்கள் பதித்த கிரீடம் இல்லை. மேல்புறம் வளைந்த ஜிகினா ஷூ இல்லை. ஜில்பா முடி இல்லை. இன்னும் அநேக இல்லைகள். மாறாக ஜீன்ஸ் பேண்ட்டும், டீ-ஷர்ட்டும் (தேவமொழியில் என்னமோ வாசகம் பொறித்தது.) பவர் ஷூவும் மிலிட்டரி கட்டுமாக ஷோக்காக இருந்தான். ஒரே பழைய அடையாளம் - அலெக்சாண்டர் பாணியில் முதுகில் தொங்கும் சில்க் தாவணி.

முதன் முதலாக எங்கோ ஒரு பூங்கதவு தான் திறந்து, டிரை ஐஸ் உபயப் புகை மண்டலத்திலிருந்து அவன் பிரசன்னமாகி, ''ஹலோ பாட்டி! ஹௌ டூ யூ டூ?'' என்று மிதந்து முன்வந்தபோது பாட்டிக்கு நம்ப முடியவில்லை.

''யாருப்பா நீ?''

உடன் வந்த எடுபிடி, 33வது வட்டத்தின் சார்பில் மைக் பிடித்து மாலை அணிவிப்பவன் மாதிரி, முன் வந்து அறிமுகப்படுத்தினான்.

''மீட் மிஸ்டர் எமன். அவர் பாஸ்.''

சே! என்ன ஒரு ஆங்கில மோகம்!

பாட்டிக்கு என்னமோ புரிந்து, உதற ஆரம்பித்தது. வியர்க்க ஆரம்பித்தது.

''கோமளம் பாட்டி! ஏன் பயப்படறே? You have some more time to live. ஜஸ்ட் இன்ஃபார்ம் பண்ணிட்டுப் போகலாம்னுதான் வந்தேன்.''

''அவா வரல்லியா?''





''யாரு?''

''சொர்க்கத் துக்காரா.''

''ஆசையைப் பாரு!''

அவன் போய் விட்டான். பாட்டிக்கு இன்னமும் வியர்த்தது. இதயத்தில் பி.டி. உஷா பிராக்டிஸ் பண்ணிக் கொண்டிருந்தாள். நெஞ்சில் ஏதோ ஓமா கோலி.

● ● ●

தனது நம்பிக்கை முற்றிலும் தகர்ந்து விட்டதாகவும் நொடிக்கு நொடி பல்ஸ் இறங்கிக் கொண்டிருப்பதாகவும் ஒரு டாக்ஸி கூட்டி வந்து உடனே அழைத்துச் சென்று விடுமாறும், அநேகமாக கோமா நிலையிலேயே உயிர் பிரிந்துவிடக் கூடும் என்றும் கண்ணாடி போட்ட வழுக்கை டாக்டர் சொன்னார்.

பேரப் பிள்ளைகள் இருவரும் சந்தோஷத்துடன் தலை ஆட்டிவிட்டு வெளியே போனார்கள். பாட்டி மட்டும் மண்டையைப் போட்டு விடுகிற பட்சத்தில், டாக்ஸி என்ன, புஷ்பக விமானமே கூட அரேஞ்ச் பண்ணிவிடத் தயாராக இருந்தார்கள். ஆனால், நிச்சயம் இந்த முறை போய் விடுவாள் என்பதற்கு யார் கேரண்ட்டி? கடந்த நான்கைந்து முறையாக, அம்பயரால் நிராகரிக்கப்பட்ட எல்.பி.டபிள்யூ. போல, பாட்டி விளிம்புகளில் தப்பித்துக் கொண்டிருக்கிறாள்.

கொஞ்ச நாளாகக் கோமளம் பாட்டிக்குப் பண்ணியிருக்கிற சிசுருஷையில், அவர்கள் இருவரின் மனைவியரும் ஆல்மோஸ்ட் அன்னை தெரஸாவாகி விட்டார்கள். அவர்களின் அப்பா, அம்மாவுக்குக் கூட கடைசி காலத்தில் இத்தனை உன்னத சேவை வாய்க்கவில்லை. இது அப்பாவின் அத்தை. அத்தைப் பாட்டி. மன்னார்குடியில் சிலபல வேலி நிலமும், பேங்க் லாக்கரில் விக்டோரியா காலத்து நகைகளுமாகச் சொத்து சேர்த்திருக்கும் கெட்டிப் பாட்டி.

நிராதரவான அத்தைப் பாட்டி, இவர்களோடு ஒட்டிக் கொண்ட போது, இதைத்தான் அவ்வப்போது தனது டிரம்ப்-கார்டாக உபயோகித்து வந்தாள். ''எனக்கப்புறம் அத்தனையும் உங்களுக்குத்தானேடா பசங்களா?''

நாய்க்குப் பொறை காட்டுவது போல இதைச் சொல்லியே அநேக விஷயங்கள் சாதித்துக் கொண்ட பாட்டிக்கு இது கிளைமாக்ஸ் நேரம்.

பேரன்களுக்குப் பிறந்த பொடியன்கள், கொல்லைப் புறத்தில் விறகுக் கட்டைகள் அடுக்கியிருந்த புராதன பெஞ்சைத், தூக தட்டிக் கொண்டு வந்து கூடத்தில் போட்டனர். பாத்திரக்காரனுக்காக வைத்திருந்த ஒரு கந்தல் புடைவை அதன்மேல் விரிக்கப்பட்டது. பாட்டியின் பஞ்சணை. பாட்டி படுக்க வைக்கப்பட்டாள். டிரெயின் வராத நிலையில், ஸ்டேஷனில் பரிதவிக்கும் பயணியர் போல் வீடு, அவளைச் சுற்றி முகாமிட்டது.

● ● ●

''என்ன பாட்டி, தூக்கமா? டயம் ஆறது. ரெடியாக வேண்டாமா?''

''சிட்டியிலேயே பெரிய டாக்டர். அவ்வளவு சீக்கிரம் உன்னோட வர விட்டுடுவாரா, என்ன?''

''நாசமாப் போக்க. நீ வீட்டுக்கு வந்தாச்சு பாட்டி. டாக்டராவது, நர்ஸாவது? கண்ணைத் திறந்து பார். ஐயனார் கோவில் சிலை மாதிரி உன் பேரன்கள் முழிச்சிக்கிட்டிருக்கிறதை?''

''ஏன்? ஏன் ஆஸ்பத்திரிலேர்ந்து கூட்டிண்டு வந்துட்டா? முடியாதாமா? நான் கேட்கிறேன்!''

பாட்டி வாயைத் திறக்கப் பிரயத்தனப்பட்டாள். மீண்டும் நெஞ்சில் ஓமா கோலி.

● ● ●

''டேய்! பாட்டி வாயைத் திறக்கறா பார்! என்னமோ சொல்றா. ஏழுகடல்

தாண்டி, ஏழு மலை தாண்டி என்னவாவது ஒளிச்சி வெச்சிருக்கானாமா?''

''கம்மார்றா. தண்ணி கேக்கறான்னு நினைக்கறேன்.''

''கொண்டு வரட்டுமா?''

''இரு. பார்ப்போம்.''

● ● ●

''கோமளம் பாட்டி, உனக்கு ஏன் வீண் ஆசையெல்லாம்? Your time has come. அனாவசியக் கவலையெல்லாம் படாதே. முடிஞ்சா ராமா, கிருஷ்ணான்னு சொல்லிண்டிரு. இன்னும் கொஞ்ச நேரம்தான். அப்புறம் நான் கூட்டிண்டு போயிடுவேன். பீ சியர்ஃபுல். நீங்க நினைச்சுண்டிருக்கிறாப்பல எண்ணெய்க் கொப்பறையெல்லாம் கிடையாது. ஃபர்ஸ்ட் கிளாஸ் லொகேஷன். பூவும் ஆறுமா பார்க்கவே ரம்யமா இருக்கும், நம்மூர்ல. முடிஞ்சா புஷ்ப கைங்கர்யம் பண்ணிண்டு இரு. கொஞ்ச நாளாகட்டும். சொர்க்கத்துக்காராளுக்கு அப்ளை பண்ணு. இண்டர்வியூவுக்குக் கூப்பிடுவா. செலக்ட் ஆனாப் போயிடலாம். அங்க இன்னும் வசதி! இது உடுப்பி ஹோட்டல்னா அது தாஜ் கோரமண்டல். உனக்குப் புரியணும்னு சொல்லறேன். என்ன?''

''வேண்டாமே, ப்ளீஸ். இன்னும் கொஞ்ச நாளைக்கு விட்டுடேன். நெக்ஸ்ட் மன்த் வரைக்கும் எக்ஸ்டென்ஷன் குடேன். வேணும்னா என் சொத்துல பாதி உனக்குத் தந்துடறேன்.''

''புத்தி பேதலிச்சிப் பேசாதே பாட்டி. இத்தனை தூரம் வந்தப்புறமும் சொத்து, சொத்துங்கறியே? அற்றது பற்றெனில் உற்றது வீடு. உனக்கு வீடு வேண்டாமா? வீடு via காடு!''

''கொஞ்சம் கருணை காட்டக் கூடாதா?''

''அப்படி என்ன சாதிக்கப் போறே, இருந்து?''

''சொன்னா சிரிக்கக் கூடாது! சரவண பவன் காப்பி சாப்பிடணும். மைலாப்பூர் ராயர் ஹோட்டல் ரவா தோசை சாப்பிடணும். கற்பகத்துல நெய்ப் பொங்கல் சாப்பிடணும். ஆல்பட்ல திருடா திருடா பார்க்கணும். ஒரே ஒரு வாட்டி நைட்டி போட்டுக்கணும்!''

''அடிப்பாவிக் கிழவி! இப்படியெல்லாம் ஆசையா? பெரிசா ஆசார வேஷம் போட்டே, இத்தனை நாளா?''

''தப்புதான். என்ன பண்றது? இப்ப ஆசையா இருக்கே? ப்ளீஸ்!''

''நாசமாப் போச்சு. இத்தனை ஆசை போட மண்டையைப் போட்டா வீடு பேறாவது? வெங்காயப் பேறாவது? புளிய மரத்துல காலைக் கட்டிண்டு, தலைகீழாத் தொங்க வேண்டியதுதான்!''

''நான் என்ன பண்ணுவேன்? எல்லாம் அவன்தான் ஆட்டி வெக்கறான்.''

''இது வேறயா? சரி, கொஞ்ச நேரம் தூங்கு. நான் யோசிக்கறேன்.''

கோமளம் பாட்டி தூங்க ஆரம்பித்தாள்.

● ● ●

''என்னடா ஆர்க? சைலன்ட்டா இருக்கு?''

''மூச்சு வருதா பார்!''

''காணமேடா!''

''நிஜமாவா?''

''ஆமாடா! மூச்சு வரக் காணோம்.''

அசைத்துப் பார்த்தார்கள். மூக்கருகே கை வைத்துப் பார்த்தார்கள். அதற்குமேல் பரீட்சித்துப் பார்க்கப் பயமாக இருந்ததால் விட்டு விட்டார்கள். சுற்றி உட்கார்ந்து நம்ப முடியாமல் பாட்டியைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

மன்னார்குடி நிலமும் மகத்தான நகைகளும். மதிப்புப் போட்டால் எவ்வளவு தேறும்? தேங்க்யூ பாட்டி!




''என்ன இது? நம்ம தலைவர் இவ்வளவு அப்பாவியா இருக்காரே!''

''ஏன், என்னாச்சு?''

'''கொள்கையை அடகு வைக்கறதுங்கறாங்களே, நம்ம கொள்கையை எங்கே வைக்கலாம்? எவ்வளவு கிடைக்கும்'னு கேட்கிறார்!''

- வடுவூர் சிவ. முரளி

"வீட்டு வசதி வாரியத்தில் வேலை பார்க்கிற வீராசாமியோட பையன் தானே நீ?"
"இல்லே தாத்தா, அதோ மணலில் வீடு கட்டிக் கிட்டிருக்கானே, அவன் தான்!"
- வேதபுரி எஸ். ரமேஷ்



சட்டென்று பாட்டி அசைந்தாள்.

• • •

"பாரு. ஒன் அவர் நீ தூங்கியிருக்கே. அதுக்குள்ள உன் பேரன்கள் தவசம் பண்ண ரெடியாயிட்டாங்க."

"அதெல்லாமில்லை. எனக்குத் தெரியும் அவாளைப் பத்தி. நீ மட்டும் கொஞ்சம் தயவு பண்ணு. அடுத்த மாசம் இதே தேதிக்கு வா. பதில் பேசாமக் கிளம்பிடறேன்."

"சரி பாட்டி. உன் ஆசையைக் கெடுப்பானேன்? உனக்காக ஒத்துக்கறேன். இதனால் எனக்கு ஏகப்பட்ட பிராப்ளம்ஸ் வரும். மேலிடத்துல எக்ஸ்பிளனேஷன் கேட்பாங்க. ஓ.கே. அது என் பிரச்னை. ஒரு மாசம்தானே? டேக் இட். என்ஜாய்!"

பாட்டி பரவசமானாள்.

• • •

"அடப்பாவி! பாட்டி அசையறாடா!"

கோமளம் பாட்டி மெல்லக் கண் திறந்தாள்.

"பாட்டி, நீ இன்னும் சாகலியா?"

"உங்களையெல்லாம் விட்டுட்டு அத்தனை சீக்கிரம் போயிடுவேனாடா? எமனோட சண்டை போட்டுட்டு வந்திருக்கேனாக்கும்!"

ஒரு கணம் யாரும் பேசவில்லை. பாட்டி மெல்லப் பேச ஆரம்பித்தாள்.

"ஏண்டாப்பா, எனக்கு ஒரு ஆசை..."

"சொல்லு பாட்டி."

"சரவணபவன்ல காப்பி நன்னாருக்கும் பேளே, வாங்கித் தருவேளா?"

"கிழத்துக்கு ஆசையைப் பாரு!"

"அதுக்கென்ன பாட்டி!"

"கற்பகம் ஹோட்டல்ல நெய்ப் பொங்கல் விசேஷமாமே?"

"ஆமாமா. அதுலயும் ஒரு பிளேட் வாங்கிண்டு வந்துட்டாப் போச்சு!"

"போற போக்கில முனியாண்டி விலாஸ் முட்டை பரோட்டா கேக்கப் போறா பாரு!"

"சும்மார்றீ!"

"எல்லாம் விடிஞ்சதும் வாங்கித் தரேன். நீ தூங்கு பாட்டி!"

"இன்னும் எத்தனை நாளைக்குத்தான் இந்தக் கிழத்தைக் கட்டிண்டு அழறது?"

"பேசாம அரசுத் தொட்டில்ல போட்டுடலாமா?"

"நீ நாசமாப் போக. தொட்டில், குழந்தைகளுக்கு!"

"என்னைக் கேட்டா கண்காணாத இடத்துக்கு இழுத்துப் போய் இறக்கி விட்டுட்டு வந்துடலாம். தினம் தினம் இதுக்கு அலம்பி விட்டே என் ஆயுசு போயிடும் போல இருக்கு."

"யாருக்கு வேணும் சொத்து? போற போது இடுப்பில முடிஞ்சுண்டு போய்க் கட்டும்."

"போனாத்தானே?"

"வெயிட். ஏதாவது அனாதை ஆசிரமம், முதியோர் இல்லம் பார்க்கலாமா?"

"அங்க போய் வாயை வெச்சுண்டு சும்மா இருக்கணுமே! பேரன் பாசம் பொங்கி வழிஞ்சி, ஏதாவது தத்து, பித்துன்னு உளறித்துன்னா?"

"ஏதாவது பண்ணியாகணும். யோசி."

• • •

"நான் அப்பவே சொன்னேன், இந்தப் பசங்களை நம்பாதேன்னு. இப்பப் பாரு!"

"நிஜம்தான்!"

"என்ன சொல்றே? ஒன் மன்த் எக்ஸ்டென்ஷன்...? சரவணபவன்ல காப்பி...? கற்பகம் ஹோட்டல் பொங்கல்...?"

"வேண்டாம், வந்துடறேன்!"

ஒரு நீண்ட பிரயத்தனத்தின் முடிவில் பாட்டி துவண்டு, அடங்கிப் போனாள்.

• • •

அவர்கள் சந்தோஷமாக அழ ஆரம்பித்தார்கள்.

● அசோகமித்திரன்





● சுதா



● டி.டி. வாசு



● ஹேமலதா

கையெழுத்து ஜோசியம்:

எத்தனை சதம் சரி?

டி.டி. வாசு :

''இதயக் கோளாறு மற்றும் ஹைப்பர் டென்ஷன் எல்லாம் கிடையாது. உயரத்தை அரை அடி குறைத்து விட்டாரே. மொத்தத்தில் சுமார் 90% சரியாக இருக்கிறது!''

சுதா ரகுநாதன் :

''எனக்குத் தன்னம்பிக்கை அதிகம். தாழ்வு மனப்பான்மை கிடையாது. மூன்று மொழிகளில் புலமை என்பது ஓரளவுதான் உண்மை. தமிழ், ஆங்கிலம், இந்தி, கன்னடம், தெலுங்கு ஆகிய ஐந்து மொழிகளில் ஓரளவு தேர்ச்சி உண்டு. புலமை என்று அதைக் குறிப்பிட முடியாது. மனைவியாகவும் தாயாகவும் என் கடமைகள் எதையும் குறைவில்லாமல் செய்ய வேண்டும்; சிறந்த பாடகியாகப் புகழ்பெற வேண்டும்; பிற்படுத்தப்பட்டவருக்காக ஏதேனும் செய்யவேண்டும் என்ற லட்சியங்கள் உண்டு. ஆக, மூன்று லட்சியங்கள் என்று குறிப்பிட்டது சரியே. ஆயினும், நான் எல்லோருக்கும் அறிமுகமானதே பாடகியாகத்தான். எனவே சங்கீதம் என்று குறிப்பாகச் சொல்லாமல் கலைகளில் திறமை பெற்றவர் என்று பொதுவாகக் கூறியது வருத்தமே!

அசோகமித்திரன் :

''என்னை யாரென்றே தெரியாமல், என் கையெழுத்தை மட்டும் பார்த்து, இவ்வளவு சரியாகக் கூறியிருக்கிறாரே! ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. எனக்கு மூன்று மகன்கள் தான். மகளே கிடையாது. மற்றபடி தொண்ணூறு சதவிகிதத்திற்கு மேல் சரியாக இருக்கிறது!''

ஹேமலதா : (தொலைக்காட்சி தயாரிப்பாளர்)

''நான் பள்ளியில் படிக்கும் போது கணக்கைத் தவிர மற்ற பாடங்களில்தான் மிக அதிகமான மதிப்பெண்கள் பெறுவேன். எனக்கு ஆடம்பரமாக உடையணியவே பிடிக்காது. கண்கள் சிறியவைதான். நான் பிறரைக் கவருகிறேனா என்பதை மற்றவர்கள்தான் சொல்ல வேண்டும்.''

தொகுப்பு : கலாமூர்த்தி

ரிஸப்ஷன் தவறுகள் :

1. தோரணம் ஏன் தலை திமிர்த்திருக்கிறது?
2. தோரணம் எவ்வழி, பல்ப் அவ்வழி!
3. ரங்கு–மங்குவுக்குத் தலைகால் புரியவில்லை.
4. தோழியின் குதிரை வால் கொண்டைக்கு என்ன ஒரு கர்வம்?
5. ரங்குவின் கண்ணாடி, விட்டலாச்சார்யா தயாரிப்பா?
6. மாப்பிள்ளை கழுத்தில் மாலையா? தாலியா?
7. அந்தோ பரிதாபம்! ரங்குவின் தோழருக்கு ஒரே டிசைனில் பேண்ட் கிடைக்கவில்லையா?
8. ஹலோ மங்கு! கையில் இருப்பது பூச்செண்டு! பன்னீர்ச் சொம்பல்ல!
9. கனெக்ட் பண்ணாமல் ஒயர் தனியே நிற்கிறது; வீடியோக்காரர் எப்படிப் படம் எடுக்கிறார்?
10. அது சரி; பிடி இல்லாத பையைத் தோளில் மாட்டியிருப்பவர், ஒயர் இல்லாமல் படம் எடுக்கக் கூடாதா?
11. அந்தரத்தில் ஸ்ட்ரா என்றால் ஆச்சர்யப்படுவதில் தப்பில்லை!
12. பரிமாறுபவருக்கு ஏக டென்ஷன். கரண்டியைப் பார்த்தாலே புரியுமே.
13. வாசலில் - வாழைப் பூவுக்குத் தலை சுற்றலா?
14. ஐயே! இது போல் பீப்பீயாக்கும்!
15. பாட்டி பெரிய ரைட்டராயிருக்கலாம். அதுக்குன்னு பாக்கு உடைக்கிறது கூட இப்படியா?

இதற்கு மேலும் நீங்கள் தவறுகள் கண்டு பிடித்தால் தாராளமாகக் காவலரைத் தூக்கி விட்டுக் கொள்ளலாம்! (காவலர் இல்லாதவர்கள் அடுத்தவருடையதையாவது.)

எங்கிருந்து இந்த ஒலிகள்?

◆ முதல்ல ஜில்லு ஜாலுவிற்கு திருஷ்டி சுத்திப் போடுங்க. அவங்க நம்ம இந்திய கிரிக்கெட் அணியைக் கிண்டலடித்த முகூர்த்தம், நம்மவர்களுக்கு திடீர் ரோஷம் வந்து உயிரைக் கொடுத்து ஆடி பைனல் வரை வந்து அதிலும் வென்று விட்டார்களே. பெரிய விஷயமில்லையா?

சேலம் - 1, கே. ராஜுபாலு.

◆ மு.க. ஸ்டாலின் பேசாத ஒன்றை வாசகர் ஒருவர் கேள்வியாகக் கேட்க, தராசு பதில் அளித்துள்ளார். ("தி.மு.க.வில் பிறந்தவன் நான்") அப்படி மு.க. ஸ்டாலின் பேசியதாக "தினமலர்" பத்திரிகைதான் செய்தி வெளியிட்டது. அந்தச் செய்தியினை அப்போதே ஸ்டாலின் மறுத்து அறிக்கை விடுத்துள்ளார்.

திருநரையூர், எம். கல்யாணசுந்தரம்.

◆ 'கல்கி', "வை.கோ. பிரச்னை"யில் சில கருத்துக்களை விட்டு விட்டதே! என்னுடைய ஒரே தலைவர் என்று கூறிக் கொண்டே கருணாநிதியை, அவர் குடும்பத்தாரை மிகக் கேவலமாகத் திட்டுவது; தி.மு.க.வின் சொத்துக்களை, தலைமையைப் பெறவே முழு கவனம் செலுத்துவது; அன்பழகன் உட்படப் பலரையும் ஆபாசமாகத் திட்டுவது இப்படிப் பல. தலைவர்களில் 20 சதவீதமும் தொண்டர்களில் 10 சதவீதமுமே தன் பக்கம் என்பதை உணராது வை.கோ. தன் செல்வாக்கை, அதிகமாக எடை போடுகிறார்!

கோவை, டி. பத்மா.

◆ பேசுவது ஒன்று, எழுதுவது ஒன்று, நடப்பது ஒன்று என்று பச்சோந்தி வேஷம் போடும் ஒரு போலித் தலைவனின் ஐம்பது ஆண்டு அரசியல் சாணக்கியம் எழுச்சி மிகுந்த இளையதலைமுறையின் முன் எடுபடாது என்பதை நடுநிலை வாசகன் என்ற முறையில் தெரிவித்து, எல்லா சரித்திர நாயகர்களும் அனைத்துச் சிறப்பு இயல்புகளையும், குணங்களையும் பெற்றவர்கள் அல்ல என்பதையும் அதற்கு வை.கோ.வும் விதிவிலக்கல்ல என்பதையும், தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுரை - 20, வி. ஜெயகிருஷ்ணன்.

◆ தொடரும் பயங்கரவாதத்தைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று தலையங்கத்தில் கூறிவிட்டீர்கள். வேலியே பயிரை மேய்கிற நிலையை 'கொள்ளையடித்த போலீஸார்' செய்தி தெரிவிக்கிறது. வேலைக்கேற்ற நபர்களைத் தேர்ந்தெடுத்து வேலையிலமர்த்தாமல், ஏதேதோ காரணங்களுக்காகத் தகுதியற்றவர்களை நியமிப்பதால் கேடுகள் தொடருகின்றன. அது போன்றே ஆட்சிப் பொறுப்பேற்பவர்களும் தமது வரம்பு மீறிச் செயல்படுவதால் நாடெங்கும் விபரீதங்கள் நிகழ்கின்றன. சமுதாய நலன் விரும்புகின்ற முன்னோடிகள் காலத்தே கடமையாற்றி நாட்டை நல்வழிப்படுத்த வேண்டும்.

வேலாண்டிப்பாளையம், கி. ரங்கசாமி.

◆ மைக்கேல் ஜாக்஖ன் வடிவில் 'ஜெ'யைக் கார்ட்டூனில் பார்த்ததும் அதிர்ந்து போனேன். அம்மா ஆட்சியில் பெரும்பாலோர் தொடை நடுங்கிகளாக இருக்கும் போது உமக்கு மட்டும் எங்கிருந்து துணிச்சல் வந்தது? எதற்கும் பாதுகாப்பா இருங்க!

டி.வி. நல்லூர், வைத்யா.

◆ 'பாடை இலவசத் திட்டம் பரிசீலனையில் இருக்கிறதா?' என்று தன் கவிதையில் கேள்வியெழுப்பிய நா.வே. அருளுக்கு அரசு சார்பில் பதில் வருகிறதோ இல்லையோ வாசகர்கள் சார்பில் பாராட்டுக்கள் வரும்.

சென்னை - 14,

அய்யாறு எஸ். வாசுதேவன்.

◆ இந்தியர்கள் என்றாலே இட்லி கடத்தான் லாயக்கு என்று நம்மை நாமே கிண்டல் செய்து கொண்டிருந்த காலம் போய், இட்லி கடுவதிலும் கூட இந்தியர்களின் திறமை அலாதிதான் என்பதை நிரூபித்து வரும் கோயமுத்தூர் அன்னபூர்ணா ஹோட்டல் நிறுவனத்தினரின் உணவுத் துறைச் சாதனைகளை நல்லதொரு கவர் ஸ்டோரியாகப் படைத்து இந்திய இட்லியின் புகழினை(!)ப் பார் முழுக்கப் பரவச் செய்த கல்கிக்குப் பாராட்டுக்கள்.

தோட்டக்குறிச்சி,

இரா. வளையாபதி.

◆ ரசிப்புத் தன்மை சிறு துளியளவும் இல்லாமல் 'திருடா திருடா' விமர்சனத்தை ரொம்பவும் நக்கலாக எழுதியிருக்கிறாரே உமது விமர்சகர், அவர் கண் என்ன குருடா... குருடா...?

சேலம் - 9, மு. இரவிச்சந்திரன்.

◆ ஆரம்பம் முதல் கடைசி வரை இடையில் எங்குமே தடுமாறாத நடையோடு எழுதப்பட்ட "தடுமாற்றம்" சிறுகதை நெஞ்சில் "ப்ச்ச்ச்ச்" என ஒட்டிக் கொண்டது!

கச்சிராயபாளையம்,

ஓவியக் கவிஞன்.

◆ 'தடுமாற்றம்' படித்தேன். கதாசிரியர் என்ன சொல்ல வருகிறார் என்றே புரியவில்லை. ஏதோ ஒரு தடுமாற்றத்தில் எழுதியிருக்கிறார் என்று மட்டும் புரிகிறது.

முத்தியால்பேட்டை, வசந்தராஜசெல்வன்.





பாரதிராஜாவின் 'கிழக்குச் சீமையிலே', ஒரு சாதாரண தமிழ்ப் படம் என்கிற தளத்திலிருந்து சிலபல படிகள் உயர்ந்து நிற்பது. கதை அமைப்பிலும் கட்டுக் கோப்பிலும் பற்பல அற்புதங்கள் படம் நெடுக விரவிக் கிடப்பது ரசனைக்குரிய ஒரு விஷயம். ஆயினும், வழக்கமான மாயாஜால மசாலாக்களும் ஆங்காங்கே இருக்கத்தான் செய்கின்றன. ஓர் உன்னதமான கலைப் படைப்பு என்கிற தகுதிக்குரிய இப்படத்தில் தேவையற்ற சினிமாத்தனங்கள் ஏன் புகுந்து கொண்டன? பழக்கதோஷமா? காலத்தின் கட்டாயமா? வியாபார உத்தியா? அல்லது வேறு ஏதேனும் காரணமா? பாரதிராஜாவிடமே விளக்கம் கேட்கத் தோன்றிற்று. அக்கறையோடும், தெளிவான சிந்தனையோடும், கொஞ்சம் உணர்ச்சிவசப்பட்டும் பேசினார் பாரதிராஜா.

"**நே**ற்று வரை என் படங்களில், நான் பார்த்த கிராமத்து மனிதர்களின் முகத்தை மட்டும்தான் காட்டிக் கொண்டிருந்தேன். மண்ணின் நிறத்தை மட்டுமே காட்டிக் கொண்டிருந்தேன். அதன் தன்மையைச் சொல்லவில்லை; மனிதர்களின் குணத்தைச் சொல்லவில்லை. வெறும் காதல் கதைகளை எத்தனை விதமாகத்தான் சொல்வது? இனிமேலும் சொல்ல அதில் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. எனவே என் மனிதர்களின் குணங்களை இந்தப் படத்தில் காட்டியிருக்கிறேன். வெறும் அழகுணர்ச்சி மட்டுமே வாழ்க்கை அல்ல. நதியும், மலரும், மலையும், மழையும் ஏராளமாகக் காட்டி விட்டேன். கொஞ்சம் நிதர்சனத்திற்கு வரலாம், தவறில்லை."

"நீங்கள் சொல்வது போல் சில மனிதர்களைப் பற்றிய கதை என்கிற அளவில் படம் சிறப்பாக வந்திருப்பினும் அழகுணர்ச்சியில் ஒன்றும் குறை இல்லையே?"

"இல்லை. என் மற்ற படங்களோடு ஒப்பிடுகையில் கண்டிப்பாகக் குறைத்திருக்கிறேன். அதற்காக, முழுவதுமாக 'அழகை' ஒதுக்கி விட்டேன் என்பதல்ல. அதிகபட்சம் குறைத்திருக்கிறேன். முன்பே 'மண்வாசனை'யில் இதனை ஓரளவு பரீட்சித்துப் பார்த்திருக்கிறேன். இப்போது சற்று அதிகம் செய்திருக்கிறேன் - காட்சிகளின் தேவைக்கேற்ப."

"பாடல் காட்சி ஒன்றில் பட்டாம்பூச்சி பிரதானமாகப் பங்கேற்கிறது. அழகிய ஆறு ஒன்றை அவ்வப்போது காட்டுகிறீர்கள். கிளுகிளுப்பான காதல் காட்சிகளுக்கும் குறைவில்லை. கமர்ஷியல் நோக்கமே இல்லை என்கிறீர்களா?"

"கிராமத்தைத் தெரிந்தவர்கள்





''அப்படியில்லை. குறைத்திருப்பதற்கும் முற்றிலும் ஒதுக்கி விடுவதற்கும் வித்தியாசம் இருக்கிறது. நாலே நாலு பேர் மட்டும் பார்க்கும் ஆர்ட் ஃபிலிம் எடுப்பது அல்ல என் லட்சியம். நான் சொல்ல வருகிற விஷயம் மக்களைச் சென்றடைய வேண்டும். அந்த வகையில் யுகம் யுகமாகப் பழக்கப்படுத்தப்பட்டுள்ள அவர்களின் பார்வையை ஒரே ஒரு படத்தில் மாற்றி விட முடியும் என நம்புவது அறிவீனம். என்னளவில், நான் சொல்ல வந்த விஷயம் - இந்தப் படத்தில் தெளிவாக்கப்பட்டு விட்டது. கொஞ்சம் போல், கமர்ஷியல் அம்சங்களும் இருக்கத்தான் செய்கின்றன. அவை எங்கெங்கே என்பது எனக்கும் தெரியும். காரணமில்லாமலா சேர்த்திருப்பேன்?''

''முழுக்க முழுக்க 'ஆர்ட்' டைப்பில் இருந்தால் மக்கள் ஒதுக்கி விடுவார்கள் என்கிற பயம்தான் காரணமா?''

'' '16 வயதினிலே' எடுக்கும் போது ஆடியன்ஸ் பற்றி கவலைப்பட்டுக் கொண்டா எடுத்தேன்? அது வெற்றி பெற்றதே, எப்படி? தோல்விகளைக் கண்டு நான் எப்போதுமே பயப்படவில்லை. மாறாக, அவற்றை நான் பாடமாக்கிக் கொள்கிறேன். ஒரு புதிய கருத்தைச் சொல்ல வரும் போது இரண்டு பேர் ஏற்பார்கள். நான்கு பேர் எதிர்க்கத்தான் செய்வார்கள். 'நீ ஏற்கிறாயா? சரி; ஏற்கவில்லையா? அடுத்ததைப் பார்!' - இப்படித்தான் கருத வேண்டியிருக்கிறது. 'என் உயிர்த் தோழனும்' 'வேதம் புதிது'ம் வித்தியாசமான படங்கள்தான். ஓடவில்லையே? அவ்வளவு ஏன்? முழுக்க முழுக்க க்காதலை மையப்படுத்திய 'காதல் ஓவியம்' ஓடியதா? மக்கள் ரசனையைக் கணிக்கவே முடியாது! நம் படைப்பு அவர்களுக்குப் பிடித்துப் போனால் சந்தோஷம். இதைச் சேர்த்தால் பிடிக்கும்; அதை எடுத்தால் பிடிக்கும் என்றெல்லாம் யாராலும் ஃபார்முலா வகுக்க முடியாது!''

''இரு குடும்பத்தின் பகை. அதன் மூலம் வருகிற பிரச்னை ஆகியவற்றைச் சுற்றிச் சுழலும் இப்படத்தில் - ஒரு பிரிவு மக்களின் 'அறியாமை' தான் மேலோங்கி வெளிப்படுகிறது. அதை மாற்றும் முயற்சியிலோ, அல்லது விமர்சன நோக்கிலோ நீங்கள் இறங்காதது ஏன்?''

''ஒரு குறிப்பிட்ட இனத்தவரை, மக்களை, அவர்களது பழக்க வழக்கத்தினை உள்ளது உள்ளபடி படம் பிடிப்பது மட்டுமே என் நோக்கம். ஐயா, என் மக்கள் இப்படிப்பட்டவர்கள். அவர்கள் வாழ்க்கை முறை இப்படி இருக்கிறது! அவ்வளவுதான். அதைத்தான் நான் காட்டுகிறேனே தவிர 'விமர்சனம்' என் வேலையல்ல. அதை மாற்ற நீங்கள் ஏன் முயற்சி செய்யக் கூடாது என்று

குறை கூற மாட்டார்கள்...!”

- பாரதிராஜா பதிலளிக்கிறார் :

கேட்டால் - அது அத்தனை சுலப சாத்தியமல்ல என்பதே பதில். ஆயிரமாயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்து வரும் மரபுகளை அத்தனை சீக்கிரத்தில் மாற்றி விடவோ, ஒதுக்கி விடவோ முடியாது.''

''பெண் விடுதலை, பெண் விடுதலை என்று மூலை, முடுக்கெல்லாம் பேசப்படுகிற இக்காலத்தில் - புருஷன் செய்கிற கொடுமையெல்லாம் பொறுத்துக் கொண்டு அடங்கி நடக்கும் ஒரு பெண்ணைக் காட்டியிருக்கிறீர்களே? கிளைமாக்ஸில் மட்டும்தான் பொங்கி எழ வேண்டுமா? அத்தனை கொடுமைக்காரப் புருஷனிடம் மனைவிக்கு (கிளைமாக்ஸுக்கு முன்) எதிர்ப்புணர்வே ஏற்படாதா...?''

''என்ன பேசுகிறீர்கள்? கதை நடப்பது கிராமம் ஐயா! புருஷனை மனைவி எதிர்ப்பதா? இதுவும் மரபு சார்ந்த ஒரு விஷயம். வளர்ச்சியுறாத கிராமப்புறங்களில் இப்படியெல்லாம் செய்வதல்ல - நினைத்துப் பார்ப்பதே கூட இயலாத காரியம். தவிரவும் இந்தப் படத்தைப் பொறுத்தவரை, அவள் ஆரம்பம் முதலே புருஷனைத் திருத்தத்தான் முயற்சி செய்கிறாள். இரு குடும்பங்களுக்கிடையே பகை ஆரம்பிக்கும் அந்தக் கோழிச் சண்டை காட்சியின்போதே அவள் அதைத் தடுத்து நிறுத்த எத்தனையோ முயற்சி செய்கிறாள். இறுதிவரை அவளுக்கு, அவனைத் திருத்தி விட முடியும் என்கிற நம்பிக்கை இருக்கிறது. கிளைமாக்ஸில், தன் அண்ணன் செய்த தியாகங்களைப் பட்டியலிடுவதும் கூட அதற்காகத்தான். அத்தனையையும் மறுபடி நினைத்துப் பார்த்தாலாவது திருந்த மாட்டானா என்கிற நப்பாசை. அத்தனையையும் கேட்டுக் கொண்டு, தனக்கு உயிர்ப் பிச்சை அளித்தவனையே பின்னாலிருந்து கொல்ல முயல்கிறானே - அப்போதுதான் அவள் வெறுப்பு உச்சநிலை அடைகிறது. இனியும் இவனைத் திருத்த நினைப்பது அறிவீனம் என்று கருதி, தாலியைக் கழற்றி எறிகிறாள்.''




''பாண்டியன் கேரக்டரை எடுத்துக் கொள்வோம். நான்கு பெண்களை வைத்துக் கொண்டு ஒருவன் கிராமத்தில் கூத்தடிக்க முடியுமா? அது மட்டும் மரபாகுமா? அதை அந்தக் கிராமக் கட்டுப்பாடு எப்படி அனுமதிக்கிறது?''

''என்னுடன் வருகிறீர்களா? எத்தனை பேரை வேண்டுமானாலும் - அது மாதிரியான ஆட்களைக் காட்டுகிறேன். தவிரவும் அவன் வசிப்பது கிராமத்துக்குள் அல்லவே? சற்று விலகிய ஒரு பிரதேசம்தானே? நெப்போலியன் வண்டி கட்டிக் கொண்டு அவனிடம் வந்து சம்பந்தம் பேசுவாரே, அப்போதே அது கிராமத்தை விட்டு விலகிய பிரதேசம் என்பதைக் காட்டியாயிற்றே! நடைமுறையில் இல்லாத ஒன்றை நான் காட்டி விடவில்லை.''

''ஒரு படத்தில் இத்தனை வன்முறை அவசியமா? ரத்தம் காட்டாமல் கிராமப் படம் எடுக்க முடியாதா?''

''மன்னிக்க வேண்டும். கிராமம் பற்றித் தெரிந்தவர்கள் இப்படிக் கேட்க மாட்டார்கள். வெறும் வரப்புத் தகராறில் எத்தனை கொலைகள் நடக்கின்றன? பேப்பரில் படிக்கவில்லை? அதிகம் கல்வியறிவு பெறாத ஜனங்கள் தொட்டதற்கெல்லாம் ஆயுதம் ஏந்தும் பழக்கம் இன்னும் மாறாத நிலையில்தான் உள்ளது. தவிர, என் படத்தில் கிளைமாக்ஸ் தவிர வேறு எங்காவது ஒரு இடத்திலாவது கத்தி தூக்குவதைக் காட்டியிருக்கிறேனா? நான் நினைத்திருந்தால் எத்தனை வன்முறை காட்டியிருக்கலாம் இப்படத்தில்? ஏன் காட்டவில்லை? வன்முறைக்கு ஏராள வாய்ப்புக்கள் இருப்பினும், பெருமளவு அதனைக் குறைத்திருக்கிறேன். இன்னொரு முறை போய்ப் படம் பாருங்கள்!''


''கத்தியைத் தூக்குவது மட்டுமே வன்முறை என்பதல்ல. உங்கள் படத்தில்



மேலோங்கும் வன்ம உணர்ச்சி இடம்பெறும் சில கெட்ட வார்த்தைகள்... அவை படத்தில் நெடுக உதிர்க்கப்படுவது ஒரு வகையில் வன்முறையின் வெளிப்பாடல்லவா?''

''இதை ஒப்புக் கொள்கிறேன். சந்தோஷத்திற்கும் கோபத்திற்கும் துக்கத்திற்கும் - சகல உணர்ச்சி வெளிப்பாடுகளுக்கும் 'அந்த ஒரு' வார்த்தை வெளிப்படுவது கிராமப்புறப் பழக்கம் இல்லாதவர்களுக்குச் சற்று அதிர்ச்சியாகத்தான் இருக்கும். ஆனால் கிராமங்களில் அவை சகஜம். அது 'கெட்ட வார்த்தை' என்கிற அறிவுபூர்வமான யோசிப்புக்கே அங்கே இடம் இல்லை. மனத்தில் அது பற்றிய எவ்வித 'அரிப்பும்' இன்றி - ஓர் வெற்றுச் சொல்லாக, வெறும் உணர்ச்சிப் பரிமாற்றத்திற்கான ஊடகமாகத்தான் அச்சொல் பயன்படுத்தப்பட்டது.''

''அப்புறம் உங்கள் நகைச்சுவைக் காட்சிகள் பற்றி. அந்த 'ஓடக்காரி' விஷயம் கொஞ்சம் ஓவர் இல்லையா? அது அனாவசியம் என்று உங்களுக்குப் படவில்லையா? தவிர, 'முதல்



மரியாதை'யை நீங்களே கிண்டல் பண்ணலாமா?''

''துக்க வீட்டில் மூன்று மணி நேரம் தொடர்ந்து அழுகிறவன் கூட, எழுந்து போய் ஒரு காப்பி சாப்பிட்டு விட்டு மீண்டும் வந்து அழுகிறான். எதற்கு? ஜஸ்ட் ரிலாக்ஸேஷன். நகைச்சுவைக் காட்சி என்பது அது மாதிரிதான். வெறும் கதையை நேரே சொல்லிப் போனால் போரடித்து விடும்.

''சாதாரணமாக என் படத்தில் இது மாதிரி தனி நகைச்சுவை டிராக் இருக்காது. இதில் வேண்டுமென்றேதான் செய்தேன். 'வல்கர்' என்று சொல்ல முடியாது. கொஞ்சம் 'ஓவர்' என்பதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால் 'முதல் மரியாதை'யை நானே கிண்டல் பண்ணுகிறேன் என்பதை ஒப்புக் கொள்ள முடியாது. ஓடக்காரி வந்தால் முதல் மரியாதையா? எனக்குத் தெரியாதா, என் படத்தின் நிறை குறைகள்? வேண்டுமென்றேதான் அப்படிப்பட்ட காட்சிகளைச் சேர்த்தேன் - அதிர்ச்சி மதிப்பு கருதி.''

''சில குறைகள் இருப்பினும் ஓர் வித்தியாசமான படம் என்கிற அளவில் சிறப்பாகவே செய்திருக்கிறீர்கள். பாக்ஸ் ஆஃபீஸ் வெற்றியாகவும் அமைய வாழ்த்துகிறோம். ஒருவேளை ஓடாவிட்டால் மீண்டும் இம்மாதிரி முயற்சி செய்வீர்களா?''

''என் உயிர்த் தோழனுக்குப் பிறகு படம் எடுக்காமலா போய் விட்டேன்? வேதம் புதிது ஓடவில்லை என்பதால் ஒதுங்கியா விட்டேன்? பரீட்சைகள் செய்து பார்ப்பது என் குணம். அதை மக்கள் ஏற்றுக் கொண்டால் ஓகே. இல்லையா - 'ஏற்றுக் கொள்வார்கள்' என்கிற நம்பிக்கையில் அடுத்த முயற்சி ஆரம்பிக்க வேண்டியதுதான்!''

''பெஸ்ட் ஆஃப் லக்!''

''தாங்க்யூ!''

சந்திப்பு : பா. ராகவன்
புகைப்படங்கள் : கோபிநாத்
மேலட்டை வண்ணப்படம் : யோகா

மடி மீது

20



அருகில் மணலில், சுர அலைகள் வந்து, தொட்டு, மெல்ல உருட்டி விடும் ஒரு பிணம். மேலே நிலா. மேகங்களின் அலைச்சல். ஜோ, ஜொர், ஜோ, ஜொர் என்று இடைவிடாது வந்து கரை மோதிய பெரிய, சிறிய அலைகளின் ஒலி. சவுக்குக் காட்டின் ஊடே புகுந்து புறப்பட்ட காற்றின் அமானுஷ்யமான ஜ…ஊஊஊஊம்.

சுசீதாவை பயத்தை விட, ரங்காவின் நடவடிக்கைதான் மறுபடி மறுபடி சக்தி நிறைந்த மின்னலாகத் தாக்கியது.

ரங்காவா? ரங்காவா கொலை செய்தான்?

ரங்காவேதான் கொன்றான். ஐயையோ. என்ன காரியம் செய்தான் அவன்!

காதலனா? இல்லை. கயவன். கள்வன். இவனைப் போயா காதலித்தேன்? இவனைப் போயா உத்தமன் என்று நம்பினேன்? இவனைப் போயா பொதுச் சேவைக்காரன் என்று ஏமாந்தேன்?

எவ்வளவு பெரிய தப்பு நடந்திருக்கிறது?

ஒரு பெண்ணால் ஆணை வெகு எளிதாக எடை போட்டு விட முடியும் என்று சொல்வார்களே! அதெல்லாம் சும்மாவா?

சூழ்நிலையின் தனிமை திடீரென்று அவளுக்குத் தெரிந்தது. ரங்காவைத் தொடர்ந்து வந்த போது மனத்தில் இருந்த ஒரு பூனை ஆர்வம் இப்போது சுத்தமாய் வடிந்து போய், காற்றும், கடலோரம், வானும், நிலவும் அவளை பயமுறுத்தின.

முதலில் அந்த இடத்திலிருந்து விலக வேண்டும். அந்த ஆளை-ச்சே- அந்த உடலை அப்படியே விட்டுப் போவதா? பாவம் இல்லையா? உயிரற்ற உடலை விட்டுப் போவதற்கு என்ன பாவமும் புண்ணியமும்?

அவளுக்கு, அளவுக்கு மீறிக் குழப்பமாக இருந்தது. பயமாக இருந்தது. அவளை ஆயிரம் கண்கள் சுற்றிலும் இருந்து பார்ப்பது போல் தோன்றியது.

திடீரென ஓடத் தொடங்கினாள். யாரோ துரத்தி வருகிற மாதிரி, அதற்குப் பயந்து ஓடுகிற மாதிரி ஓடினாள். கல் தெரியவில்லை. காலில் குத்திய சிறு முள் தெரியவில்லை. உறுத்திய சிறுமணல் துகள்கள் தெரியவில்லை. புடைவை ஏதோ ஒரு சவுக்குக் கிளையில் சிக்க, சுசீதா வீலென்று அலறியது சவுக்குத் தோப்பு, கடல், வான் வெளி என்று எல்லா இடங்களிலும் எதிரொலித்தது.

புடைவையை விடுவித்துக் கொள்வதற்குள்

சுபா



ஜப்திக்கு வந்த முதல்வரின் கார்!

திருவனந்தபுரத்தைச் சேர்ந்த கமலேஸ்வரன் என்ற காண்ட்ராக்டர், அரசுக் கல்லூரி ஒன்றிற்கு ஒரு கட்டடத்தைக் காண்ட்ராக்ட் அடிப்படையில் கட்டிக் கொடுத்தார். இது நடந்தது 1981 இல். இது வரை அவருக்கு அதற்கான பணம் (பலமுறை கேட்டும்) தரப்படாததால் கோர்ட்டுக்குப் போய் விட்டார். வழக்கை விசாரித்த நீதிபதி, அரசுக்குச் சொந்தமான கார்களை ஜப்தி செய்து, கமலேஸ்வர னுக்குச் சேர வேண்டிய ரூ. 4,44,061-ஐக் கொடுத்து விடும்படி உத்தரவிட்டு விட்டார்.

அப்படி ஜப்தி செய்த கார்களுள் ஒன்று முதலமைச்சர் கருணாகரனுடையது! அதிகாரிகள் அலறிக் கொண்டு, அவர் கையை, காலைப் பிடித்து ஜப்தியை நிறுத்தி, பின் ஒரே செக்கில் 'செட்டில்' பண்ணியிருக்கிறார்கள்!

முதல்வர் மானம் 'காரில்' பறந்திருக்க வேண்டியது! தப்பித்தார். - எஸ். எஸ். மணி

அவள் இதயம் ஆயிரம் முறை துடித்தது. ஒரு மாதிரி உத்வேகமாக அந்த சோகையான வெளிச்சத்தில் ஓடி வந்து பிரதான சாலையை அடைந்தாள். அவளுடைய இரு சக்கர வாகனம் ஓர் ஓரத்தில் அவள் விட்டு வந்த இடத்திலேயே நின்றிருந்தது. அந்த வண்டி அவளுடையது, அதை அவள்தான் செலுத்திக் கொண்டு வந்தாள் என்பதெல் லாம் சுகிதாவிற்குத் தோன்றவே இல்லை.

சாலைக்கு வந்து அவளது பார்வையின் இருபுறமும் நீண்ட கருப்பு ரிப்பனையும், கருப்பு ரிப்பனில் அங்கங்கே ஒளிர்ந்த ஜோடி ஜோடியான, வெண்மையான, சிவப்பான வெளிச்சப் பொட்டுக்களையும் பார்த்தபின் தான் அவளுக்கு இதுவரை முற்றுகை யிட்டிருந்த பயம் விலகின மாதிரி இருந்தது. சிலந்தியின் பிசின், பிசினான வலையைக் கிழித்துக் கொண்டு வந்த வண்ணத்துப் பூச்சி யாகத் தன்னை உணர்ந்தாள்.

அரக்ககாரின் கொண்டை விளக்குச் சுற்றுவது போல் அவள் தலை, உடல், முகம் எல்லாம் கிறுகிறுகிறுவென்று சுழல...

'சுரீய்ச்ச்ச்' என்று டயர் தேயும் சப்தத் துடன் அந்த பஸ் நின்றது. பஸ்ஸில் இருந்த வர்கள் அத்தனை பேரும் சபரிமலைக்குச் செல்ல மாலை அணிந்திருந்தார்கள். கல் லும் முள்ளும் காலுக்கு மெத்தை ஓய்ந்து போய் ஜன்னல்களின் ஃப்ரேம்களில் முகங் கள், முகங்கள்.

''அண்ணே, சின்னப் பொண் ணண்ணே!'' என்றான் க்ளீனர். அவன் மாலை அணிந்திருக்கவில்லை.

சுகிதா எழுந்தாள். விழித்தவுடன் கவா சத்தில் அவள் அனுமதியின்றி நுழைந்து கொண்டிருந்த ஃபினாயில் நெடி தெரிந்தது. ஆஸ்பத்திரி. நர்ஸ் அவள் எழுவது கண்டு முகம் மலர்ந்து, சிரித்து, ''எப்படி இருக்கே?'' என்று கருணை கலந்து கேட்ட தற்குக் காரணம் நர்ஸுக்கு நாற்பது வய திற்கு மேல் ஆகி விட்டதாக இருக்கலாம்.

''இது என்ன ஆஸ்பிடல்?''

''நர்ஸிங்ஹோம். அடையார்ல இருக்கு. நீ எப்படி அந்த எடத்தில தனியா மயக்கமாகிக் கெடந்தே? போலீஸ் கேஸ்னு ஒன்னை அட்மிட் பண்ண வேணாம்னு நெனைச்சோம். பஸ்ல ஒன்னைத் தூக்கிப் போட்டுக்கூட்டிட்டு வந்தவங்க அவசரமாப் போகணும்னு சொன்னாங்க. வெறும் மயக்கம்னு தோணினதால சரின்னு அட்மிட் பண்ணிட்டோம்.''

''நான் வீட்டுக்குப் போகணும்.''

''இப்ப மணி பத்து.''

''எங்கப்பாவை ஃபோன்ல கூப்பு டுங்க. நான் வீட்டுக்குப் போகணும்!''

''சுகிதா. என்ன ஆச்சிம்மா? ஏன் இப்படி மூஞ்செல்லாம் பேயடிச்ச மாதிரி வெளுத்திருக்கு?''

சுகிதா பதில் சொல்லாமல் காரில் இருந்து இறங்கினாள். வாசலில் கவலை முகத்துடன் நின்றிருந்த தங்கத்தை மதிக்கா மல் உள்ளே நுழைந்து, அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்தி, ஒரு வேகத்தில், ''ஹலோ, போலீஸ் ஸ்டேஷன்?''

ஜீப் பொடி மணலைத் தேய்த்துக் கொண்டு, 'சர்'என்று ப்ரேக் அடித்து நிற்ப தற்குள் பொறுமையற்ற, நேர்மையான காவல் ஆய்வாளர் என்று மக்களிடம் நல்ல பெயரை வாங்கியிருந்த இன்ஸ்பெக்டர் தேவசகாயம் ஜீப்பிலிருந்து கீழே குதித்தார். குதித்தவுடன் அவர் பார்வையில் சபரியின் வேன் தெரிந்தது.

''இந்த வேனை ஞாபகமிருக்காப்பா?''

''முன்ன ஒரு தடவை சந்தேகப்பட்டு ஃபாலோ பண்ணோம் சார்.''

''அன்னிக்குத் தப்பிச்சிக்கிட்டான். ஊவாமுள்ளு மாதிரி ஒரு ஓரத்தில குத்திக் கிட்டே இருந்ததுய்யா. எவ்வளவு சாமர்த் தியமா அன்னிக்குத் தப்பிச்சிப் போனான்? இன்னிக்கு மாட்டிக்கிட்டான். கெட்டிக் காரன் புளுகுக்கு மட்டும் ஆண்டவன் எட்டு நாளு டயம் வக்கலை. கொலைகாரன் புளு குக்குக் கூட அதே கதிதான்.* பாத்தியா? மாட்டிக்கிட்டான்.''

''ஆமா சார்.''

''மொதல்ல ஆள் இருக்கானா பாரு. தப்பிச்சிக்கிப்பிச்சிப் போயிருக்கப் போறான். நாம என்னவோ அதுக்குள்ளே பழமொழியெல்லாம் சொல்லி சந்தோஷப்

பட்டுக்கிட்டிருக்கோம்.''

''ஆமா சார்.''

''ஆமாவாவது. கோமாவாவது. தட்டுய்யா ஹோட்டல் கதவை. திறக்கலேன்னா ஒடைப்போம்.''

''சார்... சார்!''

''விருந்துக்காய்யா வந்திருக்கே? சார், மோரெல்லாம் சொல்லிக் கூப்புட? கதவைத் தட்டு. 'தந்தி வந்திருக்கு'ன்னு சொல்லு. எவனா இருந்தாலும் வருவான்.''

''சார் டெலிகிராம். தந்தி வந்திருக்கு சார்.''

ரங்கா தூக்கத்திலிருந்து விழித்து வெளியே வந்து கதவைத் திறந்து எதிரில் நின்றிருந்த காவல் துறை ஆசாமிகளைக் கண்டு திகைத்தான்.

''என்ன வேணும் உங்களுக்கு?''

''இங்க ரங்காங்கறது?'

''நான்தான்.''

''அப்ப நீங்கதான் வேணும். உங்களை நாங்க கைது செய்றோம்.''

''எதுக்கு?''

''விருந்து சாப்பிட்டதுக்கு. நடங்க சார். ஒண்ணுமே தெரியாத மாதிரி கேள்வி வேற. நீங்க கொலை செஞ்ச ஆளோட உடல் இப்ப ஆஸ்பத்திரி மார்ச்சுவரியில இருக்கு. வர்றீங்களா?''

மறுநாளும், அதற்கு மறுநாளும் கவிதா தன் அறையை விட்டு வெளியே வரவே இல்லை. அறையிலேயே அடைந்து கிடந்தாள். சாப்பிடுவதற்கு வெளியில் வரவில்லை. தங்கமும் அப்பாவும் மாறி மாறி அழைத்துப் பார்த்தார்கள்.

அவளுடைய திடீர் கோபத்திற்கும், திடீர் பாராமுகத்திற்கும் திடீர் உண்ணாவிரதத்திற்கும் காரணம் தெரியாமல் தவித்து, தங்கம்தான் சபரிக்கு ஃபோன் செய்து, ரங்காவின் கைது பற்றிய விஷயம் அறிந்து திகைத்துப் போனாள்.

காரணம் தெரிந்த பின் அவளால் கவிதாவை அழைக்கவும் மனது வரவில்லை.

ஜன்னல் வழியாக, கட்டிலில் கசங்கிய காகிதம் போல் கிடந்த கவிதாவைப் பார்த்துப் பார்த்து பெருமூச்சு விடுவதைத் தவிர அவளுக்கு வேறு வழி எதுவும் தெரியவில்லை.

அடுத்த நாள் விடிந்தும் விடியாததுமாக வீட்டு வாசலில் சபரியின் வேன் வந்து நின்றது.

பீடி டிரைவர் இன்றைக்கு பீடியைத் துறந்திருந்தார். நளராஜன் இரண்டு நாட்களாகக் குடியை மறந்திருந்தான். சபரியின் அத்தனைச் சிறுவர்களும், பாட்டிகளும் காட்டுக்குச் சென்ற ராமனைத் தேடி வந்த பிரஜைகளைப் போல இருந்தார்கள்.

தங்கத்தைப் பார்த்து விசாலிப் பாட்டி

தான் முதலில் கேட்டாள்.

''எங்க அந்தப் பொண்ணு?''

அதற்குள் சிறுவர்கள் ஜன்னல் வழியே கவிதாவைப் பார்த்து விட்டார்கள்.

''அக்கா... ரங்காவை இப்படி அநியாயமா போலீஸ்ல மாட்டி விட்டீங்களேக்கா!''

''அவரைப் போய் கொலைகாரர்னு சொல்லிட்டியேக்கா. நிச்சயமா ஏழு ஜென்மத்துக்கு ஒன்னை அந்தப் பாவம் சும்மா விடாதுக்கா.''

''ரங்கா அடிச்சாராம். எதிரில இருந்த ஆள் செத்துட்டானாம். அதனால ரங்கா கொலைகாரராம். ஏன்க்கா ரங்காவைப் பத்தி இப்படி அபாண்டமா பொய் சொல்றே.''

''யம்மாடி கவிதா. ஒனக்கு ரங்காவை இப்பத்தான் தெரியும். ஆள் வாட்ட சாட்டமா இருக்கானேன்னு நீ மயங்கிப் போய் அவனை ஆசைப்பட்டே. நீயா வந்து ஒன் ஆசையைச் சொன்னே. கல்யாணம் பண்ணிக்கச் சொன்னே. எங்க ரங்கா ஒங்கிட்ட தானா வந்து எப்பவாவது தப்பா ஒரு வார்த்தை சொன்னானா? நாங்க நிம்மதியா இருந்தோம். நீ வந்து அத்தனையும் கலைச்சிட்டே. ரங்காவை எனக்கு ஒன்னை விட நல்லாத் தெரியும். அவன் கொலைகாரன் இல்ல. கொலை செய்யற மனசு எங்க ரங்காவுக்குக் கெடையாது. இப்ப நீ உள்ள நொழைஞ்சிக்கிட்டு தனியா இருந்தா எல்லாம் சரியாப் போய்டுமா? எங்க கூட வா. ரங்காவை ஜாமீன்ல எடுக்கணும்னா நீதான் வரணும்னு வக்கீல் சொல்றாரு. அவனை ஜாமீன்ல எடுத்துக் குடு. அப்புறம் நீ எங்கயோ போ. எப்படியோ இரு. நாங்க ஒனக்கு எடைஞ்சல் பண்ணலே. நீ மறுபடியும் உள்ள நுழைஞ்சி குருவிக் கூட்டை இன்னொரு தடவை கலைக்காம இருந்தா அதுவே உனக்குக் கோடி புண்ணியம்.''

விசாலிப்பாட்டியின் ஒவ்வொரு வார்த்தையும் சவுக்கு நுனியால் கவிதாவைத் தொட்டது. அவள் சொன்னது அத்தனையும் உண்மைதான். அவளாகத்தான் ரங்காவைத் தேடிப் போனாள். காதலைத் தெரிவித்தாள். கல்யாணத்திற்கு நாள் குறிக்க ஏற்பாடுகள் செய்தாள். அவனைப் போலீஸில் பிடித்துக் கொடுத்தாள். குருவிக் கூட்டைக் கலைத்தாள். அந்த அதிகாரம் எல்லாம் அவளுக்கு யார் கொடுத்தது? ஊரில் எவ்வளவோ கொலைகள் எங்கெங்கோ நடக்கிறதே. எவ்வளவோ குற்றங்கள் நடக்கிறதே. எல்லாக் குற்றவாளிகளையும் அவளால் போலீஸில் ஒப்படைக்க முடியுமா? ரங்காவை மட்டும் எதனால்? ஒருவேளை ரங்கா நல்லவன்தானா? ஐயோ. இல்லையே. அவன் கொன்றதை என் கண்ணால் பார்த்தேனே. கொன்றானா? அடித்தான். ஜஸ்ட் அடித்தான். எதிரில் இருந்தவன் கீழே விழுந்து செத்தால் ரங்கா கொலைகாரன் என்று முடிவு பண்ணி, போலீஸில் பிடித்துக் கொடுத்து விடுவதா?

ரங்காவின் வேனைப் பின்தொடர்ந்து போனதால்தானே அத்தனை அவலங்களும்? நான் என் மூக்கை நீட்டாமல் இருந்திருக்கலாம். பின்னே அவன் ரங்கோலிப் பாட்டி செத்ததாக ஏன் பொய் சொன்னான்? உலகத்தில் ஒரு ரங்கோலிப் பாட்டிதானா? இன்னொரு பாட்டிக்கு ரங்கோலியே தெரியக்கூடாதா? அப்படியானால் ரங்கா கொல்லவில்லையா? கொலைகாரன் இல்லையா? இவ்வளவு பேர் திடமாக வந்து நிற்கிறார்களே. என்னை விட அவனை அறிந்தவர்கள், அவன் கொலைகாரன் இல்லை என்கிறார்களே.

நான் செய்ததுதான் தப்பா?

சில சமயங்களில் நமது முடிவு எதிர்ப்பைக் கிளப்பும். அப்போது நாம் விட்டுக் கொடுப்பதா, சமரசம் செய்து கொள்வதா, பிடிவாதம் பிடிப்பதா என்று தீர்மானிக்கப் புத்திக் கூர்மை தேவைப்படும். ஆனால் ஒரு முடிவு தவறானது, நடைமுறைக்கு ஒவ்வாதது என்று தெரிந்த பிறகும், திட மனது என்ற பெயரால் அதையே வலியுறுத்துவது அறிவீனம் ஆகும்.

கவிதா எழுந்தாள். கலைந்த கேசத்தை ஒழுங்குபடுத்திக் கொண்டாள். கதவு திறந்து வெளிப்பட்டாள்.

''எந்த போலீஸ் ஸ்டேஷனுக்கு நான் வரணும்?'' என்று கேட்டாள்.

''மிஸ்டர் ரங்கா? அவரை நாங்க நேத்தே ரிலீஸ் பண்ணிட்டோமே!'' என்றார் இன்ஸ்பெக்டர் தேவசகாயம். ''அவர் இன்னொஸன்ட். அப்பாவி. யாரோ ஒரு மூளையில்லாத பொண்ணு கம்ப்ளெயின்ட் பண்ணதைக் கேட்டு அவரைப் போய் அரெஸ்ட் பண்ணிட்டு வந்தது எங்க தப்பு. நீங்க திரும்பி உங்க சபரிக்குப் போய்ப் பாருங்க. அனேகமா அவர் இப்ப அங்கதான் இருப்பார்.''

கவிதா திகைத்துப் போனாள். மற்றவர்கள் சந்தோஷ வெறிக் கூச்சல் போட்டார்கள்.

(தொடரும்)

'' 'அன்புத்தம்பி, அன்புத்தம்பி'ன்னு மேடைக்கு மேடை நம்ம எம். எல். ஏவை அன்போட பேசினது தப்பாப் போச்சு!''

''ஏன், தலைவரே?''

''சொத்துல பங்கு கேட்டு நோட்டீஸ் அனுப்பிட்டாரு...!''

- நெல்லை சிவக



சக்கரவர்த்தித்

62. சம்பாதி

ராஜாஜி

கடற்கரை சேர்ந்ததும் வானரர்கள் சுற்றிப் பார்த்தார்கள். வசந்த காலம் ஆரம்பித்துவிட்டது என்பதைக் கண்டார்கள். அங்கதன் பேசலானான் :

''ஐயோ! காலவரை தாண்டிப் போயிற்று. சீதையைக் காணாமல், ஏதொரு துப்பும் அறிந்து கொள்ளாமல் கிஷ்கிந்தைக்குத் திரும்பினோமானால், அரசன் எனக்கு மரண தண்டனை விதிப்பான் என்பது நிச்சயம். என்மேல் சுக்ரீவனுக்கு அன்பு கிடையாது. ராமனுடைய ஆணைக்குப் பயந்தேதான் எனக்கு யுவராஜ்யப் பட்டம் தர சுக்ரீவன் ஒப்புக் கொண்டானேயொழிய என்மேல் சிற்றப்பனுக்கு அன்பு கிடையாது. அங்கே போய் உயிர் விடுவதை விட இங்கேயே பிராயோபவேசம் செய்து இறப்போம்'' என்றான் அங்கதன்.


அங்கதன் சொன்னதே சரி என்றார்கள் பல வானரர்கள்.

தாரன், ''அது சரியல்ல. நாம் ஏன் உயிர் நீத்து மாள வேண்டும்? தபஸ்வி சுயம்பிரபையினுடைய குகைக்குள் மறுபடியும் சென்று அங்கேயே சுகமாக உயிர் கழிப்போம். அவ்விடம் நமக்கு வேண்டியதெல்லாம் இருக்கிறது. அங்கே சுக்ரீவனாவது வேறு யாராவது பிரவேசிக்க முடியாது. நாம் சந்தோஷமாக ஆயுள் முழுதும் காலம் கழிக்கலாம்'' என்றான்.

ஹனுமானுக்கு இந்த யோசனை சரியென்று தோன்றவில்லை.

''இதுவென்ன தகாத பேச்சு பேசுகிறாய்? நம்முடைய குடும்பங்களைக் கிஷ்கிந்தையில் விட்டு விட்டுக் குகைக்குள் உண்டு குடித்துத் தூங்கி உயிருடன் வாழ்வதில் என்ன சந்தோஷம்? சுக்ரீவனுக்கு அங்கதன் பேரில் துவேஷமில்லை. சுக்ரீவன் மிக நல்லவன். நாம் அவனைக் கண்டு பயப்பட வேண்டியதில்லை. உண்மையில் சுக்ரீவனுக்கு நம் பேரில் கோபம் உண்டாகி நம்மைத் தண்டிக்க எண்ணம் கொண்டானானால் இந்தக் குகையில் நாம் எப்படி க்ஷேமமாக இருக்க முடியும்? லக்ஷ்மணனுடைய கோபத்தை அந்தக் குகை தாங்குமா? அதைப் பொடிப் பொடியாக்கி நிர்மூலம் செய்து விடுவான். ஆனபடியால் இந்த யோசனையில் நான் ஒன்றும் நன்மை காணவில்லை. நாம் திரும்பிப் போய் சுக்ரீவனிடம் உள்ளதைச் சொல்லி அவன் தயவைக்கேட்டு க்ஷேமம் அடையலாம்'' என்றான் ஹனுமான்.

''ஹனுமான் சொல்லுவது சரியல்ல'' என்றான் அங்கதன். ''சுக்ரீவனுக்கு என் பேரில் கொஞ்சமும் இரக்கம் கிடையாது. என்னை அவன் கொல்லுவது நிச்சயம். அவன் மகா குரூர சுபாவம் கொண்டவன். வாலியை எப்படிக் கொன்றான், யோசித்துப் பாருங்கள். நான் உயிருடன் இருப்பது அவனுக்குப் பிடிக்கவில்லை. எப்படியாவது ஏதோ காரணம் வைத்து என்னை ஒழிப்பதே அவன் எண்ணம். அவனும் அவனுடைய மக்கள்மாரும் வானர ராஜ்யத்தை அடைந்து இடையூறின்றி வைத்துக் கொண்டு ஆளுவதற்கு நான் ஒரு தடை என்றே அவன் எண்ணுவான். செய்த பிரதிக்ஞையை மறப்பதே அவன் சுபாவம். சீதையைத் தேடித் தருவேன் என்று ராமனுக்குச் சொல்லி விட்டு அந்த வாக்குறுதியை மறந்தவன் அல்லவா? பிறகு லக்ஷ்மணனுடைய வில்லுக்குப் பயந்தல்லவா எங்களை அனுப்பினான்? என் தாயோ, தன் பர்த்தாவை இழந்து துக்கப்பட்டும் கஷ்டப்பட்டும் சுக்ரீ



வனைக் கண்டு பயந்து அவனுடைய வசத்தில் அடங்கிப் போயிருக்கிறாள். என்மேல் தன் பிராணனை வைத்திருக்கிறாள். நான் இறந்தேன் என்று அவள் அறிந்தால் உயிரை நீப்பாள். எனக்காகத் தான் அவள் உயிரை வைத்திருக்கிறாள். ஐயோ, நான் என்ன செய்வேன்?''

மறுபடியும், ''கிஷ்கிந்தை திரும்பினாலும் என் மரணம் நிச்சயம். இங்கே உயிர் நீப்பதே மேல். பிராயோபவேசம் செய்து உயிர் நீப்பதே நலம்'' என்று தீர்மானமாகச் சொல்லித் தரையில் தருப்பைப் புல் முறைப்படி பரப்பி, தெய்வங்களையும் பெரியோர்களையும் வணங்கி விட்டு, உயிர் நீக்கும் சங்கற்பம் செய்து, கிழக்கு முகம் பார்த்து உட்கார்ந்தான்.

யுவராஜனான அங்கதன் இவ்வாறு பிராயோபவேச விரதம் பூண்டதும் மற்ற வானரர்கள் ''ஓ!'' என்று கதறி யழுது அவர்களும் அப்படியே உயிர் நீத்துவிட நிச்சயித்து, உபவாச சங்கற்பம் செய்து கிழக்கு நோக்கி உட்கார்ந்தார்கள்.

'இப்படி நம் கதியாயிற்றே' என்று உட்கார்ந்த வானரர் கூட்டத்தைக் கழுகரசனான சம்பாதி பக்கத்தில் ஒரு மலை மேலிருந்து பார்த்துக் கொண்டிருந்தான். இறகுகள் இழந்து பறக்க முடியாமல் வெகு காலம் பட்டினியாகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த சம்பாதி, 'இத்தனை வானரங்கள் ஒரே இடத்தில் இறந்துபோகப் போகின்றன. எனக்கு உணவு சுலபமாகக் கிடைத்து விட்டது' என்று எண்ணிச் சந்தோஷமடைந்தான்.

அதே சமயம் வானரர்கள் மரணத்தை எதிர்பார்த்துத் தங்கள் துக்கத்தை ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டிருந்தார்கள். ''தசரதன் இறந்துவிட்டதால் அல்லவோ ராமன் காட்டில் இருக்க வேண்டியதாயிற்று. ராமன் காட்டில் இருந்ததாலன்றோ சீதையை ராவணன் தூக்கிப் போனது. வீரனான ஜடாயு சீதைக்காக உயிர் நீத்தான். இன்னும் கொஞ்ச நேரம் ஜடாயுப் பறவைக்கு சக்தி இருந்து யுத்தத்தை நடத்தியிருந்தால் ராம லக்ஷ்மணர்கள் வந்து விட்டிருப்பார்கள். சீதையை மீட்டிருப்பார்கள். ஆனால் விதி இப்படியெல்லாம் செய்து விட்டது. முடிவில் நாம் மரணமடைய வேண்டியதாயிற்று.'' இப்படித் தங்களுடைய துக்கத்தை ஒருவரோடொருவர் பேசிக் கொண்டு பிரலாபித்துக் கொண்டிருந்தார்கள்.

இதைக் கேட்ட சம்பாதி, ''என்ன! என் அருமைத் தம்பி ஜடாயு இறந்தானா?'' என்று விஷயத்தைச் சரியாகத் தெரிந்து கொள்ள ஆசைப்பட்டான்.

சம்பாதி மிகக்கிழப் பறவை. கருடனும் அருணனும் அண்ணன் தம்பிகள். அருணனுக்கு இரண்டு குமாரர்கள். ஜடாயுவும் சம்பாதியும். சிறு வயதில் தாங்கள் பெற்ற அபார சக்தியை அனுபவித்துக் கொண்டு ஒரு நாள் ஆகாயத்தில் போட்டி போட்டுக் கொண்டு உயரக் கிளம்பினார்கள். சூரியனை நெருங்க நெருங்க, வர வர வெப்பம் அதிகரித்து ஜடாயுவைக் கொளுத்திவிடும் போலிருந்தது. சம்பாதி தன் சிறகுகளை விரித்து ஜடாயுவை, சூரியனுடைய நெருப்பின் வேகத்திலிருந்து காப்பாற்றினான். இதனால் ஜடாயு பிழைத்தான். ஆனால் சம்பாதியின் சிறகு எரிந்து போயிற்று. சம்பாதி பறக்க முடியாமல் கீழே மலைமேல் விழுந்தான். அது முதற்கொண்டு பறக்க முடியாமல் ஒரே இடத்தில் பசியினால் வாட்டப்பட்டான். ஆயினும் உயிரிழக்காமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தான்.

''அன்புக்குரிய என்

திருமகன்

தம்பி ஜடாயுவைப் பற்றித் துக்க சமாசாரம் யார் இங்கே பேசுவது? வானரங்களே! ஜடாயு இறந்தானா? சக்கரவர்த்தி தசரதனுடைய குமாரன் ராமன் ஏன் காட்டுக்குப் போனான்? எப்படி மனைவியை இழந்தான்? ஜடாயு ராவணனால் கொல்லப்பட்டானா? எனக்கு விவரம் சொல்லுங்கள்'' என்று வருந்திக் கூக்குரலிட்டான்.

வானரர்கள் பிராணனை நீப்பதற்கு உபாவசம் இருக்கவும், அந்த வானரப் பிணங்களைக் கஷ்டமில்லாமல் உணவாக அடைவேன் என்று சிறகு இழந்த கிழக்கழுகு ஆசைப்படவும் ஆரம்பித்த இந்த நிகழ்ச்சியானது முடிவில் வேறுவிதமாக வடிவம் எடுத்தது.

வானரர்கள் எழுந்து சம்பாதியை அணுகி மெதுவாக அந்தக் கிழப்பறவையைக் கீழே நடத்தி வந்தார்கள். பிறகு விஷயங்களை ஒருவருக்கு ஒருவர் சொல்லி அறிந்தார்கள்.

சம்பாதி தன் கதையைச் சொன்னான். அங்கதன் கிஷ்கிந்தை வரலாற்றைப் பூரணமாகச் சொல்லி எப்படி ராமனுக்கு உதவலாம் என்று கேட்டான். சம்பாதிக்குத் தன் கண்களின் தூர திருஷ்டிச் சக்தி குறையவில்லை. இலங்கையில் சீதை சிறையிலிருப்பதை, தான் அங்கிருந்து பார்க்க முடியும் என்றும், தான் காணும் காட்சியையெல்லாம் விவரமாகச் சொன்னான்.


இலங்கையைப் பற்றியும் ராவணனுடைய ஐசுவரியத்தைப் பற்றியும் ஜானகி ராக்ஷசிகளின் காவலிலிருப்பதைப் பற்றியும் எல்லாம் கண்டு சொன்னான்.

வானரர்களுக்கு உற்சாகம் உண்டாகி, ''சீதையைப் பற்றி அறிந்து விட்டோம். இனி நமக்குப் பிராண பயமில்லை. ராம காரியம் வெற்றி பெறும்'' என்று மகிழ்ச்சிப் பரவசமாகத் துள்ளிக் குதித்தாரகள்.

சம்பாதிக்கு ஏற்பட்ட கஷ்டமும் நீங்கிற்று. ''ராம காரியத்தில் நீ உதவுவாய். அப்படி உதவும் போது உன் சிறகுகள் மறுபடி முளைக்கும்'' என்று அவன் பெற்ற வரம் அப்போது உண்மையாயிற்று. பேச்சு நடக்கும் போதே இளஞ்சிறகுகள் உடலில் முளைக்க ஆரம்பித்து, சம்பாதி மிக அழகுடன் பிரகாசித்தான்.

சிறகுகளை மறுபடி அடைந்த சம்பாதி, ஜடாயுவுக்கு ஜலக்கிரியையும் சமுத்திரத்தில் செய்து திருப்தியடைந்தான்.

(தொடரும்)



ரஜினி, வை.கோ. பக்கம் சேர்ந்துவிட்டால்?

● பி. தண்டபாணி, நாக்பூர்.

? சேஷன் ஒரு மத்தாய் ஆவாரா?

! மாட்டார். ஓய்வு பெற்ற பிறகு புத்தகம் எழுதி பரபரப்பூட்டியவர் மத்தாய்; பணியில் இருக்கும்போதே பரபரப்பூட்டுகிறவர் சேஷன்.

● எம். ரேவதி, மன்னார்குடி.

? ஹீரோ கப் ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் நம்மவர் ஆட்டம் எப்படி?

! இறுதிப் போட்டியில் கபிலும் கும்ப்ளேயும் வெற்றியை அஸார் கையில் அள்ளிக் கொடுத்தது உண்மை. அதிலும் கும்ப்ளேயின் அந்த ஆறு விக்கெட் - அபாரம் போங்க. என்றாலும் ஒரு குறை. ஒவ்வொரு மாட்சிலும் ஏதோ ஓரிருவர் நன்றாக ஆடி, காப்பாற்ற வேண்டியிருக்கிறது. ஒட்டு மொத்த டீம் ஒர்க் அம்பேல்!

அபாரம் போங்க!





மாமேதை - மாமனிதர்

''தி.மு.க. தேன்கூடு''



மத்தாய் ஆவாரா?



● சூரிய நிலா, சேலம்.

? பஸ் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளதே?

! சமீபத்திய வேலை நிறுத்தத்தின்போதே 'அடுத்தது இதுதான்' என்று அனுமானிக்கப்பட்ட விஷயம்தான். எதிர்ப்பு இருக்கிறது என்றாலும் சேவை தரமானதாக இருந்தால் அது வலுவிழந்துவிடும். ஆனால் ஊழியர்களிடம் இந்த மனப்பான்மையை வளர்க்க நிர்வாகம் முயற்சி எடுப்பதாகத் தெரியவில்லையே!

● யோகஸ்ரீ ராஜ், பம்பாய்.

? தீபாவளிப் படங்களின் ஸ்கோர் போர்டு எப்படி?

! ஆல்-அவுட் ஆகும் தருவாயில்!

● அ. அப்துல் காதர், சி.பெ.கோயில்.

? மெட்ரோ தமிழ் நிகழ்ச்சிகள் நிறுத்தப்பட்டது குறித்து மகிழ்ச்சியா? வருத்தமா?

! பாடாவதி தமிழ் நிகழ்ச்சிகள் நிறுத்தப்பட்டதில் மகிழ்ச்சி; ஹிந்தி ஆக்கிரமிப்பு குறித்து வருத்தம்!

● சி.கொ.தி. முருகேசன், கோபி.


? ரஜினி மட்டும் வை.கோ. பக்கம் சேர்ந்துவிட்டால் வை.கோவுக்குப் பிரகாசமான எதிர்காலம் உண்டு என்று நினைக்கிறேன்; நீங்கள்...?

! அப்புறம் ரஜினியின் எதிர்காலம் என்னாவது என்ற கவலையில் மலைக்கிறேன்!

● த. குணசேகரன், கவுந்தப்பாடி.

? 'தி.மு.க., ஒரு தேன் கூடு' என்று கலைஞர் கூறியுள்ளது பற்றி...?

! தேன்கூடு சரிதான்; ஆனால் தேனீக்களுக்குத்தான் என்னமோ ஆகிவிட்டது. செங்கை - எம்.ஜி.ஆர். மாவட்ட திமுக தொண்டர்கள் 1100 பேர், 'ஜெ' முன்னிலையில், அ.தி.மு.க.வில் சேர்ந்திருக்கிறார்கள். தி.மு.க. தலைவர்களிடையே நடக்கும் குடுமிப்பிடி சண்டை தொண்டர்களுக்குப் பிடிக்கவில்லை, வருத்தமளிக்கிறது - நிதர்சனம்.



வை.கோ. பக்கம்...?

● எம். பிரபு, குமராட்சி.

? நீங்கள் வருந்துவது எதற்கு?

! ஜயண்ட் வீலில் சுற்றப் போய், அதன் பல் சக்கரம் உடைய, பத்து குழந்தைகள் பலி! விமான விபத்து, ரயில் விபத்து என்றால்,


● வியர்த்துக் கொட்ட.....


● அடுத்த கட்சி...?

□ ரூ 25 பரிசு பெறுபவர் :
எஸ். நாகராஜன்,
மேலப்பாதி,
தரங்கம்பாடி வட்டம்,
- 609 304.

''பராமரிப்பு போதாது'' என்று சாடு கிறோம்; இதற்கெல்லாம் யாரை, எப்படி நோவது? குழந்தைகளுக்காக உள்ளம் அழு கிறது.

● அ. ராணி, சென்னை - 75.

? ''கல்கி'' என்பதன் பொருள் என்ன?

! மிஸ். ராணி, நீங்க இளையதலைமுறை யைச் சேர்ந்தவர், அதனால்தான் தெரியலை! சரி, இன்னொரு தடவையும் சொல்கிறேன், கேளுங்க. தீமைகள் மலியும் போது தோன் றப் போகும் பத்தாவது அவதாரம் 'கல்கி'. சமூக அவலங்களைச் சாடப் பேனாவைப் பயன்படுத்திய எழுத்தாளர் ரா. கிருஷ்ண மூர்த்தி, அதைத் தமது புனைபெயராக்கிக் கொண்டார். சொந்தமாகப் பத்திரிகை ஆரம் பித்த போது அந்தப் புனைபெயரையே பத்திரிகைக்குச் சூட்டினார்.

● கே.ஆர். சுந்தரராஜன், கும்பகோணம்.

? திரையரங்குகளில் செய்திப் படம் காட்டும்போது கூச்சலிடும் ரசிகர்கள் பற்றி...?

! செய்திப் படங்கள் சுவாரஸ்யமாக எடுக்கப்படுவதில்லை என்பதற்கு நிரூப ணம். மத்திய அரசு தூர்தர்ஷனை மட்டு மல்ல, பிலிம் டிவிஷனையும் தனியார்வசம் ஒப்புவிப்பதுடன், பயனுள்ள விஷயங்கள் ரசமான விதத்தில் அவர்களால் எடுக்கப் பட ஒரு திட்டமும் வகுக்க வேண்டும். இதற்கேற்ப நிபந்தனைகள் விதிக்க வேண் டும்.

● எஸ். நாகராஜன், மேலப்பாதி. □

? ஒரு மாநிலத்தில் முதல்வர் - கவர்னர் உறவு சரியில்லை என்றால் அதனால் பாதிக் கப்படுவது யார்?

! சமீபத்தில் தலைமைச் செயலர். டீ.வி. வெங்கடராமனுக்கு 'குப்குப்'பென்று வியர்த்துக் கொட்ட, ஜெயலலிதாவுக்கு 'திக் திக்'கென்று நாடித் துடிப்பு அதிகரிக்க, நரசிம்மராவ் பரபரப்படைய, கன்னப்ப னுக்கு ரத்த அழுத்தம் அதிகரிக்க, ஜனாதி பதி சர்மா 'அச்சச்சோ' சொல்ல, நன்றாகத்தான் 'தண்ணி காட்டினார்' ஆளுனர்!

● ஸ்ரீ.ராஜசேகரன், வலங்கைமான்.

? பண்ருட்டி ராமச்சந்திரன் அடுத்து போகப் போவது எந்தக் கட்சிக்கு?

! 'சர்வாதிகாரத் தலைமை' என்று அவர் குற்றம் சாட்டுவதைப் பார்த்தால் காங்கிரஸ்"க்குத்தான் போக வேண்டும். அங்குதான் தலைக்குத் தலை நாட் டாண்மை!

● ஸ்ரீவஹிதா மேரி, மணக்காடு.

? யாரை நம்பவே கூடாது?

! இருவாளர் வதந்தியை. சமீபத்தில் சென் னையில் வலம் வரும் வதந்தி என்ன தெரி யுமா? நரசிம்மராவ் சார்பில் தர்ம பிரகாஷில் யாகம் நடந்ததே, அதற்குப் போட்டியாக, சிம்மவாஹினியாக ஜெ. அமர்ந்திருக்க, ஒரு யாகம் நடந்ததாம்! இதற்காக வண்டலூர் சிங்கம், மயிலை வந்ததாம்! - நம்பவே கூடாதுதானே!


● கே. பாரதி, மணலூர்பேட்டை

? டாடாவின் மரணம் உங்களை எப்படிப் பாதித்தது?

! நாடு ஒரு மாமனிதரை இழந்து விட்டது என்ற அளவில். 'டாடா பணம் பண்ணி னார்' என்பது சாமானிய சிந்தனை. அப்படிப் பணம் பண்ணியபோதே லட் சோபலட்சம் மக்களுக்கு வேலை வாய்ப் பளித்தார்; தேசப் பொருளாதாரம் உயரப் பாடுபட்டார் என்பது சீரிய சிந்தனை. அதிகாரத்தில் உள்ளவரை எதிர்க்கத் தொழி லதிபர்கள் சாதாரணமாக அஞ்சுவார்கள். டாடா அச்சமின்றி ஆட்சியை விமர்சித்தார். கிராமங்களைத் தத்து எடுத்து, மக்கள் வாழ்க்கைத்தரம் உயரப் பாடுபட்டார். இங்கு குடும்பக் கட்டுப்பாடு தோல்வியுறக் காரணம் கல்விக்கு முக்கியத்துவம் தராததே என்று ஆய்ந்தறிந்து சொன்னார். மாமேதை யான மாமனிதர் அவர்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.

வீட்டின் அழகு கதவில் தெரியும்!




விஞ்ஞான முறையில்
தயாரிக்கப்பட்ட

மாயூரம் டிம்பர்

கதவுகள்

அழகானவை, உறுதியானவை,
நீடித்து உழைப்பவை
காரணம்?



★ தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்தர மரம்

★ சரப்பதம் குறைக்கப்பட்டது.

★ ரசாயன கலவை பாதுகாப்பு

★ நேர்த்தியான இயந்திர வடிவமைப்பு

Made to order by:

MAYURAM TIMBER TRADING COMPANY

83, G.S.T. Road, Tambaram – 600 045. Ph: 465297

MAYAVARAM TIMBER DEPOT

No. 4, Post Office Road, Mayiladuthurai, Quaid-e-Milleth Dist.
Ph: 3216

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka